PRAY PREPARE PREACH

2 தீமோத்தேயு

நிருபத்தைக் கற்பித்தல்

2 தீமோத்தேயு நூலிற்கான பேசும் வரைகோடுகள்

...உலகமெங்குமுள்ள
வேதாகம ஆசிரியர்களுக்காக
எழுதப்பட்டுள்ளது

2 தீமோத்தேயு

நிருபத்தைக் கற்பித்தல்

2 தீமோத்தேயு நூலிற்கான பேசும் வரைகோடுகள்

பொருளடக்கம்

அ. விரைவு உதவி: 2 தீமோத்தேயு நிருபத்திலிருந்து பிரசங்கத்தைத் தயார் செய்வது எப்படி . . 4

ஆ. கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் எப்படி 5

இ. 2 தீமோத்தேயு நூலினைப் பற்றி. 19

ஈ. 2 தீமோத்தேயு நிருபத்தைக் கற்றலும் கற்பித்தலும் 23

உ. 2 தீமோத்தேயு நிருபத்திலிருந்து பாடங்கள் 137

Teaching 2 Timothy is published by The Good Book Company
© David Sprouse/The Good Book Company 2012

© 2018 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி
Tamil Translation © 2018 by Colombo Theological Seminary

சகல பதிப்புரிமையும் ஆக்கியோனுக்கே உரியது. ஆக்கியோனின் எழுத்து மூல அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரித்தெடுக்கப்படவோ, இலத்திரனியல் மூலங்களுக்கூடாகவோ பிரதி பண்ணப்படவோ கூடாது.

ISBN 978-955-3640-03-1

Colombo Theological Seminary, 189, Dutugemunu Street, Kohuwela
Sri Lanka
http://www.cts.lk

தயவு செய்து இதை முதலில் வாசிக்கவும்!

இன்னுமொரு PPP புத்தகத்தை வழங்குவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தத் தொடரின் முதல் நான்கு புத்தகங்களை எழுதிய பில் கிரவ்டருக்காக Phil Crowter நான் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். 2008ம் ஆண்டு கார்த்திகை மாதம் பில் மரித்தார். அவர் “நல்ல போராட்டத்தைப் போராடினார், ஓட்டத்தை முடித்தார், விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்” (2 தீமோத்தேயு 4:7). அவர் இப்பொழுது அவர் அன்பு கூர்ந்து, சேவை செய்த கர்த்தரிடத்தில் இருக்கின்றார்.

முதல் வெளிவந்த புத்தகங்களைவிட இந்தப்புத்தகம் வித்தியாசமானதாயிருப்பதை நீங்கள் பார்க்கலாம். ஆனால், நோக்கம் ஒன்றே. நாம், வேதாகமம் தெளிவாகப் போதிக்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றோம். மக்கள் இயேசுவிடம் திரும்ப வேண்டுமென்றும், அதேவேளை கிறிஸ்தவர்கள் இயேசுவின் சாயலாக வளர்ச்சியடைய வேண்டுமென்றும் நாம் விரும்புகின்றோம்.

வேதப்பகுதியைப் புரிந்து கொள்ளவும், ஒரு பிரசங்கத்தை அல்லது உரையைத் தயார் செய்யவும், வேதாகமத்தைப் போதிக்கவும் இந்தப் புத்தகத்தில் அதிகமான உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. “கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் எப்படி” என்ற பகுதியை தயவு செய்து வாசிக்கவும். அது மிகவும் முக்கியம்.

PPP என்றால் Pray, Prepare, Preach (ஜெபம் செய், தயார் செய், பிரசங்கம் செய்) என்பதைக் குறிக்கும்.

ஜெபிக்கவும்: நம்மால் மக்கள் இருதயங்களை மாற்றவியலாது. அதை தேவனால் மட்டுமே செய்ய முடியும். நம்மால் மக்களை விசுவாசிக்கப்பண்ணவியலாது. அதை தேவனால் மட்டுமே செய்யமுடியும். எனவே நாம் தயார் செய்வதற்கு முன்பதாக ஜெபம் செய்யவேண்டும். தேவன் உங்களுடன் பேசுவதைக் கேட்கவேண்டுமென்று ஜெபியுங்கள். நாம் பேசுவதற்கு முன்பும் ஜெபிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய சத்தியத்தைத் தெளிவாகப் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள். நாம் தேவனுடைய வார்த்தையைப் போதித்த பின்பும் ஜெபிக்க வேண்டும். உங்கள் செய்தியைக் கேட்டவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜெபியுங்கள்.

தயார் செய்யவும்: ஒரு வேதாகம பிரசங்கத்தைத் தயார் செய்வது கடினமான வேலையாகும். அதற்குப் பல மணிநேரம் எடுக்கும் இந்தப்புத்தகம் உங்களுக்கு உதவி செய்கின்றது. ஆனால் அது உங்களுக்கு எல்லா வேலையையும் செய்யாது! நீங்கள் வேதப்பகுதியை மெதுவாக வாசித்து, கவனமாக வசனங்களைப் வாசிக்க வேண்டும். உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்கள் பயனடையத்தக்கதாக அவர்களுக்கு எதைக் கூறவேண்டுமோ அதை நீங்கள் தயார் செய்ய வேண்டும்.

பிரசங்கிக்கவும்: நாம் தேவனுடைய வார்த்தையை போதிக்கும்போது தேவன் அற்புதமான விதங்களில் கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தை நம்முடைய வாழ்க்கையில் கனியை உருவாக்கும் விதையைப்போன்றிருக்கிறது. அது ஆவியின் கனியை உருவாக்குகின்றது. தேவனுடைய வார்த்தையை போதிப்பது மிகவும் மகிழ்ச்சிகரமானது. அவருடைய வார்த்தை அவருடைய பணியைச் செய்யும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார்.

இந்நூலினை உபயோகிக்க சிறந்தவழி இதுதான். “கற்பிப்பதும் பிரசங்கிப்பதும் எப்படி” பகுதியை வாசிக்கவும். அதன்பின் 2தீமோத்தேயுவை முதலில் இருந்து வாசிக்க ஆரம்பிக்கவும். ஒவ்வொரு பகுதியையும் முறையாகப் போதிக்கவும். அது ஒரு கடிதம். எனவே அதை முதலில் ஆரம்பித்து இறுதிவரை தொடர்ந்து வாசிக்கும்போது அது அதிக அர்த்தமுள்ளதாகின்றது!

“வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” 2 தீமோத்தேயு 3:16-17

டேவிட் ஸ்பரவுஸ்

அ. விரைவு உதவி

2 தீமோத்தேயு நிருபத்திலிருந்து ஒரு பிரசங்கத்தை தயார் செய்வது எப்படி

1. தேவனின் உதவிக்காக ஜெபிக்கவும்

2. வேதாகமப் பகுதியை பலமுறை வாசிக்கவும்.
வேதவசனங்களை கற்பதற்கான உதவிக்கு ≪ **பின்னணி** மற்றும் ⊗ **புரிந்துகொள்ளவும்** பகுதிகளை உபயோகிக்கவும்

3. வேதாகமப் பகுதியில் தேவன் நமக்குப் போதிக்கும் முக்கிய விடயத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்யவும்.
உதவிக்கு ⊕ **முக்கிய விடயத்தை கண்டு பிடிக்கவும்** பகுதியை உபயோகிக்கவும்.

4. உங்கள் வேதாகம பிரசங்கத்தைத் திட்டமிடவும்.
உங்கள் துணை குறிப்புக்களையும், எப்படி உங்கள் முக்கிய விடயத்தை விளக்கவும். உபயோகிக்கவும் வேண்டுமென்பதையும் தெரிவு செய்யுங்கள். **திட்டமிடவும்** பகுதியை உதவிக்கு உபயோகிக்கவும்.

5. உங்கள் பிரசங்கத்தை உங்கள் சொந்த மொழியில் தயார்படுத்திக் கொடுங்கள். முக்கிய விடயத்தை விட்டுவிடாதிருப்பதற்கு உதவியாக குறிப்புகளைத் தயார் செய்யவும்.
கற்பியுங்கள் பகுதியிலுள்ள எமது குறிப்புகளை உங்கள் உதவிக்கு உபயோகிக்கவும்.

6. நீங்கள் தயார் செய்ததை சரி பார்க்கவும்.

- **முக்கிய விடயம்** தெளிவாக இருக்கின்றதா?
- **வேதாகமம்** போதிப்பதை நீங்கள் அவர்களுக்குக் காண்பிக்கின்றீர்களா?
- உங்கள் மக்கள் புரிந்து கொள்ளவும்,மனதில் வைத்துக் கொள்ளவும் தக்கதாக **வார்த்தை உதாரணங்களை** உபயோகித்திருக்கின்றீர்களா?
- நீங்கள் மக்களுடன் **தொடர்பு கொள்ளும்** விதத்தில் இருக்கின்றீர்களா?
- என்ன **மாற்றம்** ஏற்படுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்?

7. உங்கள் வார்த்தைகள் மூலம் தேவன் பேச வேண்டுமென்று ஜெபிக்கவும். அவருடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜெபிக்கவும்.

மேலும் உதவிக்கு அடுத்த பகுதியை வாசிக்கவும்.

ஆ. கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் எப்படி?

வேதாகமத்தைக் கற்றுக்கொடுப்பது எப்படியென்பதை இந்தப்பக்கங்கள் விளக்குகின்றன. நீங்களொரு புதிய பிரசங்கத்தை தயார் செய்யும் ஒவ்வொரு முறையும் இதை வாசிப்பது உங்களுக்கு உதவியாயிருக்கும்.

2தீமோத்தேயு 2:15 இப்படிக் கூறுகிறது: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்துப்போதிக்கறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு".

இந்த வசனம் வேதாகமத்தைப் போதிப்பதைக் குறிக்கிறதாயிருக்கிறது. அநேக வேதாகம ஆசிரியர்களும், போதகர்களும் ஒரு செய்தியை தயார் செய்வதற்கு சில நிமிடங்களே செலவு செய்கிறார்கள். அது போதாது அதற்கு கடினமான உழைப்பு அவசியம். ஒரு சுவரை கட்டுபவரைக் குறித்து கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர் மிகவும் சோம்பேறியாயிருக்கிறார். எனவே அவர் அதை சரியாக கட்டவில்லை. அதனால் அந்த சுவர் இடிந்து விழுகிறது. இனிமேல் அந்த வேலையை அவருக்கு கொடுக்கமாட்டார்களல்லவா!

- வேதாகமத்தைக்கற்றுக்கொடுப்பதற்கு ஏன் கடின உழைப்பு முக்கியமாயிருக்கிறது?
- வேதாகமத்தை நாம் சரியாக விளக்காவிட்டால் என்ன நடக்கும்?

நாம் வேதாகமத்தை விவரித்து கூறாவிட்டால் தேவன் கவலைப்படுவார். மக்கள் பிரயோஜனமடையமாட்டார்கள்.

நாம் வேதாகமத்தைப் போதித்தால் மக்கள் நரகத்திலிருந்து மீட்கப்படுவார்கள். மக்கள் இயேசுவைப் பற்றிய அறிவில் வளர்ந்து அதிகமாக இயேசுவைப்போல மாறுவார்கள்.

ஒரு பிரசங்கத்தை, அல்லது பாடத்தைத் தயார் செய்ய உங்களால் முடிந்த அளவு நேரத்தை செலவு செய்யுங்கள். ஒரு நல்ல பிரசங்கத்தை தயாரிக்க ஒரு முழு நாளும் கூடச் செல்லலாம். ஜெபிக்க மறக்க வேண்டாம். ஜெபமே நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியமாகும். நீங்கள் தயாரிக்கும்போதும், பிரசங்கிக்கும் போதும், பிரசங்கத்தை முடித்த பின்பும் ஜெபியுங்கள்.

கற்றல், திட்டமிடல், கற்பித்தல்

ஒவ்வொரு வேதப்பகுதிக்கும் மூன்று பகுதிகள் இருக்கின்றன.

கற்றல் - வேதப்பகுதியை புரிந்துக்கொள்வது எப்படி?

திட்டமிடல் - வேதப்பகுதியிலிருந்து ஒரு செய்தியை தயாரிப்பது எப்படி?

கற்பித்தல் - வேதப்பகுதியிலிருந்து ஒரு செய்தியை கொடுப்பது எப்படி?

கற்றல்

ஜெபிக்கவும் → பின்னணி → வாசிக்கவும் → விளங்கிக்கொள்ளவும்
முக்கிய → விடயத்தைக்கண்டுபிடிக்கவும்.

திட்டமிடல்

முக்கிய விடயம் → உப விடயங்கள் → உதாரண விளக்கம் → பிரயோகித்தல்

கற்பிப்பதற்கு முன் எப்போதும் உங்கள் செய்தியை மறுபரிசீலனை செய்யுங்கள்.

கற்பித்தல்

ஆரம்பிக்கவும் → விளக்கவும் → உதாரணத்துடன் விளக்கவும் → பிரயோகிக்கவும் → முடிக்கவும் → ஜெபிக்கவும்.

கற்றல்

கற்றல் பகுதியில் நீங்கள் கீழ்க்காணும் தலைப்புகளைக் காண்பீர்கள்.

ஜெபிக்கவும் → பின்னணி → புரிந்துகொள்ளவும் → முக்கிய விடயத்தைக் கண்டுப்பிடிக்கவும்

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. நாம் வேதாகமத்தைப் போதிக்கும் போது மக்கள் தேவன் சொல்லுவதைக் கேட்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். அதற்கு நாம் அந்த வேதப்பகுதியின் **முக்கிய விடயத்தைக்** கண்டுப்பிடிக்க மிகக் கவனமாய் இருக்க வேண்டும் - ஏனென்றால் அதைத்தான் நாம் சொல்ல வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

நாம் **முக்கிய விடயத்தைக்** கண்டுக்கொள்ளும் போது நாம் என்ன சொல்ல வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரென்பதை அறிந்துகொள்ள முடியும். அதன் பின் உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கு அதை எப்படி உபயோகிப்பது என்பதைக்குறித்து சிந்திக்கலாம்.

எனவே எப்படி முக்கிய விடயத்தைக் கண்டுப்பிடிப்பது? இந்த காரியங்ளைச் செய்யுங்கள்:

1. ஜெபித்தல்

தேவனுடைய உதவிக்காக **ஜெபித்து** அதைத்தயார் செய்யும் போது தொடர்ந்து ஜெபியுங்கள். நாம் படிப்பதற்கும், நமது போதனை நல்ல பலன்களைக் கொடுப்பதற்கும் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி அவசியம்.

2. பின்னணி

வேதப்பகுதியின் **பின்னணியை** குறித்து சிந்திக்கவும்.

பின்னணி என்றால் என்ன? இதோ ஓர் உதாரண விளக்கம். இந்த விமானத்தின் முதல் படத்தை பாருங்கள் இந்த விமானம் எங்கேயிருக்கின்றதென்பதைக் குறித்து உங்களால் என்ன கூறமுடியும்?

இப்பொழுது இப்பக்கத்தில் உள்ள இரண்டாவது படத்தைப் பாருங்கள். இதுவம் அதே படமாகும் ஆனால் இப்போது அதன் **பின்னணியை** உங்களால் பார்க்க முடிகின்றது. இந்த விமானம் எங்கேயிருக்கின்றது என்பதைக்குறித்து உங்களால் என்ன கூற முடியும்?

இந்த விமானம் தரையிறங்கியிருக்கிறதென்பதை உங்களால் காணமுடியும். அது ஒரு கிராமத்தின் அருகில் தரையிறங்கியிருக்கின்றது. வானம் இருண்டிருக்கின்றது. எனவே விமானம் பறப்பதற்கு அது ஒரு ஆபத்தான நேரமாய் இருக்கின்றது. எனவே அது ஒரு முக்கிய பயணமாக இருக்க வேண்டும்.

நாம் ஒன்றைப் புரிந்துகொள்வதில் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது. எனவே நாம் வேதத்தைப் படிக்கும் போது அந்த பகுதியின் **பின்னணியை** நாம் பார்க்க வேண்டும்.

இது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது:

1. அந்த வேதப்பகுதி வேதாகமத்தில் எங்கு வருகிறது.

2. அந்த வேதப்பகுதி வேதாகமத்திலுள்ள புத்தகத்தில் எங்கே வருகிறது.

3. அந்த வேதப்பகுதிக்கு முன்னும்பின்னுமுள்ள அதிகாரங்களில் என்ன நடக்கின்றது.

நாம் இவைகளை அறிந்துகொள்ளும்போது நாம் வாசிக்கும் வேதப்பகுதியை நன்றாக புரிந்துகொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரசங்கமும் ஒரு சில வசனங்களிலிலிருந்தே தயாரிக்கப்படும். இந்த வசனங்கள் முழு அத்தியாயத்துடனும் முழு புத்தகத்துடனும், முழு வேதாகமத்துடனும் ஒத்திருக்கும். ஒரு வேதப்பகுதியானது, எவ்விதம் முன்னர் கூறப்பட்டவற்றின் மேல் கட்டப்படுகிறது என்பதை சிந்திக்கவும். உதாரணமாக நீங்கள் 2தீமோத்தேயுவைக் குறித்து கதைப்பதானால், அதன் பின்னணியைப் புரிந்துகொள்வற்கு நீங்கள் இந்த விடயங்களைக்குறித்து சிந்திக்க வேண்டும்:

முழு வேதாகமம்

- வேதாகமத்தில் எங்கே இந்த நிருபம் வருகிறது?

- அதுஇயேசு வருவதற்கு முன்பான பழைய ஏற்பாட்டிலா, அல்லது இயேசு வந்த பின்பான புதிய ஏற்பாட்டிலா இருக்கிறது?
- இந்த நிருபம் வரலாற்றின் எந்த கால வரிசையில் அமைகிறது? (வேதாகமம் உலகத்தின் உண்மையான கதையைக் கூறுகிறது)
- இந்த வேத பகுதி முழு வேதாகமத்திற்கும் பொருந்தும் என்பதை அறிய குறிப்புகளும், அடிக்குறிப்புகளும் நமக்கு உதவியாயிருக்கும்.

முழு நிருபம்

- பவுல் ஏன் தீமோத்தேயுவுக்கு எழுதினார்?
- தீமோத்தேயு எங்கிருந்தார்? அவருக்கு ஏன் உதவி தேவைப்பட்டது?
- தீமோத்தேயுவுக்கு அது எப்படியிருந்தது?

உங்கள் வேதாகமத்தின் அறிமுகப் பகுதியின் கீழ் வரும் பின்னணியைக் குறித்த விளக்கத்திலிருந்து நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும். “2 தீமோத்தேயுவைக்குறித்து” என்று எழுதப்பட்டிருக்கும் பகுதியில் இருந்து நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக தீமோத்தேயு எபேசுவில் இருப்பதை நீங்கள் அறியமுடியும். அங்கிருந்த சபையின் சில பிரச்சினைகளைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார்.

நீங்கள் பேசப்போகும் வேதப்பகுதிக்கு முன்பிருக்கும் பகுதி

- அது புத்தகத்தில் எங்கே இருக்கிறது?
- இந்த வேத பகுதிக்கு முன்புள்ள வேத பகுதியின் முக்கிய விடயம் என்ன?

உதாரணமாக, நீங்கள் 2 தீமோத்தேயு 2:1-7ஐ பிரசங்கித்தால், பவுல் 1ம் அதிகாரத்தில் என்ன கூறினார் என்பதை நீங்கள் அறிந்திருப்பது அவசியம். அப்போது பவுல் ஏன் தீமோத்தேயுவை “பலப்படு” (2:1) என்று கூறினார் என்பது புரியும்.

3. வாசிக்கவும்

வேதப்பகுதியை 3 **முறை** வாசிக்கவும். அதை மெதுவாகவும் கவனமாகவும் வாசிக்கவும். அதை சத்தமாக வாசிப்பது நல்லது. மூன்றாவது முறை அதை உங்கள் கண்களினாலும், காதுகளினாலும், கைகளினாலும் வாசிக்கவும். நீங்கள் அங்கே இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் எதைப்பார்ப்பீர்கள், கேட்பீர்கள், மணப்பீர்கள், உணர்வீர்கள்?

4. புரிந்துகொள்ளவும்

வேதப்பகுதியைபுரிந்துகொள்ள முயற்சிக்கவும். ஒரு பகுதியைப் போதிப்பதற்கு அது என்ன சொல்கின்றதென்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம்.

இந்த விமானத்தின் படத்தைக் கவனமாகப் பார்க்கவும். என்ன நடக்கிறது என்பதைக்குறித்து நாம் அறிந்துகொள்ளக்கூடியது என்ன?

அதேபோல், உண்மையாக வேதப்பகுதி என்ன சொல்கிறது என்பதை நாம் கவனமாய் பார்க்க வேண்டும்.

இப்போது மீண்டும் படத்தைப் பார்க்கவும். படம் நமக்கு எதைச் சொல்லவில்லை. உதாரணமாக அதில் உள்ள நோயாளி எந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறாரென்று நமக்குத் தெரியாது.

அதைப்போல் வேதப்பகுதி சொல்லாத ஒன்றை கற்பனை செய்து அல்லது யூகித்து சொல்லக்கூடாது.

ஒவ்வொரு வசனத்தையும் கவனமாக வாசித்து என்ன கூறுகிறதென்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இதில் வேதப்பகுதி எதைப்பற்றிப் பேசுகிறது என்பதை புரிந்துகொள்ள இது உதவியாயிருக்கும்.

கேட்க வேண்டிய சில கேள்விகள் இதோ:

யார்? *இந்த வேதப்பகுதியில் இருப்பது யார்?*

- ஒவ்வொருவரைக் குறித்தும் நீங்கள் அறிந்துகொள்வது என்ன?
- அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்பதைக் குறித்து என்ன அறிந்துகொண்டீர்கள்?
- தேவனைப்பற்றி இந்த வேதப்பகுதி சொல்வதென்ன?

என்ன? *அது எதைக் குறித்து கதைக்கிறது?*

- சில வார்த்தைகளோ, அல்லது எண்ணங்களோ மீண்டும் கூறப்பட்டுள்ளதா?
- உங்களால் புரிந்துகொள்ள முடியாதவைகள் இருக்கின்றதா?
- அப்படியானால் ஜெபித்து, முழுநிருபத்தையும் வாசித்து, இப்போது அது தெளிவாகிறதா என்று பார்க்கவும் இந்த புத்தகத்திலோ, அல்லது உங்கள் வேதாகமத்திலோ அதைக்குறித்து குறிப்புக்கள் காணப்படலாம். அவை உங்களுக்கு உதவியாயிருக்கும்.

ஏன்? ஏன் அது சொல்லப்பட்டிருக்கிறது?

- நிருபத்தை எழுதினவர் நிருபத்தை வாசிப்பவர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்? உதாரணமாக 2 தீமோத்தேயுவில் பவுல் தீமோத்தேயு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்?
- அது தேவனுடைய மக்களுக்கு என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தும்? 2 தீமோத்தேயு முதலில் எபேசு சபையில் வாசிக்கப்பட்டது.

5. முக்கிய விடயத்தைக் கண்டுப்பிடிக்கவும்

முக்கிய விடயத்தை கண்டுபிடிக்கவும். ஒரு வேதப்பகுதியில் தேவன் மிக முக்கியமாக எதைக்கூறுகிறார் என்பதே **முக்கிய விடயமாகும்.** இதை வேதப்பகுதியில் கண்டுப்பிடிப்பது மிக முக்கிய்மாகும். சில போத்கர்கள் வேதப்பகுதியை படிக்கும் முன்பதாகவே அதிலிருந்து அவர்கள் சொல்ல நினைக்கும் முக்கிய விடயத்தை தீர்மானித்து விடுகிறார்கள். ஒரு முறை ஒரு போதகர் பணம் கொடுப்பதைப்பற்றிக் கூறிய ஒரு செய்தியை நான் கேட்டேன். ஆனால் அவர் பிரசங்கித்த வேதப்பகுதியில் எங்கும் பணத்தைப்பற்றியோ, கொடுப்பதைப்பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர் **முக்கிய விடயத்தை** தவறவிட்டுவிட்டார்.

விமானத்தின் படத்தை மீண்டும் பார்க்கவும்.

இந்த படத்தைக்குறித்து நீங்கள் அநேக விஷயங்கள் கூறலாம். உதாரணமாக:

- அது ஒரு சிறிய விமானம்
- அந்த விமானத்துக்கு மூன்று சக்கரங்களும் ஒரு ஜன்னலும் இருக்கின்றன.
- அங்கே ஏழு பேர் இருக்கின்றார்கள்.

ஆயினும் இவைகளில் ஒன்றும் அங்கே முக்கியமாக நடக்கும் காரியத்தைக் குறித்து நமக்கு தெரியப்படுத்தவில்லை. இந்தப்படத்தின் பிரதான விடயம் ஒரு நோயாளி காப்பாற்றப்பட்டு மேலதிக கவனிப்புக்காக எடுத்துச் செல்லப்படுவதேயாகும்.

அநேக வேளைகளில் நமது பிரசங்கங்களும், செய்திகளும் இதைப்போன்றே இருக்கின்றன. அநேக உண்மையான காரியங்கள் அவைகளில் கூறப்பட்டாலும் முக்கிய விடயம் விடுபட்டிருக்கும். சில வேளைகளில் நாம் அந்த வேதப்பகுதியிலிருக்கும் எல்லாவற்றையும் குறித்து கூற விரும்புவோம். நாம் அநேக விடயங்களைக் கூறுவதால் அதில் **முக்கிய விடயம்** என்ன என்பதை ஒருவராலும் புரிந்துக்கொள்ள முடியாது.

கேட்கவேண்டிய மிக முக்கியமான கேள்வி: இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முக்கிய விடயம் என்ன?

உதாரணமாக நீங்கள் 2 தீமோத்தேயு 1:1-17 வசனங்களிலிருந்து பிரசங்கித்தால் ஒரு நல்ல பாட்டியாயிருப்பதைக்குறித்து, அல்லது கைகளை வைத்து ஜெபிப்பதைக்குறித்து கதைக்கலாம். ஆனால் அவை **முக்கிய விடயமல்ல.** அந்த வேத பகுதி தேவனுடைய அழைப்புக்கு விசுவாசமாயிருப்பதைக்குறித்து பேசுகிறது.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக புரிந்துகொள்ளுதல் என்னும் தலைப்பின் கீழ் நீங்கள் எழுதிய யாவற்றையும் வாசிக்கவும். அதில் கூறப்பட்டிருக்கும் முக்கிய விடயத்தைக் குறித்து சிந்திக்கவும். மீண்டும் கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள் மற்றும் கருப்பொருள் முதலியவற்றை தேடுங்கள். படத்தில் நோயாளி ஒருவரை மேலதிக வைத்திய உதவிக்காக விமானத்தில் ஏற்றுவதற்கே முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்த வேதப்பகுதியின் முக்கிய கவனம் எதில் செலுத்தப்பட்டிருக்கிறது?

இந்த வேதப்பகுதி எதைக்குறித்து கதைக்கிறது என்பதை ஒரு வசனத்தில் எழுதவும்.

உதாரணமாக நீங்கள் 2 தீமோத்தேயு 1ம் அதிகாரம் 1-7ல் இருந்து பிரசங்கித்தால் நீங்கள் இப்படியெழுதலாம்: உங்களுக்கு கர்த்தராகிய இயேசுவைப்பின்பற்ற கஷ்டமாகத் தோன்றும் போது தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அவருடைய வல்லமையையும் நினைவு கூருங்கள்.

உங்கள் **முக்கிய விடயத்தை** எழுதி விட்டு மீண்டும் வேதப்பகுதியை வாசிக்கவும். முக்கியமான எதையும் நீங்கள் விட்டுவிடவில்லை என்பதை உறுதி செய்துக்கொள்ளவும்.

திட்டமிடவும்

இந்தப்பகுதியில் நீங்கள் கீழ்காணும் தலைப்புகளை காண்பீர்கள்.

முக்கிய விடயம் → உப விடயங்கள் → உதாரணத்துடன் விளக்குதல் → பிரயோகித்தல் → மறுபரிசீலனை செய்தல்

இப்போது வேதப்பகுதியை நீங்கள் நன்றாக புரிந்துகொண்டீர்கள். உங்களுக்கு அதன் முக்கிய விடயமும் அதைக்குறித்த சில குறிப்புகளும் இருக்கின்றன. ஆனால் இது பிரசங்கமல்ல. நாம் பிரசங்கத்தை அல்லது செய்தியை தயாரிக்க வேண்டும்.

முக்கிய விடயத்தை தாளின் மேல் பகுதியில் எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியை திட்டமிட உதவியாயிருக்கும்.

அநேக போதகர்கள் தங்கள் செய்தியை திட்டமிடுவதில்லை.

சிலர் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் கூறுவார்கள். அது கேட்பவர்களை சலிப்படைய செய்து விடும். ஒரு விடயத்தை சுற்றியே கதைத்துக்கொண்டிருப்பது பிரயோஜனமற்றது. அது தரையிறங்காமல் ஆகாயத்திலேயே சுற்றி கொண்டிருக்கும் ஒரு விமானத்தைப்போன்றதாகும்.



சிலர் அநேக விடயங்களை கூறுவார்கள். ஆனால் அங்கே திட்டமாயிருக்காது. அதை விளங்கிக்கொள்ள கடினம். அது அநேக இடங்களுக்குச் சென்றாலும் நீங்கள் போகவேண்டிய இடத்திற்குச் செல்லாத ஒரு பேருந்தைப்போலிருக்கும்.

உங்கள் செய்தியை நல்ல விதமாக திட்டமிடுவதற்கு சிறந்த வழி இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு உபவிடயங்கள் அல்லது தலைப்புகளை ஏற்படுத்துவதாகும். அது உங்கள் செய்தியை விளங்கிக்கொள்ள எளிதாயிருக்கும். அது உங்களுக்கு விருப்பமான சூப்பை (Soup) (வடிசாறு) செய்ய உபயோகிக்கும் செய்முறையைப் போன்றதாகும். நீங்கள் ஒவ்வொன்றாக தேவையானவைகளை சேர்த்து ஒரு நல்ல ருசியான சூப்பை தயாராக்குவீர்கள். அது உங்கள் வயிற்றை நிரப்பி உங்களை திருப்தியாக்கும்.

1. உப விடயங்கள்

உப விடயங்கள் முக்கிய விடயத்தின் ஒரு பகுதியை விளக்குகின்றன.
உப விடயங்கள் வேதப்பகுதியின் ஒரு பகுதியை விவரிக்கின்றன.
உப விடயங்கள் சுருக்கமானதாக இருப்பதால் கேட்பவர்களுக்கு மனதில் பதிய வைத்துக்கொள்வது சுலபமாயிருக்கும்.

வேதப்பகுதியை எப்படி பிரிப்பது என்று சிந்திக்கவும்:

- ஒவ்வொரு உப விடயத்துடனும் எந்த வசனங்கள் ஒத்துப்போகின்றன?

- எல்லா வசனங்களும் உள்ளடங்குகின்றனவா?
- முக்கிய விடயத்தை கூடியமட்டும் தெளிவாக்குவதற்கு எப்படி உங்களால் உப விடயங்களை ஒன்றிலிருந்து ஒன்று தொடர்பு படுத்த முடியும்?
- உப விடயங்கள் சுருக்கமாகவும், நினைவில் வைத்துக்கொள்ளவும் எளிதாகவும் இருக்கின்றனவா?

உதாரணமாக 2 தீமோத்தேயு 1:1-7

இதன் முக்கிய விடயம்: உங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற கடினமாக தோன்றும்போது தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அவருடைய வல்லமையையும் நினைவு கூருங்கள்.

இதன் உப விடயங்கள் இப்படியாயிருக்கலாம்:

1. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவு கூருங்கள் (வச. 1-2).
2. தேவனுடைய மக்களை நினைவு கூருங்கள் (வச. 3-5).
3. தேவனின் வல்லமையை நினைவு கூருங்கள் (வச. 6-7).

எல்லா உப விடயங்களும்:

- நினைவு கூருங்கள் என்ற வார்த்தையைக் கொண்டிருக்கின்றன.
- சுருக்கமானவைகளாயிருக்கினறன.
- இரண்டு அல்லது மூன்று வசனங்களின் அர்த்தத்தைக் கூறுகின்றன.

2. உதாரணத்துடன் விளக்கவும் அல்லது ஒரு கதையை கூறவும்

ஒரு உதாரணம் உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் உங்கள் முக்கிய விடயங்களைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும்.

சில வேளைகளில் இவை வேதப்பகுதியிலுள்ளவைகளாய் இருக்கலாம். உதாரணமாக பவுல் அடிக்கடி ஒரு விளையாட்டு வீரரை உதாரணம் காட்டுவார். (2 தீமோத்தேயு 2:5, 4:7).

சில வேளைகளில் நீங்கள் உங்கள் சொந்த உதாரணங்களை உபயோகிக்க வேண்டும். உங்கள் உதாரணம் புரிந்துக்கொள்ள எளிதாயிருப்பதை உறுதி செய்துகொள்ளவும். உதாரணமாக நீங்கள் 2 தீமோத்தேயு 1:1-7ஐ பிரசங்கித்தால் அதன் முக்கிய விடயம் இதுவாய் இருக்கும்: உங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற கடினமாக தோன்றும்போது தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அவருடைய வல்லமையையும் நினைவு கூருங்கள்.

அதன் முக்கிய செய்தி “நினைவுகூருங்கள்” என்பதாயிருக்கும். எனவே உங்கள் முக்கிய உதாரணவிளக்கம் அல்லது கதை நினைவு கூருதல் எவ்வளவு முக்கியமானதென்பதை விளக்குவதாயிருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய ஒரு வேலையைக் குறித்து சிந்திக்கவும். அதை திறமையாக செய்து முடிக்க நீங்கள் எதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக நீங்கள் கிணற்றிலிருந்து

தண்ணீர்கொண்டுவர செல்லும்போது ஒரு வாளியை நினைவில் வைத்திருப்பது முக்கியமாகும். ஒரு வாளியைக் கொண்டு போக மறந்துபோனால் உங்கள் வேலையை முடிக்க உங்களால் முடியாது.

நீங்கள் ஒரு படத்தையோ அல்லது காட்சியையோ உபயோகிக்கலாம். நீங்கள் ஒரு படத்தை வரைந்தோ அல்லது சிறு நாடகத்தை நடித்தோ விளக்கலாம். எதுவாகிலும் முக்கிய விடயத்தை அது விளக்குவதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

3. பிரயோகிக்கவும்

நாம் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் போது தேவனுடைய வார்த்தை நம்முடன் பேசி செய்தியைக் கேட்பவர் யாவரையும் அது மாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும். எனவே நீங்கள் பேசும் மக்களுக்கு எப்படி முக்கிய விடயம் பொருந்தும் என்பதைக் குறித்து சிந்திக்க வேண்டும்.

நீங்கள் பேசப்போகும் வித்தியாசமான மக்களைக்குறித்து சிந்திக்கவும். முக்கிய விடயம் எப்படி இவர்களுடன் பேசும்:

- சிறு பிள்ளைகள்?
- புது விசுவாசிகள்?
- விசுவாசிகளல்லாதவர்கள?
- சபைத்தலைவர்கள்?

உங்கள் பேச்சைக்கேட்பவர்களுக்கு அதைக்கேட்டுக்கொண்டிருக்கும் போது மனதில் தோன்றக்கூடிய கேள்விகளைக்குறித்துச் சிந்திக்கவும்.

- நாளைக்கு இது எனக்கு எப்படி பொருந்தும்?
- இதை நான் எப்படி சபையில் செயல்படுத்துவது?
- என்னுடைய குடும்பத்தில் இதற்கு நான் எப்படி கீழப்படிவது?
- என்னுடைய கிராமத்தில் அல்லது சமுதாயத்தில் இதன்படி எப்படி நான் வாழ்வது?
- இயேசுவை உண்மையாய்ப் பின்பற்ற இது எனக்கு எப்படி உதவுகின்றது.
- எந்த ஆபத்துக்களைக் குறித்து நான் அறிந்திருக்க வேண்டும்?

ஒவ்வொரு உப விடயத்தின் பின்னும் செய்தியின் கடைசியிலும் நீங்கள் செய்தியை பிரயோகிக்கலாம். நீங்கள் செய்தியின் முடிவில் மட்டும் பிரயோகித்தால் சிலர் அதை கேட்காமலிருக்கக்கூடும்.

நீங்கள் இப்பொழுது உங்கள் பிரசங்கத்தை அல்லது செய்தியை எழுதி தயாரிக்கிறீர்கள்.

4. மறுபரிசீலனை செய்யவும்

போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் எழுதிய குறிப்புகளை மறுபரிசீலனை செய்வது அவசியம்.

நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்.

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- அந்த வேதப்பகுதியில் வேதாகமம் படிப்பிப்பதை நீங்கள் சரியாகக் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் அந்த பகுதியிலுள்ள வசனங்களை தெளிவாக விளக்குகின்றீர்களா?
- மக்கள் செய்தியை புரிந்துகொள்ளவும், அதை நினைவில் வைத்துக்கொள்ளவும் அவர்களுக்கு உதவுவதற்காக நல்ல உதாரணங்களைக்குறித்து சிந்திக்கிறீர்களா?
- மக்கள், நீங்கள் சொல்லுவதை புரிந்துகொள்ளக் கஷ்டப்படாமலிருக்கும் விதத்தில் உங்கள் பேச்சில் ஒரு தெளிவான ஓட்டம் காணப்படுகின்றதா?
- உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் வாழ்க்கையில் எதை மாற்றவேண்டுமென்று நீங்கள் தேவனிடம் கேட்கின்றீர்கள்?

முழுமையாக நீங்கள் எழுதிய ஒரு பிரசங்கத்தையா, அல்லது சிறு குறிப்புகளையா உபயோகித்து நீங்கள் பேசப்போகின்றீர்கள் என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

எப்போதும் உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு நன்றாகப் புரியும் மொழியையே பாவிக்க வேண்டும்.

கற்பித்தல்

கற்பித்தல் பகுதியில் நீங்கள் கீழ்காணும் தலைப்புகளைக் காண்பீர்கள்.

ஆரம்பிக்கவும் → விளக்கவும் → உதாரணத்துடன் விளக்கவும் → பிரயோகிக்கவும் → முடிக்கவும் → ஜெபிக்கவும்.

வேதப்பகுதியிலிருந்து ஒரு பிரசங்கத்தை எழுதுவதற்கு இந்த பகுதி உதவியாயிருக்கும். அது ஒரு முழு பிரசங்கமல்ல. நீங்களும் உங்கள் சொந்த முயற்சியை அத்துடன் சேர்க்க வேண்டும். ஆனால் அது உங்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்கும். நீங்கள் அந்தக் கருத்துக்களை எடுத்து சிறந்த விதத்தில் உபயோகிக்க வேண்டும்.

உங்கள் பிரசங்கம் **முக்கிய விடயத்தை** அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவும்.

1. ஆரம்பிக்கவும்

எப்படி உங்கள் பேச்சை தொடங்குவது என்பதைக் குறித்து கவனமாகச் சிந்திக்கவும். உங்கள் மக்களுக்கு முதலில் முக்கிய விடயத்தை கூறுவது நல்லது. அவர்கள் ஏன் செய்தியை கேட்க வேண்டுமென்பதையும், அந்த பகுதி எப்படி அவர்களுக்கு உதவியாயிருக்குமென்பதையும் கூறவும். நீங்கள் அவர்களிடம் கேள்விகள் கேட்டு, அதற்கான பதில்களை உங்கள் செய்தியின் மூலம் கொடுப்பதாகக் கூறலாம். அவர்கள் உங்கள் செய்தியைக் கேட்க அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவது அவசியம்.

உதாரணமாக 2 தீமோத்தேயு 1:1-7ன் முக்கிய விடயம் 'உங்களுக்குக் கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றக் கடினமாய்த் தோன்றும்போது தேவனுடைய வாக்குத்தத்தத்தையும், அவருடைய வல்லமையையும் நினைவு கூருங்கள்' என்பதாகும்.

நீங்கள் செய்தியைத் தொடங்கும்போது ஏன் நமக்கு இயேசுவைப் பின்பற்றுவது கடினமாய் தோன்றுகின்றது என்பதைக்குறித்து கதைக்கலாம். விசுவாசிகள் இயேசுவைப் பின்பற்றமுடியாமல் கஷ்டப்படுவதற்கான காரணங்களைக் குறித்தும் பேசலாம். இந்த வசனங்கள் அவர்களுக்கு இந்த விடயத்தில் உதவும் என்று நீங்கள் கூறினால் அவர்கள் உங்கள் பேச்சைக் கவனமாகக் கேட்பார்கள்.

2. விளக்கவும்

உப விடயங்கள் ஒரு உடலின் எலும்புகளைப் போன்றதாகும். அவை உங்களை நேராக நிற்கப்பண்ணுகின்றன. ஆனால் அது போதாது. உங்கள் உடலுக்கு சதையும் தேவை. எனவே எலும்புகளின் மேல் சதையைப் போடுவதற்கு நீங்கள் மக்களுக்கு வசனங்களை விளக்க நேரம் எடுத்துக் கொள்வது அவசியமாகும். வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். நீங்கள் அவர்களுக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருக்கும்போது, தொடர்ந்து வேத வசனங்களை வாசிப்பது நல்லது. நீங்கள் வாசிக்கும்போது, மக்கள் தங்கள் வேதாகமங்களில் அவைகளைப் பார்க்கும்படி கூற வேண்டும்.

இந்தப் புத்தகம் உங்களுக்கு சில யோசனைகளைக் கொடுக்கிறது. ஆனால், அத்துடன் நீங்கள் உங்கள் சொந்த எண்ணங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மக்களுக்கு என்ன தேவை என்பதையும், அவர்கள் வசனங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள எது உதவியாயிருக்கும் என்பதையும் குறித்து சிந்திக்கவும்.

நீங்கள் சொல்லுவது வேதாகமம் சொல்லுவதே என்பதை மக்கள் காண்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

3. உதாரணத்துடன் விளக்கவும்

திட்டமிடல் பகுதியில் நாம் ஒரு முக்கிய உதாரணத்தைக் குறித்து சிந்தித்தோம். நீங்கள் வேறு உதாரணங்களையும் குறித்து சிந்திக்கலாம். இயேசு உவமைகளைக் கூறுவதின் மூலம் இதைத்தான் செய்தார். இயேசு அடிக்கடி "பரலோக ராஜ்யம் ... ஒப்பாயிருக்கிறது" என்று கூறி ஒரு கதையைச் சொன்னார். இயேசு அநேக உதாரண விளக்கங்களைக்கூறினார். உதாரணமாக பிழையான போதகர்களை அவர் "ஆபத்தான ஓநாய்கள்" என்று குறிப்பிட்டார். பவுல் கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு ஓட்டப்பந்தயம் என்று குறிப்பிட்டார். இப்படியான உதாரணங்கள் சில வேளைகளில் ஒரு பெரிய கதையை விட சிறந்ததாயிருக்கும்.

4. பிரயோகிக்கவும்

திட்டமிடல் பகுதியில் எப்படி வேதப்பகுதியை பிரயோகிப்பது என்பதைக்குறித்து சிந்தித்தோம். உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு அவர்கள் சிந்திப்பதற்கு, அல்லது செய்வதற்கு எதையாவது கூறவும். நாம்

மக்கள் மாறவும், வளரவும் வேண்டுமென்று விரும்பவேண்டுமென்பதை மறக்கக் கூடாது. விசுவாசமில்லாத மக்களுக்கு ஏதாவது சொல்லவேண்டுமென்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவும். உங்கள் பேச்சை வித்தியாசமான மக்கள் கேட்கிறார்கள் என்பதை மறக்கக்கூடாது.

- விசுவாசத்தினால் நிறைந்த விசுவாசிகள்
- கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற கஷ்டப்படும் விசுவாசிகள்.
- கிறிஸ்தவர்களாக மாற விரும்பினாலும், அது எப்படியென்று தெரியாமல் இருக்கும் அவிசுவாசிகள்.
- இரட்சிப்பு தேவையில்லை என்று நினைக்கும் அவிசுவாசிகள்.

எல்லா மக்களுக்கும் தேவையான எதையாவது சொல்ல முயற்சி செய்யுங்கள். எல்லோரும் அவர்களுக்குத் தேவையானதை கேட்க வேண்டும்.

உதாரணமாக 2 தீமோத்தேயு 1:1-7ஐ பிரசங்கிக்கும் போது:

- விசுவாசத்தினால் நிறைந்திருக்கும் விசுவாசிகளுக்கு: தேவனின் வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்தி அவர்கள் தொடர்ந்து செல்ல யாருக்கு நீங்கள் உதவி செய்ய முடியும்.
- கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறக் கஷ்டப்படும் விசுவாசிகளுக்கு: தேவனின் வல்லமையை நினைவுகூருங்கள் அவரால் தொடர்ந்து செல்ல உங்களுக்கு உதவ முடியும்.
- கிறிஸ்தவர்களாக மாற விரும்பினாலும்,அது எப்படியென்று தெரியாமல் இருக்கும் அவிசுவாசிகளுக்கு: விசுவாசிக்கும் எல்லா மக்களுக்கும் தேவன் நித்திய ஜீவனை வாக்களித்திருக்கிறார். இன்றே இயேசுவை விசுவாசியுங்கள்.
- இரட்சிப்பு தேவையில்லை என்று நினைக்கும் அவிசுவாசிகளுக்கு: விசுவாசிக்கும் எல்லா மக்களுக்கும் தேவன் நித்திய ஜீவனை வாக்களித்திருக்கிறார். விசுவாசிக்க மறுக்கும் எல்லோரையும் தேவன் தண்டிப்பார்.

நீங்கள் வேதப்பகுதியை எப்படி பிரயோகிக்கின்றீர்கள், அல்லது உபயோகிக்கின்றீர்கள் என்பது அந்த வேதப்பகுதி முதலில் வாசித்தவர்களுக்கு எப்படி பிரயோகிக்கப்பட்டதோ அதன் அடிப்படையிலேயே அமைய வேண்டும். உதாரணமாக 2 தீமோத்தேயு 1:1-7ஐ எடுத்துக்கொண்டால்:

- தீமோத்தேயுவுக்கு தேவனுக்கு ஊழியம் செய்வது கடினமாய்த் தோன்றுகின்றது. உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு இயேசுவுக்கு உண்மையாயும், விசுவாசமாயும் இருப்பதை கடினமாக்குவது என்ன?
- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் விசுவாசமுள்ள ஓர் போதகராய் இருப்பதைக் கடினமாக்குவது என்ன?
- பவுல், தீமோத்தேயுவை எதை நினைவுகூரும்படி கூறுகிறார்? நாமும் அதைத்தான் நினைவுகூர வேண்டும்.

5. நிறைவு செய்யவும்

உங்கள் பேச்சை அல்லது பிரசங்கத்தை எப்படி முடிப்பது என்று சிந்திக்கவும். வேத பகுதியின் முக்கிய விடயத்தை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு நினைவுபடுத்தி, அதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள அவர்களுக்கு உதவி செய்யவும்.

சில வேளைகளில் உங்கள் பிரசங்கத்தின் பின்பு அதைக்குறித்து சிந்திக்க அதைக் கேட்பவர்களுக்கு சற்று நேரத்தை ஒதுக்கவும். அதன்பின் கூட்டத்தைத் தொடரலாம்.

6. ஜெபிக்கவும்

ஜெபியுங்கள், தொடர்ந்து ஜெபியுங்கள்!

- தேவன் உங்களை முதலில் மாற்றவேண்டுமென்று ஜெபியுங்கள்.
- தேவன் உங்கள் வார்த்தைகளை உபயோகித்து மக்களுடன் பேச வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- தேவனுடைய சத்தியம் மக்களை மாற்றவேண்டுமென்று ஜெபியுங்கள்.

இ. 2 தீமோத்தேயு நூலினைப் பற்றி

இறுதி வார்த்தைகள்

“இறுதி வார்த்தைகள்” எப்போதுமே மிக விசேடமானவை. ஒருவர் மரிப்பதற்கு முன் அல்லது வேறொரு இடத்திற்கு நம்மை விட்டுச்செல்வதற்கு முன் கடைசியாக நம்மிடம் கூறுவதை நாம் மிகவும் கவனமாகக் கேட்போம். பவுல் எழுதிய வேதாகமத்திலுள்ள இறுதிக் கடிதம் 2 தீமோத்தேயுவாகும். பவுல் தன் வாழ்க்கை இறுதி நிலையடைந்திருப்பதை அறிந்திருந்தார். அவர் தன்னுடைய நல்ல நண்பனான தீமோத்தேயுவுக்கு உதவும் பொருட்டு இந்த நிருபத்தை எழுதுகிறார். அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மிக முக்கியமான பணியைத் தொடர்ந்து செய்யும்படி பவுல் தீமோத்தேயுவை ஊக்குவிக்கிறார்.

தீமோத்தேயு யார்?

கிறிஸ்து பிறந்து 50 ஆண்டுகளுக்குப் பின் (அப்போஸ்தலர் 16:1-3), பவுலின் சபை ஸ்தாபிக்கும் குழுவுடன் தீமோத்தேயு லிஸ்திராவிலுள்ள தன்னுடைய சபையிலிருந்து சுமார் கி.பி. 50ல் சேர்ந்து கொண்டார். தீமோத்தேயுவின் தாயும், பாட்டியும் அதற்கு முன்பே கிறிஸ்தவர்களாக மாறியிருந்தார்கள். எனவே அவருக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்திருந்தார்கள் (2தீமோத்தேயு 1:5, 3:15). பவுல் ஒருமுறை லிஸ்திராவுக்குச் சென்றபோது தீமோத்தேயு கிறிஸ்தவனாக மாறினார். அவர் பவுலுடன் அநேக வருடங்கள் பல இடங்களுக்கு பிரயாணம் செய்து தேவனுக்குச் சேவை செய்தார். அதன்பின் அவர் ஒரு நம்பகமான சபைத்தலைவராக மாறினார்.

தீமோத்தேயு எங்கே இருந்தார்?

பவுல் தீமோத்தேயுவுக்கு இரண்டு நிருபங்கள் எழுதினார். 1 தீமோத்தேயுவில் அவர் எபேசுவில் இருக்கிறார். எபேசு சபையில் காணப்பட்ட சில பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக பவுல் அவரை அங்கே அனுப்பினார் (1தீமோத்தேயு1:3-4). 2தீமோத்தேயுவின்படி அவர் இன்னும் எபேசுவிலேயே இருக்கின்றார். அவருக்கு அங்கேயிருப்பது கடினமாய் இருக்கின்றது. சில தலைவர்கள் தவறானவற்றைப் போதிக்கிறார்கள். அத்துடன் ரோம அதிகாரிகளும், தியானாளின் ஆலயத் தலைவர்களும் சபையை தாக்கியிருந்தார்கள் (அப்போஸ்தலர் 19).

மற்றெல்லா சபைகளையும் விட எபேசு சபையைக்குறித்து நாம் அதிகமாக புதிய ஏற்பாட்டிலிருந்து அறிகிறோம்.

- பவுல் அங்கு பிரசங்கித்தபோது (சுமார் கி.பி. 52ல்) எபேசு சபை ஆரம்பிக்கப்பட்டதாக அப்போஸ்தலர் 19 நமக்குக் கூறுகின்றது.
- எபேசியருக்கு எழுதின நிருபம் பவுலினால் எபேசுவிலுள்ள சபைக்கு எழுதப்பட்ட நிருபமாகும் (கி.பி. 60ல்).
- 1 மற்றும் 2 தீமோத்தேயு பவுல் எபேசுவிலுள்ள சபையில் சேவை செய்த தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபங்களாகும். (கி.பி.62-63)

- வெளிப்படுத்தின விசேஷம் 2:1-7 இயேசு கிறிஸ்துவினால் எபேசு சபைக்கு யோவானிடம் கொடுக்கப்பட்ட கடிதமாகும் (கி.பி.80-90).

பவுல் ஏன் தீமோத்தேயுவுக்கு எழுதினார்?

சபையில் இருந்த பிரச்சினைகள் தீமோத்தேயுவை மிகவும் கவலையடையவும், பெலவீனமடையவும் செய்தன. அவருக்கு அந்த இடத்தை விட்டுவிட்டு ஓடிப்போய்விட வேண்டுமென்று தோன்றியது. பவுல் அவருடைய விசுவாசத்தினிமித்தம் ரோமாபுரியில் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். அவர் தீமோத்தேயுவுக்கு தொடர்ந்து சேவை செய்யும்படி ஊக்குவித்து எழுதுகிறார். அவர் கடினமான நாட்களை எதிர்பார்க்கும்படி எச்சரிக்கிறார். சபையிலுள்ள பிரச்சினைகளைக் குறித்து என்ன செய்ய வேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுவதற்காக எழுதுகின்றார்.

நமக்கு இன்று 2 தீமோத்தேயுவின் செய்தி என்ன?

மிகவும் கடினமான சூழ்நிலைகளுக்கூடாகவும் கடந்து செல்ல 2 தீமோத்தேயு கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கின்றது. இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கும் மக்களே கிறிஸ்தவர்களாகும். நாம் நமது பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது கிறிஸ்தவர்களாக மாறுகிறோம். இயேசு நம்மை இரட்சிக்கவும், நம்மை மாற்றவும் நாம் அவரை விசுவாசிக்கிறோம். சபைக்குப் போவதாலோ அல்லது நல்லவராய் ஜீவிக்க முயற்சிப்பதாலோ ஒருவரும் கிறிஸ்தவனாகுவதில்லை. கிறிஸ்தவர்கள் இயேசுவை விசுவாசிப்பார்கள். கிறிஸ்தவர்கள் அவரை ஒவ்வொரு நாளும் பின்பற்றுபவர்கள். சில வேளைகளில் இது கடினமாகத் தோன்றும். 2தீமோத்தேயு விசுவாசிகளை ஊக்குவிக்கிறது. அது நமக்கு சரியான வழி எது என்பதையும் நாம் எப்படி விசுவாசமான வழியில் தொடர்ந்து செல்ல முடியுமென்பதையும் காட்டுகிறது. நாம் ஒருவருக்கொருவர் எப்படி உதவி செய்வதென்பதை அது விசுவாசிகளுக்கு காட்டுகிறது.

2 தீமோத்தேயு, அனைத்து கிறிஸ்தவர்களுக்குமான நிருபமாகும். ஆனால் அது முக்கியமாக போதகர்களுக்கும் சபைத் தலைவர்களுக்கும் அதிக பிரயோஜனமானது. ஒரு சபைப் போதகராய் இருப்பது மிகவும் கடினம். தீமோத்தேயு நீண்ட காலமாக ஒரு சபைப் போதகராய் இருந்தாலும், அவர் சபையை சரியான வழியில் நடத்திச்செல்லுவதற்கு அவருக்கு உதவி தேவையாயிருந்தது.

2 தீமோத்தேயுவிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள்

தேவனுடைய வார்த்தையிலிருந்து பாடங்களை நமது வாழ்க்கைக்குள் எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியம். அது உங்கள் மக்கள் சிறு குழுக்களாக பாடங்களை விவாதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் அவர்களுக்கு உதவியாயிக்கும்.

இந்த புத்தகத்தின் இறுதியில் சில கேள்விகள் இருக்கின்றன. அவைகளை நீங்கள் பயன்படுத்தலாம். நீங்கள் 2 தீமோத்தேயுவைக் குறித்த சகல கலந்துரையாடல்களையும் நிறைவு செய்தபின் அவைகளை உபயோகிக்கலாம். அல்லது ஒவ்வொரு அதிகாரத்தின் பின்னும் நீங்கள் விரும்பினால் உபயோகிக்கலாம். அவைகளை நீங்கள் ஒரு பெண்கள் குழு, அல்லது ஆண்கள் குழு முதலியவற்றில் உபயோகிக்கலாம்.

வரைகோடு

1:1-7: அறிமுகம் - தேவன் அவருடைய வார்த்தையை போதிப்பதற்கு உங்களை அழைத்திருக்கிறார்!

1:8-18: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையைக் காத்துக்கொள்ளுங்கள்.

2:1-26: துன்பம் அனுவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொடுங்கள்.

3:1-17: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வாத்தையின்படி வாழுங்கள்.

4:1-22: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கியுங்கள்.

2 தீமோத்தேயு

நிருபத்தைக் கற்பித்தல்

ஈ. 2 தீமோத்தேயு நூலினைக் கற்றலும் கற்பித்தலும்

1 நினைவு கூரவும்

பின்னணி

முழு நிருபத்தையும் வாசிக்கவும்.

இவைகளைப்பற்றி நீங்கள் கற்றுக்கொள்வதென்ன:

- பவுல் எங்கேயிருக்கிறார்?
- பவுல் ஏன் இதை எழுதுகிறார்?
- தீமோத்தேயுவுக்குத் தேவையானது என்ன?

பவுல் அவருடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் நிமித்தம் ரோமாபுரியிலே சிறையில் இருக்கிறார். அவர் எந்த வேளையிலும் கொல்லப்படலாம் என்பதை அவர் அறிவார். விசுவாசிகள் கடினமான துன்புறுத்தலை எதிர்கொள்கிறார்கள். எபேசிய சபையில் தீமோத்தேயுவுக்கு சில காரியங்களைச் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. அது தீமோத்தேயுவுக்குக் கடினமாய் இருக்கிறது. எனவே பவுல் தீமோத்தேயு தொடர்ந்து ஊழியத்தை அங்கே செய்யவேண்டுமென்று அவரை ஊக்குவிப்பதற்காக இதை எழுதுகிறார்.

வாசிக்கவும்

வசனங்கள் 1~7ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

நிருபங்கள் வழக்கமாக யார், யாருக்கு எழுதுகிறார் என்ற குறிப்புகளுடன் ஆரம்பிக்கும்.

வசனங்கள் 1~2 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- பவுல் அவரைக் குறித்து என்ன கூறுகிறார்? (வசனம் 1)

அப்போஸ்தலர் 9ம் அதிகாரத்தையும், 1 தீமோத்தேயு 1:12~14 ஐயும் வாசிக்கவும்.

- பவுல் எப்படி இயேசுவைப் பின்பற்றுகிறவராகவும், ஒரு அப்போஸ்தலராகவும் மாறினார் என்பதை உங்களுக்கு நினைவு படுத்திக் கொள்ளவும்.
- ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தம் என்ன? (வசனம்1). இயேசுவின் மூலம் தேவன் விசுவாசிகளுக்கு வாக்களிப்பதென்ன?

'தேவனுடைய சித்தத்தினாலே' (வசனம்1) என்பது தேவன் செயல்படுத்தும் ஒரு திட்டத்தைக் குறிக்கிறது. இயேசுவின் மூலம் கிடைக்கும் நித்திய ஜீவனைக் குறித்துப் போதிப்பதே தேவன் பவுலுக்கு

வைத்திருந்த திட்டமாகும்.

- 2வது வசனத்தில் பவுல் தீமோத்தேயுவைக்குறித்து என்ன கூறுகிறார்?
- தீமோத்தேயுவுக்குக் கொடுக்கும்படி பவுல் தேவனிடம் கேட்பது என்ன?

பவுலுக்கு தீமோத்தேயு ஒரு விசுவாசத்தின் மகனாகும். பவுல் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறுவதைக் கேட்டுத்தான் அநேகமாக தீமோத்தேயு ஒரு கிறிஸ்தவராக மாறியிருக்க வேண்டும்.

நமக்கு எப்போதும் தேவனிடமிருந்து தேவைப்படுவது கிருபை, இரக்கம், சமாதானம் என்பவைகளேயாகும். கிருபை என்பது நமக்கு நியாயமாய் கிடைக்கவேண்டிய தண்டனைக்குப் பதிலாக தேவன் நம்மேல் காட்டும் பெரிய அன்பாகும். இரக்கம் என்பது உதவியற்றவர்களுக்கு தேவன் வழங்கும் உதவியாகும். தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை உணருவது - சமாதானத்தைத் தருகின்றது. நாம் கிறிஸ்தவர்களாக மாறும்போது நமக்கு தேவனுடன் சமாதானம் கிடைக்கிறது - அது தேவனுடைய இலவச ஈவும், இரக்கமுமாகும்.

மீண்டும் 3~5 வசனங்களை வாசிக்கவும்.

- பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்துவது என்ன?
- பவுல் குறிப்பிடும் இரண்டு பேர்களைக் குறித்த உண்மை என்ன?

விசுவாசத்துடன் தேவனுக்கு சேவை செய்த பல மக்களைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்துகிறார்: பவுல், அவருடைய மூதாதையர், தீமோத்தேயுவின் தாய், பாட்டி ஆகியோர்.

- தீமோத்தேயுவுக்கு தேவனுக்கு சேவை செய்வது மிகவும் கடினமாயிருந்ததால் அவர் கண்ணீர் விட்டு அழுகிறார் (வசனம் 3). அது ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

மீண்டும் வசனங்கள் 6~7ஐ வாசிக்கவும்.

- என்ன செய்யும்படி பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார்? (வசனம் 6~7)
- எத்தனைமுறை பவுல் 'நினைவில் வைத்துக்கொள்ளுதல்' அல்லது 'நினைவுகூருதல்' முதலியவற்றைக் குறிக்கும் வார்த்தைகளை உபயோகிக்கிறார்?

வசனம் 6: 'தேவ வரம், கரங்களை வைத்தல்'. இது தீமோத்தேயு, சபையின் ஒரு தலைவராக நியமிக்கப்பட்ட நாளில் நடந்தது. அன்று பரிசுத்த ஆவியின் வல்லமை அவருக்குக் கிடைத்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவன் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது பரிசுத்த ஆவியைப் பெறுகின்றான். பரிசுத்த ஆவியானவர் புதிய ஜீவனைக் கொடுக்கிறார். அத்துடன் தேவனுக்கு சேவை செய்ய நமக்குத் தேவையான சக்தியையும் அவர் கொடுக்கிறார்.

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

வசனம் 7: 'தெளிந்த புத்தி'. இது தெளிவாக சிந்திப்பதைக்குறிக்கிறது. விசுவாசிகள் மற்றவர்கள்மேல் அன்பு செலுத்தி தெளிவாக சிந்தித்து, வாழ்க்கையைத் தொடர்வதற்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார்.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- எதை தீமோத்தேயு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்?

இயேசுவைப் பின்பற்றுவது உங்களுக்குக் கடினமாகத் தோன்றும்போது, தேவனுடைய வாக்குத்தத்தத்தையும், அவருடைய வல்லமையையும் நினைவுகூரவும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்ற உங்களுக்குக் கடினமாய்த் தோன்றும்போது, தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அவருடைய வல்லமையையும் நினைவு கூருங்கள்.

உப விடயம்

நீங்கள் எப்படி அந்த வேதப்பகுதியைப் பிரிக்கப் போகிறீர்கள் என்பதைக் குறித்துச் சிந்திக்கவும்.

- அங்கே எத்தனை பகுதிகள் உள்ளன?

நீங்கள் அந்தப் பகுதியை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. **வசனங்கள் 1-2**

- பவுல் தன்னுடைய நிருபங்களை அநேகமாக இப்படித்தான் ஆரம்பிக்கிறார்.
- தேவன் தீமோத்தேயுவை ஒரு வாக்குத்தத்தத்துடன் அழைத்திருப்பதை பவுல் அவருக்கு நினைவுபடுத்துகிறார்.

2. **வசனங்கள் 3-5**

- பவுல் தீமோத்தேயுவுக்காக செய்யும் ஜெபத்தைக்குறித்துக் கூறுகிறார். பவுல்

தீமோத்தேயுவின் விசுவாசத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். அது தீமோத்தேயுவின் தாயிடமும், பாட்டியிடமும் இருந்த அதே விசுவாசம்.

- இந்த வசனங்கள் தேவனை சேவித்த, விசுவாசமுள்ள மக்களைக் குறிப்பிடுகின்றன.

3. வசனங்கள் 6-7

- தீமோத்தேயு என்ன செய்ய வேண்டுமென்பதை பவுல் அவருக்குக் கூறுகிறார். தேவன் அவரை அழைத்த தேவ பணியைத் தொடர்ந்து செய்யும்படி தீமோத்தேயுவிடம் பவுல் கூறுகிறார்.
- தேவன் அவருக்கு உதவி செய்வாரென்று பவுல் கூறுகிறார்.

ஒவ்வொரு உபவிடயத்திற்கும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்யவும்.

- முக்கிய விடயத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்கு இந்த உப விடயங்களை எப்படி உங்களால் ஒன்றையொன்று தொடரப் பண்ண முடியும்?
- பவுல் அடிக்கடி 'ஞாபகம்பண்ணி', 'நினைவு கூருதல்', 'நினைப்பூட்டுதல்' போன்ற வார்த்தைகளை உபயோகிப்பதைப் (வசனங்கள் 3,4,5,6) பாருங்கள். உங்கள் பிரசங்கக் குறிப்பில் 'நினைவு கூருதல்' அடங்கியிருக்க வேண்டும்.

உதாரணமாக:

1. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவு கூருங்கள் (வச. 1~2)
2. தேவனுடைய மக்களை நினைவு கூருங்கள் (வச. 3~5)
3. தேவனுடைய வல்லமையை நினைவு கூருங்கள் (வச. 6~7)

உங்கள் உப விடயங்களைச் சரி பார்க்கவும்:

- அவை உங்கள் முக்கிய விடயத்திலிருந்து வருகின்றனவா?
- எல்லா வசனங்களும் உட்படுத்தப்பட்டிருக்கின்றனவா?
- அவை இலகுவாக நினைவில் வைத்துக்கொள்ளத்தக்கதாகவும், சிறியதாகவும் இருக்கின்றனவா?

⊕ உதாரணத்துடன் விளக்குதல்

உங்கள் முக்கிய செய்தி "நினைவு கூருதலாகும்". உங்கள் முக்கிய எடுத்துக்காட்டு அல்லது கதைகள், நினைவு கூருதல் எவ்வளவு முக்கியம் என்பதை உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு காட்டும்.

ஒவ்வொரு நாளும் செய்யவேண்டியதொரு வேலையைக்குறித்து சிந்திக்கவும். நீங்கள் அதை நன்றாக செய்து முடிக்க எதை நினைவில் வைத்திருக்க வேண்டும்? உதாரணமாக: நீங்கள் ஒரு கிணற்றுக்குத் தண்ணீர் கொண்டுவரப்போகும் போது ஒரு வாளியை நினைவில் வைத்திருப்பது முக்கியம். நீங்கள் வாளியை எடுத்துச் செல்ல மறந்துவிட்டால் உங்களால் உங்கள் வேலையை முடிக்க முடியாது.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

பிரயோகித்தல்

- தேவனுக்குச் சேவை செய்வது தீமோத்தேயுவுக்குக் கடினமாகத் தோன்றுகின்றது. உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு, அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதைக் கடினமாக்குவது எது?
- இயேசுவின் சபையின் விசுவாசமான போதகராக இருக்க கடினமாக்குவது எது?
- தீமோத்தேயு எதை நினைவு கூரவேண்டுமென்று பவுல் விரும்புகிறார்? அதையேதான் நாமும் நினைவு கூரவேண்டும்.

மறுபரிசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

ஆரம்பிக்கவும்

ஒரு காரியத்தைத் தொடங்கி அது கடினமாயிருப்பதால் அதை செய்து முடிக்காமல் விட்டுவிட்ட ஒருவரைக்குறித்ததொரு உதாரணத்தைக் குறித்துச் சிந்திக்கவும்.

தீமோத்தேயுவுக்கு ஒரு விசுவாசமான விதத்தில் தேவனுக்கு சேவைசெய்வது கடினமாகத் தோன்றினது. அது அவர் இளைஞனாக இருந்ததாலோ அல்லது பலவீனமானவராக இருந்ததாலோ அல்ல, அந்தச் சபையில் பெரிய பிரச்சினைகள் இருந்ததே அதற்குக் காரணமாகும்.

நாம் தொடர்ந்து செல்வதைக் கடினமாக்கும் சில பிரச்சினைகளைக் குறித்துப் பேசவும்: பிழையான போதனைகள், எதிரிகள், சபலம் போன்றவை.

எதை நினைவில் வைத்திருக்க வேண்டுமென்பதை பவுல் விசுவாசிகளுக்கு நினைவுபடுத்துகிறார்.

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

- **தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூரவும் (வச. 1-2)**

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

நாம் கிறிஸ்தவர்களானபோது தேவன் நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (யோவான் 3:16)

இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவன் கிடைக்குமென்று தேவன் வாக்களிக்கிறார். தேவனுடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் தேவனுடன் நமக்கு சமாதானம் கிடைக்கிறது. அது நமது நற்கிரியைகளினால் கிடைக்கும் ஒன்றல்ல. அது தேவனுடைய பெரும் இரக்கத்தினால் கிடைக்கும் இலவச ஈவாகும்.

கிருபை, இரக்கம், சமாதானம் முதலியவற்றைக்குறித்து விளக்கவும் (திட்டமிடுதல் பக்கத்தை உபயோகிக்கவும்)

தேவன் நம்மேல் காட்டும் இரக்கம், மற்றும் கிருபையினால் மட்டுமே விசுவாசிகள் என்ற விதத்தில் நம்மால் தொடர்ந்து முன்னேறவும், தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை உணரவும் முடியும்.

பவுல் எப்படி ஒரு விசுவாசியாக மாறினார் என்பதைக் கூறவும் அவருடைய வார்த்தைகளை உபயோகிக்கவும் (1தீமோத்தேயு 1:11-14). தேவன் அவரைப் பிடித்துக் கொண்டதாலேயே பவுல் இரட்சிக்கப்பட்டார். தேவன் அவர்மேல் அதிக இரக்கமுள்ளவராய் இருந்து அவர் வாழ்க்கையை மாற்றினார்.

தேவன் பவுலுக்கு ஒரு எளிதான வாழ்க்கையை வாக்களிக்கவில்லை. அப்போஸ்தலர் 9:15-16ல் கர்த்தர் பவுலிடம் அவர் பாடனுபவிப்பாரென்று கூறுகிறார்.

வாழ்க்கை கஷ்டமாய்த் தோன்றும்போது தேவன் என்ன வாக்களித்திருக்கிறார் என்பதை நினைவுகூரவும். தேவன் எப்போதுமே அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவாரென்பதை நினைவுகூரவும்.

- **தேவனுடைய மக்களை நினைவுகூரவும் (வச. 3-5)**

கடந்த காலத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்தவர்களைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்துகிறார். கஷ்டமான நாட்களைச் சந்தித்த, ஆனால் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்த அநேகரைக் குறித்து வேதாகமம் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில் தேவனை சேவித்ததால் துன்பம் அனுபவித்த ஒருவரைக் குறித்து உங்கள் பேச்சைக் கேட்பவர்களிடம் கூறவும். (ஒரு உதாரணம் - சிங்கக்குகையில் போடப்பட்ட தானியேல் - தானியேல் 6ம் அதிகாரம்)

அநேக வருடங்கள் தேவனை சேவித்த தீமோத்தேயுவின் தாயைக் குறித்துப் பவுல் அவருக்கு நினைவுபடுத்துகிறார். அநேக வருடங்கள் கிறிஸ்தவராயிருக்கும் ஒருவரைக் குறித்து சிந்திக்கவும். அவர்களைத் தொடர்ந்து நடத்துவது யார்? அது தேவனே!

தேவன் மாறாமலிருப்பதால் நாம் அவருக்கு நன்றி செலுத்த முடியும். தேவன் மற்றவர்களுக்கு உதவி செய்திருக்கிறார். அவர் நமக்கும் உதவி செய்வார்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:1 –7

- **தேவனுடைய வல்லமையை நினைவு கூரவும் (வச. 5-7)**

தேவனுடைய பணியினைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு சக்தியைக் கொடுக்கிறார்.

நீங்கள் நெருப்பில் சமைக்கும்போது, நெருப்பு அணைந்துபோய் விடாதபடி தடுக்க என்ன செய்வீர்கள்? நீங்கள் அதன்மேல் ஊதுவீர்கள். பவுல் இந்தக்காட்சியை 6ம் வசனத்தில் உபயோகிக்கிறார். அவரை அக்கினியாக வைத்தக்கொள்ள தீமோத்தேயு பரிசுத்த ஆவியானவரிடம் கேட்க வேண்டும்.

நம்மைப் புண்படுத்துபவர்களின் மேல் அன்பு செலுத்த பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். மிக நெருக்கமான வேளையில்கூட நாம் பிழையானவைகளைச் செய்துவிடாமல் சுய கட்டுப்பாட்டுடன் நடந்துக்கொள்ள அவர் எங்களுக்கு உதவி செய்கிறார். நமக்குக் கஷ்டமாகத்தோன்றும் நேரங்களில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்ய நாம் அவரை சார்ந்திருக்க வேண்டும். அவர் நமக்கு தேவையான சக்தியைத் தருவார்.

! பிரயோகிக்கவும்

உங்கள் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் நீங்கள் பேசிய சில பிரச்சினைகளைக் குறித்து உங்கள் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு நினைவுபடுத்தவும்.

இயேசுவை பின்பற்றுவதை விட்டுவிட வேண்டுமென்று தோன்றப் பண்ணக்கூடியவைகள் என்ன?

நாம் எதை நினைவில் வைத்திருக்க வேண்டும்?

 # உதாரணத்துடன் விளக்கவும்

உங்கள் முக்கிய உதாரணத்தை உபயோகிக்கவும். (திட்டமிடல் பகுதியைப் பார்க்கவும்) உதாரணமாக ஒவ்வொரு நாளும் செய்யக்கூடிய வேலையைக் குறித்து சிந்திக்கவும். நீங்கள் அதை நல்ல விதமாக செய்து முடிக்க எதை நினைவில் வைத்திருக்க வேண்டும்?

I நிறைவு செய்யவும்

நமக்கு கஷ்டமாகத் தோன்றும்போது தேவன் விசுவாசிகளுக்கு நித்திய ஜீவனை வாக்களித்திருக்கிறார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நமக்கு முன் அநேக விசுவாசிகள் பாடனுபவித்திருக்கிறார்கள் என்பதையும், தேவன் அவர்களை கைவிடாமல் காத்திருக்கிறாரென்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். நாம் தேவனிடம் கேட்டால் அவர் நமக்கு தேவையான சக்தியையும், வல்லமையையும் பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்குத் தருவார்.

தேவனால் எம்மைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியும். அவர் கிருபை, இரக்கம்,மற்றும் சமாதானத்தின் தேவனாயிருக்கிறார்.

இந்தப் பெரிய கடவுளை நீங்கள் இன்னும் அறியாமலிருந்தால் இன்றே அவரை விசுவாசியுங்கள். அப்போது இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் உங்களுக்குச் சொந்தமாகும். அவரைக்குறித்து

➔ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:1-7

அறிந்து அவரைப்பின்பற்றுவது எப்படி என்பதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

ஜெபிக்கவும்

நீங்கள் வேதாகமத்திலிருந்து நினைவுபடுத்தின காரியங்களில் உங்களுக்கும், உங்கள் பேச்சைக்கேட்ட விசுவாசிகளுக்கும் தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

விசுவாசியல்லாதவர்களுக்கு தேவன் விசுவாசத்தைக்கொடுத்து, அவர்கள் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

2 வெட்கப்பட வேண்டாம்!

பின்னணி

- எபேசுவில் தீமோத்தேயுவுக்கு இருந்த பிரச்சினைகள் என்ன?
- இது ஏன் தீமோத்தேயுவுக்கு மிகவும் கடினமாயிருக்கிறது? (வசனம் 3)
- அப்போஸ்தலர் 19:23-41 ஐ வாசிக்கவும். விசுவாசிகள் மேல் இருக்கும் அழுத்தங்கள் யாவை?
- பவுல் எங்கேயிருக்கிறார்? ஏன் அவர் அங்கேயிருக்கிறார்?

தீமோத்தேயு எபேசுவில் இருந்தார். எபேசு அர்த்தெமி தேவியின் ஆராதனையினால் நிறைந்திருந்தது. இது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும், பணியையும் பாதித்தது. எபேசுவிலிருந்த விசுவாசிகள் அதில் இணையும்படி வற்புறுத்தப்பட்டதால் அநேக கஷ்டங்களை அனுபவித்தார்கள். விசுவாசிகள் அதனால் நிராகரிப்பையும், நியாயமற்றவிதமாக நடத்தப்படுதலையும் எதிர்கொள்ள நேரிட்டது. பவுல் கிறிஸ்துவுக்காக ரோமாபுரியில் சிறையில் கஷ்டப்படுகிறார். எனவே அவருக்கு நண்பர்களாயிருப்பது அவமானத்தைக் கொண்டு வந்தது.

வாசிக்கவும்

வசனங்கள் 8-10ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

- தீமோத்தேயு எதைக் குறித்து வெட்கப்படுகிறார். (வசனம் 8)?
- பவுலுக்கு நடப்பது என்ன? அது ஏன் தீமோத்தேயுவுக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது?

"வெட்கப்படாமல்" என்பதற்கு, சொல்வதற்கு வெட்கப்பட வேண்டாம், அல்லது பயப்பட வேண்டாம் என்று இங்கே பொருள்படுகிறது. தீமோத்தேயு வெளிப்படையாக கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பேச பயப்படுகிறார்.

- சுவிசேஷத்தின் நிமித்தம் பாடனுபவிக்க விருப்பமுள்ளவனாய் இருக்க வேண்டுமென்று ஏன் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார் (வசனம் 8-10)?
- தேவன் விசுவாசிகளுக்குச் செய்திருப்பதென்ன (வசனம் 9-10)?
- தேவன் ஏன் இந்த மகத்தான காரியங்களை விசுவாசிகளுக்குச் செய்திருக்கிறார் (வச. 9)?

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

- 'கிருபை' என்றால் அர்த்தம் என்ன (வசனம் 9-10)?

பாவிகளை இரட்சிப்பது தேவனின் வேலை. தேவன் விசுவாசிகளை உலகத்தோற்றத்திற்கு முன்பாக தெரிந்து கொண்டார். அவருக்காக வாழும்படி நம்மை அவர் அழைத்தார். தேவன் அவருடைய கிருபையினாலேயே நம்மை இரட்சித்தார். நாம் தண்டிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கும்போது தேவன் நம்மை இரட்சிப்பதே கிருபை என்பதற்கு அர்த்தமாகும்.

உலகத்தை உண்டாக்குவதற்கு முன்பதாகவே தேவன் விசுவாசிகளை இரட்சிக்கத் திட்டமிட்டிருந்தார். இயேசு வந்தபோது தேவன் அவர் திட்டத்தை நிறைவேற்றினார். இயேசு சிலுவையில் மரித்தபோது மரணத்தின் வல்லமையை முறித்தார். எனவே விசுவாசிகள் மரிக்கும் போது மரணம் அவர்களைப் பாதிப்பதில்லை - அவர்கள் நிரந்தரமாக பரலோகத்தில் போயிருப்பார்கள்.

11-12 வசனங்களை மூன்று முறை வாசிக்கவும்

- பவுலுக்கு நிகழ்ந்த நல்ல காரியங்கள் யாவை (வசனம் 11)?

செய்தி அறிவிப்பாளர் முக்கிய செய்தியைக் கூறுகிறார்.

- பவுலுக்கு நேரிட்ட கஷ்டங்கள் என்ன (வசனம் 12)?

பவுல் நற்செய்தியைப் பிரசங்கித்ததினால் சிறையிலிருக்கிறார்.

- அவருக்கு இப்படியான பல பிரச்சினைகளைக் கொண்டுவரும் இந்தச் செய்தியைக் குறித்துப் பேசுவதில் ஏன் பவுல் மகிழ்ச்சியடைகிறார் (வச. 12)?

பவுல் கிறிஸ்துவுக்காகப் பாடனுபவிப்பதைக் குறித்து வெட்கப்படவில்லை. ஏனென்றால் அவருக்கு இயேசு கிறிஸ்துவே எல்லாமாக இருந்தார். கிறிஸ்து பவுலுக்கு உலகிலேயே மிகச்சிறந்த பணியைக் கொடுத்திருக்கிறார். என்ன நடந்தாலும் அவர் வாழ்க்கை பாதுகாப்பாயிருப்பதை பவுல் அறிவார். அவரைப் பத்திரமாக பரலோகம் கொண்டு போய் சேர்க்கும் கிறிஸ்துவின் பாதுகாப்பின் கீழ் அவர் இருக்கிறார்.

- பவுல் குறிப்பிடும் 'அந்நாள்' (வச 12) என்ன? அந்த 'நாள்' இன்று நமக்கு ஏற்படுத்தும் வித்தியாசமென்ன?

"அந்நாள்" என்பது இயேசு மீண்டும் உலகத்தை நியாயம் தீர்க்க வரும் நாளாகும். அந்த நாளில் இயேசுவை நாம் காணும் சந்தோஷத்துடன் ஒப்பிடும்போது நாம் இப்போது அனுபவிக்கக் கூடிய துன்பம் மிகச்சிறியதாய்க் காணப்படும்.

⊕ முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் வெளிப்படுத்தும் முக்கிய விடயம் என்ன?

8ம் வசனத்தில் பவுல் "நீ வெட்கப்படாமல்" என்று கூறுவதையும், 12ம் வசனத்தில் "நான் வெட்கப்படுவதில்லை" என்று கூறுவதையும் கவனிக்கவும்.

- நாம் எதைக் குறித்து வெட்கப்படக் கூடாது?

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

மீண்டும் வேதப்பகுதியை வாசிக்கவும். முக்கியமான எதையும் நீங்கள் தவற விடவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறுவதில் சந்தோஷப்படுங்கள். இயேசுவை விசுவாசிப்பதினால் நமக்கு வரக்கூடிய பிரச்சினைகளைக் குறித்து நாம் வெட்கப்படக்கூடாது.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: இயேசுவின் நற்செய்தியைப் பற்றிக் கூறுவதில் சந்தோஷப்படுவதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. இயேசுவை விசுவாசிப்பது நமக்குப் பிரச்சினைகளை கொண்டுவரும் போது நாம் வெட்கப்படக்கூடாது.

உப விடயம்

- முக்கிய விடயத்தை மீண்டும் வாசிக்கவும்.
- வேதாகமப் பகுதியிலுள்ள வசனங்களை மீண்டும் வாசிக்கவும்.
- இந்த வேதப்பகுதியைப் போதிப்பதற்கு உங்களுக்கு உதவியாயிருக்கக்கூடிய உப விடயங்கள் என்ன?

இந்தப் பகுதிக்கு இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. எனவே இதற்கு இரண்டு உப விடயங்களிருக்கும்.

வசனங்கள் 8-10: இயேசுவின் நற்செய்தியைக் குறித்து வெட்கப்படவேண்டாமென்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார்.

- நற்செய்தி, தீமோத்தேயுவை துன்பம் அனுபவிக்கப் பண்ணுகிறது.
- நற்செய்தி என்பது மீட்பின் செய்தியும், தேவனின் கிருபையைக் குறித்த செய்தியுமாயிருக்கிறது.

⇢ திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

- இந்த மீட்பு இயேசு கிறிஸ்துவின் அற்புதமான வேலையினால் வந்தது.

வசனங்கள் 11-12: அவர் இயேசுவின் நற்செய்தியைக் குறித்து வெட்கப்படவில்லையென்று பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறார்.

- சுவிசேஷம் பவுலை துன்பத்திற்கு நேராய் வழிநடத்தி இருக்கிறது.
- பவுல் வெட்கப்படவில்லை. ஏனென்றால் இயேசு எவ்வளவு பெரியவர் என்பது அவருக்குத் தெரியும்.
- அவருடைய வாழ்க்கை இயேசுவின் கையிலிருப்பதால் பவுல் சந்தோஷமாயிருக்கிறார்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் ஒரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும்.

- ஒவ்வொரு உப விடயமும் ஒன்றிலிருந்தொன்று தொடரப்பண்ண எப்படி உங்களால் முடியும்?
- இரண்டு பகுதியிலும் பவுல் 'வெட்கப்பட வேண்டாம்' என்று கூறுவதைக் காணலாம். (வச. 8,12) 'வெட்கப்பட வேண்டாம்' என்ற செய்தி உங்கள் பிரசங்கக் குறிப்பில் இருக்கும். அதையே உங்கள் தலைப்பாய் வைத்துக் கொள்ளலாம்.

உதாரணமாக:

1. இயேசுவின் சுவிசேஷமாகிய நற்செய்தியைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். (வச. 8-10).
2. இயேசு பெரியவராயிருப்பதால் வெட்கப்பட வேண்டாம் (வச 11-12).

உங்கள் முக்கிய விடயத்திலிருந்து தொடர்ந்து வரும் இந்த உப விடயங்களைச் சரிபார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்கவும்

உங்கள் மக்கள் வேலைசெய்ய பெருமைப்படும் ஒருவரைக் குறித்து சிந்திக்கவும். அது பிரதம மந்திரியைப் போன்றதொரு முக்கிய மனிதராய் இருக்கலாம். அப்படியான ஒருவருடன் வேலை செய்வதைப் பற்றி அவர்களுடைய நண்பர்களுடன் கூறும்போது அவர்கள் உணர்வு எப்படியிருக்கும் என்பதை உங்கள் செய்தியைக் கேட்பவர்களிடம் கற்பனை செய்யும்படி கூறுங்கள். பின், அவர்கள் அதைவிட அதிக முக்கியமான ஒருவருக்கு வேலை செய்வதாகக் கூறுங்கள் - இயேசு!

! பிரயோகித்தல்

- இயேசுவின் செய்தியை மற்றவர்களுக்குக் கூறுவதற்கு உங்கள் சபையிலுள்ள மக்கள் ஏன் பயப்படக்கூடும்?
- இயேசுவுக்காக மக்கள் என்ன விதங்களில் பாடனுபவிக்கிறார்கள்?
- இயேசுவுக்காக தைரியமாய் பேச எப்படி நீங்கள் உங்கள் மக்களை ஊக்கப்படுத்துவீர்கள்?
- நாம் இயேசுவின் செய்தியைக் குறித்து வெட்கப்படாதவர்களானால், நாம் எப்படி ஜீவிப்போம்?
- அவிசுவாசிகள் இயேசுவின் செய்தியை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும்? விசுவாசியாய் மாறுவது என்பது தேவனுடைய அற்புதமான இலவச ஈவாகிய மன்னிப்பு என்னும் அவருடைய

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

கிருபையின் மேல் நம்பிக்கை வைப்பதும், வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதுமாகும்.

நீங்கள் ஒரு விசுவாசியானால், உங்கள் வாழ்க்கை இயேசுவின் கையிலிருக்கிறது. அவர் உங்களைப் பார்த்துக்கொள்வார்!

மறுபரிசீலனை செய்தல்
நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

ஆரம்பிக்கவும்
இரவு போஜன வேளையில் முக்கியமான ஒருவர் உங்கள் வீட்டுக்கு வருகிறார். ஆனால், அவருக்கு உண்ணக் கொடுப்பதற்கு உங்களிடம் அதிகமாக ஒன்றுமில்லையெனில், அப்போது உங்களுக்கு வெட்கமாயிருக்கும். அவர் பசியாயிருந்து, நீங்கள் உங்களிடமிருந்ததை அவருக்கு கொடுத்தால், நீங்கள் வெட்கப்படத் தேவையில்லை!

இயேசுவின் செய்தியைக் குறித்தோ, அல்லது அவருக்காக துன்பம் அனுபவிப்பதைக் குறித்தோ வெட்கப்பட வேண்டாமென்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். இயேசுவைக் குறித்துப் பேச அவர் வெட்கப்படவோ, அல்லது பயப்படவோ கூடாது. இந்தச் செய்தியில் பிழையேதுமில்லை - அனைத்து செய்திகளிலும் சிறந்த செய்தி அதுவே!

- ஏன் சிலருக்கு இயேசுவின் செய்தியைக் கேட்க கஷ்டமாயிருக்கிறது, அல்லது அது அவர்கள் காதுகளுக்கு நற்செய்தியாய்த் தோன்றுவதில்லை?
- நாம் இயேசுவைக் குறித்து வெட்கப்படுவோமானால், நாம் எப்படி நடந்து கொள்வோம்?

இயேசுவைக் குறித்து வெட்கப்படாமலிருப்பதற்கு இரண்டு பெரிய காரணங்கள் இருக்கின்றன.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:8 -12

◇ விளக்கவும்
உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைக் குறித்து வெட்கப்பட வேண்டாம் (வச 8-10)

ஒருவர் உங்களுக்கு நல்லதொரு பரிசைக் கொடுத்தால், அதை நீங்கள் எல்லோருக்கும் காட்ட விரும்புவீர்கள்! தேவன் விசுவாசிகளுக்கு மிக உயர்ந்த பரிசைக் கொடுத்திருக்கிறார்: இரட்சிப்பு.

- தேவன் நம்மை இரட்சித்தார் (வச. 9).

நாம் பெரிய ஆபத்தில் சிக்கியிருந்தோம். ஆனால் தேவன் எங்களைக் காப்பாற்றினார்!

- தேவன் நம்மை அவருக்காக ஜீவிக்கும்படி அழைத்தார். (வச. 9). நாம் தேவனுக்கு மிகவும் விசேஷித்தவர்களாய் இருக்கிறோம்.
- நாம் நல்லவர்களென்பதாலோ, அல்லது நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோமென்பதாலோ தேவன் எங்களை இரட்சிக்க வில்லை (வச.9).

  நாம் தேவனுடைய தகுதியற்ற இரக்கத்தினாலேயன்றி நாம் செய்த அல்லது நல்ல காரியங்களினாலே இரட்சிக்கப்படுவதில்லை. நாம் யாவரும் பாவிகள். தேவனுடைய இரக்கமும், கிருபையும் மிகவும் பெரியது!

- தேவன் விசுவாசிகளை இரட்சிப்பதற்கு உலகத்தோற்றத்திற்கு முன்பதாகவே தீர்மானித்தார் (வச. 9).

  நாம் தேவனுக்குச் சொந்தம். அவர் எங்களை - தெரிந்தெடுத்தார்!

- விசுவாசிகளுக்கு நித்திய ஜீவனை கொடுப்பதற்காக, பாவத்தையும், மரணத்தையும் மேற்கொள்ள தேவன் இயேசுவை அனுப்பினார் (வச. 10).

  உங்களையும், என்னையும் காப்பாற்ற தேவன் மனிதனாக மாறினது எவ்வளவு பெரிய அற்புதம்! இயேசு இங்கே "தோன்றியது" அல்லது "வந்தது" மட்டுமல்லாமல், அவர் நமக்காக மரிக்கவும் செய்தார். விசுவாசிகளின் ஸ்தானத்தில் இயேசு மரித்தார். நாம் நித்திய மரணத்தை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் இயேசு எங்களுக்காக மரித்ததால் நாம் காப்பாற்றப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டோம்!

  கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் மரணத்தின் சக்தியை முறித்தார். எனவே விசுவாசிகள் மரிக்கும்போது அவர்கள் பயப்படத் தேவையில்லை. விசுவாசிகள் மரணத்திற்கு அஞ்சத்தேவையில்லை. இயேசு மரணத்தைவிட சக்திமிக்கவர். மரணம் விசுவாசிகளுக்கு எந்தவித பாதிப்பையும்

ஏற்படுத்தாதபடி அவர் காத்துக்கொள்வார். அவர்கள் பரலோகம் போவார்கள்.

இயேசுவைக்குறித்த நற்செய்தி அதைக்குறித்து மௌனமாய் இருக்கவேண்டியதொன்றல்ல. அதை நாம் அனைவருக்கும் கூறவேண்டும்!

உங்கள் அப்பா AIDS நோய்க்கு ஒரு மருந்தை கண்டுபிடித்தால், அதை நீங்கள் ஒருவரிடமும் சொல்லாமல் மௌனமாய் இருப்பீர்களா? இயேசுவின் நற்செய்தியானது எல்லா வியாதிகளிலும் பெரிய வியாதியான பாவத்திற்கு மருந்தாயிருக்கிறது.

2. இயேசு பெரியவராயிருப்பதால், நீங்கள் வெட்கப்பட வேண்டாம். (வச. 11-12)

வசனம் 11-12ல் பவுல் அவர் வெட்கப்படவில்லை என்று கூறுகிறார்.

உங்களுடைய முக்கிய உதாரணத்துடனான விளக்கத்தைப் பயன்படுத்துங்கள்: ஒரு இராஜா அல்லது பிரதம மந்திரி உங்களுக்கு மிக முக்கியமானதொரு பணியைக் கொடுத்தால் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். இயேசு இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாயிருக்கிறார். எனவே அவருக்கு சேவை செய்வதைவிட பெரிய பணி வேறொன்றுமில்லை.

இயேசுவுக்கு சேவகனாயிருப்பதே உலகத்தில் நமக்குக் கிடைக்கும் மிகப்பெரிய மரியாதையாகும். ஏனென்றால் அவரே எல்லோரிலும் பார்க்க மிகப் பெரியவராயிருக்கிறார்!

அநேக நண்பர்கள் நம்மை கைவிட்டிருக்கலாம். அவர்கள் நம்மைப் புண்படுத்தலாம். ஆனால் இயேசு ஒருபோதும் கைவிடமாட்டார். நமது வாழ்க்கைக்கு நாம் அவரை நம்பலாம்.

இயேசுவைக் குறித்துப் பவுல் எவ்வளவு நம்பிக்கை உள்ளவராயிருக்கிறார் என்று பாருங்கள்:

- நான் அவரை அறிவேன்.
- எனக்கு அவர்மேல் முழு நம்பிக்கையிருக்கிறது.
- அவரைக்குறித்து எனக்கு நிச்சயமுண்டு.

இயேசுவால் என்னைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்: யூதா 24-25 ஐ வாசிக்கவும். இயேசு மீண்டும் வரும்போது, அவர் விசுவாசிகளைத் தன்னுடன் எப்போதும் வைத்துக் கொள்ள அழைத்துச் செல்வார்! இயேசு ஒருபோதும் கைவிடமாட்டார். நாம் விழ அவர் விடமாட்டார். இயேசு எப்போதும் நம்மைப் பாதுகாப்பாய் வைத்திருப்பார்.

ⓘ **பிரயோகிக்கவும்**

திட்டமிடுதல் பகுதியிலுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்.

பிறமக்கள் உங்களைக் குறித்து என்ன நினைப்பார்களென்றோ, அல்லது ஏதாவது உங்களுக்கு தீமை செய்வார்களென்றோ, பயந்து, கிறிஸ்தவனாய் இருப்பதைக் குறித்து வெளியே கூறாமல் மறைத்து வைக்கிறீர்களா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:8-12

தேவன் அவருக்காகப் பேச உங்களுக்குச் சக்தியைத் தருவார். அவர் பவுலுக்கும், தீமோத்தேயுவுக்கும் உதவி செய்தார். அதுபோல் உங்களுக்கும் உதவி செய்வார்.

தேவனைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். அவர் உங்களுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார். அவர் உங்களுக்கு பரலோகத்திற்கு வாக்களித்திருக்கிறார்!

நீங்கள் உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு இதுவரை கொடுக்காவிட்டால், உடனே அதை நிறைவேற்றவும். அவரால் மட்டுமே உங்களை இரட்சிக்க முடியும். நீங்கள் அவரிடம் கேட்பீர்களா?

① நிறைவு செய்யவும்

கிறிஸ்தவனாயிருப்பதைக் குறித்து வெட்கப்பட வேண்டாம்! கிறிஸ்தவனாயிருப்பதே உலகத்தில் மிகவும் அற்புதமும், விலைமதிக்க முடியாத ஒன்றுமாயிருக்கிறது. இயேசுவே உயர்ந்தவர்!

⊕ ஜெபிக்கவும்

விசுவாசிகளான உங்கள் பேச்சைக் கேட்ட மக்களுக்கு அவர்கள் இயேசுவைக் குறித்து வெட்கப்படாமல் பேசுவதற்கு தேவன் உதவி செய்யவேண்டுமென்று ஜெபிக்கவும்.

விசுவாசிகளல்லாதவர்கள் இயேசுவின் மேல், விசுவாசம் வைக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

3 விசுவாசமாக இருங்கள்

பின்னணி

- பவுல் ஏன் சிறையிலிருக்கிறார்?
- பவுல் சிறையிருப்பது அவருக்கு எப்படியிருந்திருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- பவுல் 1~12 வசனங்களில் தீமோத்தேயுவுக்கு என்ன கூறுகிறார்?
- விசுவாசிகளாயிருப்பதின் காரணமாக ஏன் கிறிஸ்தவர்கள் பாடனுபவிக்கிறார்கள்?

இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவராய் இருந்தபடியால் பவுல் சிறையிலிருக்கிறார். ரோமானிய சிறைச்சாலைகள் அசுத்தமானவையும், ஆபத்தானவையும், இருண்ட இடங்களாகவும் இருந்தன. சிறைக்கைதிகளுக்கு உணவு, போர்வைகள், மற்றும் உடைகள் முதலியவற்றை அவர்கள் குடும்பத்தார் கொடுக்க வேண்டியிருந்தது. சிறைக்கைதி ஒருவனை பார்க்கப்போவது மிகவும் ஆபத்தானதாயிருந்தது. பிகெல்லு மற்றும் எர்மோகேனே ஆகியோர் (வச. 15) பவுலை விட்டு விலகிப் போய்விட்டார்கள். ஓநேசுப்போரு போன்ற ஒரு சிலர் மட்டுமே விசுவாசமாயிருந்தார்கள்.

இயேசு கிறிஸ்து அவரைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு எளிதான வாழ்க்கையை வாக்களிக்கவில்லை. மாறாக நாம் பாடனுபவிப்போமென்ற அவர் எச்சரிக்கிறார். (யோவான் 15:18-20). சில போதகர்கள், பாடனுபவிக்க இயேசு நம்மை அழைப்பதைக் குறித்துப் போதிப்பதில்லை. நாம் இயேசுவைப் பின்பற்றினால் நாம் ஒருபோதும் கஷ்டப்படவோ அல்லது சுகவீனமடையவோ மாட்டோமென்று அவர்கள் வாக்களிக்கிறார்கள். இது தவறான போதனை!

வாசிக்கவும்

வசனங்கள் 13~18ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

வசனங்கள் 13~14ஐ வாசிக்கவும்

- 13~14 வசனங்களில் பவுல் 'கைக்கொண்டிரு', 'காத்துக்கொள்' போன்ற வார்த்தைகளை தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். அவர் எதைக் குறித்து அப்படிக் கூறுகிறார்?

"வைப்பு" என்பது காத்துக் கொள்ளும் ஒருவருக்காக சேர்த்து வைக்கும் விலைமதிப்பற்றதொன்றாகும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

"ஆரோக்கியமான வசனங்கள்" மற்றும் "நற்பொருள்" என்று பவுல் குறிப்பிடுவது இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியையே ஆகும். அவருடைய உண்மையான செய்தியை எழுதும்படி இயேசு பவுலுக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும் கட்டளையிட்டார். அதுதான் நமது புதிய ஏற்பாட்டில் இருக்கும் செய்தியாகும். நமக்குப் பழைய ஏற்பாட்டில் கூறப்படுபவைகளை அது நிறைவு செய்கிறது.

- இயேசுவின் செய்தியைக் குறித்து 13~14 வசனங்கள் நமக்குக் கூறுவதென்ன?
- உண்மையைக் காத்துக்கொள்ள யார் தீமோத்தேயுவுக்கு உதவி செய்வர்?

எது சரி, எது பிழை என்பதை அறிய நாம் வேதாகமத்திலுள்ள போதனைகளை உபயோகிக்க வேண்டும்.

தேவன் இயேசுவைக் குறித்த செய்தியை நமக்குக் கொடுத்தார். அது விலைமதிப்பற்றது. எனவே நாம் அதைக் கவனமாக பாதுகாக்க வேண்டும். அதற்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி நமக்குத் தேவை.

வசனங்கள் 15~18ஐ வாசிக்கவும்.

இந்த வசனங்களில் மூன்று நபர்களை பார்க்கிறோம். பிகெல்லுவும், எர்மோகேனேயும் பவுலை துக்கப்படுத்தினார்கள் (வச. 15). ஒநேசிப்போரு பவுலுக்கு உதவி செய்தார் (வச. 16-18).

- ஏன் மக்கள் பவுலைக் கைவிட்டுவிட்டு சென்று விட்டார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள் (வச. 15)?

அநேக சபைகள் பவுலுக்கு செய்து கொண்டு வந்த உதவியை நிறுத்தி விட்டன. பிகெல்லுவும், எர்மோகேனேயும் முன்பு பவுலுக்கு நல்ல நண்பர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் உதவியை நிறுத்திக் கொண்டது பவுலுக்கு மிகவும் துக்கத்தை ஏற்படுத்தியது.

வசனங்கள் 16~18ஐ மீண்டும் வாசிக்கவும்.

- இந்த வசனங்களில் பவுல் யாருக்காக ஜெபிக்கிறார்?
- அவர்களுக்காகப் பவுல் ஏன் ஜெபிக்கிறார்?
- அவர்களுக்காக பவுல் எவ்வாறு ஜெபிக்கிறார்?
- 'இரக்கம்' என்று பவுல் குறிப்பிடுவதின் அர்த்தம் என்ன? (வச.16,18)

"அந்நாள்" என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனிக்கவும். (வசனம் 12).

- பவுல் எந்த நாளைக் குறித்து பேசுகிறார்?

ஒநேசிப்போரு எபேசு சபையைச் சேர்ந்தவர் (4:19) அவர் ரோமாபுரிக்குச் சென்று பவுலை அநேக தடவைகள் சந்தித்தார். அவருக்கு "இரக்கம்" கிடைக்க வேண்டுமென்று பவுல் இரண்டு முறை ஜெபிக்கிறார். தேவன் "அந்த நாளில்" அவருக்குரிய பலனைக் கொடுக்க வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். அந்த நாள் என்பது இயேசு கிறிஸ்து மீண்டும் வரும் நாள். நமக்குக் கிடைக்கப்போகும் பலன் இலவசமானது என்பதை

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

நினைவுபடுத்தவே பவுல் "இரக்கம்" என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய காரியம் என்ன?
- பவுல் என்ன செய்ய வேண்டுமென்று தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார்? (வச. 13-14)
- தீமோத்தேயு யாருடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டுமென்று பவுல் கூறுகிறார்? (வச. 15-18)

இயேசுவைக் குறித்த உண்மையைப் பிரசங்கிப்பதற்கு உண்மை உள்ளவர்களாயிருக்கவும். இயேசுவுக்காக பாடனுபவிப்பவர்களுக்கு உதவி செய்வதில் உண்மையாக இருங்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: இயேசுவைக் குறித்த உண்மையை பிரசங்கிக்க உண்மையாயிருக்கவும். இயேசுவுக்காக பாடனுபவிப்பவர்களுக்கு உதவி செய்வதில் உண்மையாய் இருங்கள்.

உப விடயம்

- முக்கிய விடயத்தை மீண்டும் வாசிக்கவும்.
- வசனங்களை மீண்டும் வாசிக்கவும்.
- எந்த உப விடயங்கள் உங்களுக்கு இந்தப் பகுதியைப் போதிக்க உதவியாயிருக்கும்?

இந்தப் பகுதிக்கு இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. எனவே இதற்கு இரண்டு உப விடயங்களிருக்கும்.

வசனங்கள் 13-14: இயேசுவைக் குறித்த செய்தியைக் காத்துக் கொள்ளும்படியும், அதற்குப் பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாடும்படியும் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார்.

வசனங்கள் 15-18: மக்களைக் குறித்துப் பவுல் பேசுகிறார். சிலர் அவரைத் துக்கப்படுத்தி, அவரைக் கைவிட்டு விட்டார்கள். மற்றவர்கள் அநேக முறை அவருக்கு உதவி செய்திருக்கின்றார்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

இரண்டு உப விடயங்களும், "காத்துக் கொள்ளுதல்" என்பதைக் குறித்ததாயிருப்பதைக் கவனிக்கவும். தீமோத்தேயு நற்செய்தியைக் காத்துக்கொள்ள வேண்டும். ஓநேசிப்போரு பவுலை காத்துக் கொண்டான்.

இரண்டு உப விடயங்களுக்கும் பொருத்தமான தலைப்புகளைக் குறித்துச் சிந்திக்கவும்.

உதாரணமாக:

1. இயேசுவைக் குறித்த உண்மையைக் காத்துக்கொள்ளவும். (வச. 13-14)
2. இயேசுவுக்காகப் பாடனுபவிப்பவர்களைக் காத்துக்கொள்ளவும். (வச. 15-18)

இந்த உப விடயங்கள் உங்கள் முக்கிய விடயத்திலிருந்து பின்தொடருவதை சரிபார்க்கவும்.

⊕ உதாரணத்துடன் விளக்குதல்
நீங்கள் கவனமாகப் பாதுகாக்கும் ஒன்றைக் குறித்து சிந்திக்கவும். அது உங்களுக்கு விலைமதிப்பற்றதும் விஷேடமானதுமாயிருக்கிறது. அது ஒரு படகாகவோ, அல்லது மாலையாகவோ அல்லது சில படங்களாகவோ இருக்கலாம். அது களவு போகாமல், அல்லது தொலையாமல் இருக்க நீங்கள் எப்படி அதைக் காத்துக்கொள்ளுவீர்களென்பதைக் கூறவும்.

அதைப்போலவே நாம் தேவனுடைய வசனத்தையும், தேவனுடைய மக்களையும் காத்துக்கொள்ள வேண்டும்.

ⓘ பிரயோகித்தல்
இயேசுவைப் பற்றிய செய்தியை போலியான போதகர்கள் "கைக்கொள்ளவோ" அல்லது "காத்துக்கொள்ளவோ" மாட்டார்கள். இயேசுவைக் குறித்து எந்தவிதமான தவறான போதனைகளை நீங்கள் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்? உதாரணமாக மக்கள் இப்படியானவைகளைக் கூறக்கூடும்...

- இயேசு தேவகுமாரன் அல்ல.
- இயேசு மீண்டும் உயிர்த்தெழவில்லை.
- இயேசுவின் மரணம் மட்டும் போதாது. நாம் பரலோகம் போவதற்கு நல்ல காரியங்களையும் கட்டாயம் செய்ய வேண்டும்.
- தேவனிடம் செல்வதற்குப் பல வழிகள் இருக்கின்றன.
- நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்கள் வியாதிகளிலிருந்து எப்பொழுதும் சுகம் கிடைப்பதுடன் உங்களுக்கு அதிகப் பணமும் கிடைக்கும்.

இப்படியானவைகளைச் கூறுபவர்கள் தவறானவைகளைக் கூறுகிறார்கள். நாம் நமது மக்களுக்குப் தவறுகளை எடுத்துக்கூறி, சரியானவைகளை எப்போதும் போதிக்க வேண்டும்.

- தேவைகளுள்ள அல்லது சிறையிலுள்ள விசுவாசிகளுக்கு நாம் எப்படி உதவி செய்ய முடியும்?
- விசுவாசத்தின் காரணமாக பாடனுபவிக்கும் விசுவாசிகளுக்கு நாம் எப்படி உதவி செய்ய முடியும்?

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

நீங்கள் ஒரு விசுவாசியாய் இருந்தால் உங்கள் வாழ்க்கை இயேசுவின் கைகளிலிருக்கிறது. அவர் உங்களை காத்துக் கொள்ளுவார்!

மறுபரிசீலனை செய்தல்
நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

ஆரம்பிக்கவும்
உங்களுடைய முக்கிய உதாரணத்துடன் நீங்கள் ஆரம்பிக்கலாம். நீங்கள் கவனமாகக் காத்துக்கொள்ளும் ஒன்றைக் குறித்துக் பேசவும். அது உங்களுக்கு விலைமதிப்பற்றதும், விசேடமானதுமாயிருக்கிறது. அதன்பின் பெறுமதியில்லாத ஒன்றைக் குறித்துக் பேசவும். அது உடைந்துபோன ஒரு பொருளாகவோ அல்லது குப்பையாகவோ இருக்கலாம். அதற்கு என்ன நேரிட்டாலும் உங்களுக்கு அதைக் குறித்து கவலையில்லை.

இயேசுவின் செய்தியைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதை நீங்கள் விலைஉயர்ந்த ஒன்றாக நினைக்கிறீர்களா, அல்லது குப்பையாக நினைக்கிறீர்களா?

இயேசுவின் செய்தியை விலைமதிப்பற்றதும், விசேடமானதொரு பரிசுமாக எண்ண வேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவை தைரியப்படுத்துகிறார். அதைக் குறித்து வெட்கப்படக்கூடாது என்று பவுல் கூறுகிறார் (வச.8-12). இயேசுவின் செய்தியைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும். நீங்கள் ஒரு விசுவாசியாய் இருப்பதைக் குறித்து வெட்கப்பட வேண்டாம்.

இயேசு உங்களுக்கு விலைமதிப்பற்றவராய் இருந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

இயேசு நமக்கு விலைமதிப்பற்றவராயும், முக்கியமானவராயும் இருந்ததால், நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று பவுல் கூறுகிறார்.

விளக்கவும்
உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. இயேசு கிறிஸ்துவைப்பற்றிய உண்மையை கற்றுக்கொள்ளவும். (வச. 13-14)

ஒருவர் அவருடைய வாகனத்தை அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளை பாதுகாப்பிற்காக உங்களிடம் விட்டுப்போய், அதை நீங்கள் தொலைத்து விட்டாலோ அல்லது அதை உடைத்து விட்டாலோ அவருக்கு எப்படி இருக்கும்?

பாதுகாத்துக் கொள்வதற்கு தேவனுடைய பிள்ளைகளுக்கு இயேசுவின் செய்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் அதை சரியாக பிரசங்கிக்கும்போது பாதுகாத்துக் கொள்கிறோம். மாறாக, அதைப் தவறாகப் போதிக்கும்போது அதை நாம் இழந்து விடுகிறோம் - அதில் எதையாவது சேர்த்தாலும் கூட.

இது **மிக** முக்கியம். நமக்கு பரிசுத்த ஆவியானவரின் துணை தேவை (வச. 14).

தவறான போதனைகளைக் குறித்து உங்கள் சபை மக்களை நீங்கள் எச்சரிக்க வேண்டும். அதை ஒரு அன்பான விதத்தில் கூறவும் (வச. 13).

தவறான போதனைகளைக் குறித்து பல உதாரணங்கள் இருக்கின்றன. உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய தவறான போதனைகளை உதாரணமாகக் காட்டவும். தவறான போதனைகளைப் பின்பற்றாமல் இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டவும். ஆனால், தேவனின் உண்மையான செய்தியை மட்டும் வைத்திருக்கவும். திட்டமிடல் பகுதியில் உள்ள ‘பிரயோகித்தல்’ தலைப்பின் கீழ்வரும் உதாரணங்களைப் பார்க்கவும்.

2. இயேசுவுக்காகப் பாடனுபவிப்பவர்களைக் காத்துக் கொள்ளவும் (வச. 15-18)

நாம் தேவனுடைய செய்திக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தால், இயேசுவைப் பின்பற்றும் மற்ற விசுவாசிகளைக் குறித்து அக்கறையுடையவர்களாய் இருப்பதிலும் உண்மையாய் இருப்போம். கஷ்டப்படுகிறவர்களுக்கு நாம் விசேடமாக உதவி செய்ய எப்போதும் முன்வருவோம்.

பிகெல்லும், எர்மொகேனேயும் பவுலைவிட்டுப் பின்வாங்கி, அவருக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டார்கள். ஒநேசிப்போரு அநேக முறை பவுலுக்கு உதவி செய்தார்.

நீங்கள் யாரைப் போலிருக்க விரும்புகிறீர்கள்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

மற்றவர்களுக்கு உதவி செய்வது கஷ்டமான ஒரு காரியமாகும். நாம் ஏழைகளாகவும், சொந்தப் பிரச்சினைகள் உள்ளவர்களாகவும் இருந்தால் மற்றவர்களுக்கு உதவி செய்வது கடினம். ஆனால், நாம் இயேசுவின் மேல் அன்பு செலுத்துபவர்களாயிருந்தால் நாம் என்ன நிலையிலிருந்தாலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் நாம் மகிழ்ச்சியடைவோம். ஒருமுறை மாத்திரமல்ல, ஆனால் நாம் அடிக்கடி உதவி செய்வோம். ஒநேசிப்போரு பவுலுக்கு பல விதங்களில் உதவி செய்தார் (வச. 18).

எபிரேயர் 13:3 இப்படிக் கூறுகிறது: “கட்டப்பட்டவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து தீங்கனுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்”

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் ஒருவருக்கொருவர் எப்படி இன்னும் அதிக இரக்கம் பாராட்ட முடியுமென்பதற்கு உதாரணங்களைக் காட்டவும். பாடனுபவிக்கும் விசுவாசிகளுக்கு எப்படி உதவி செய்ய முடியும்? அவர்களை கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரர்களும், சகோதரிகளுமாயிருக்கிறார்கள். அவர்கள் பவுலைப் போல இயேசுவுக்காகப் பாடனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் எப்படி உதவி செய்ய முடியும்?

ⓘ பிரயோகிக்கவும்

இயேசு உங்களுக்கு விலைமதிப்பற்றவரும், விசேடமானவரும், முக்கியமானவருமாயிருக்கிறாரா?

இயேசு உங்களுக்கு முக்கியமானவராய் இருந்தால்:

- எவ்விதமான தவறான போதனைகளை நீங்கள் கேட்காமலும், பின்பற்றாமலும் இருக்க வேண்டும்?
- மற்றவர்கள் சரியான சத்தியத்தைப் பின்பற்ற எப்படி நீங்கள் அவர்களுக்கு உதவ முடியும்?
- துன்பமனுபவிக்கும் எந்தக் கிறிஸ்தவர்களுக்கு நீங்கள் உதவி செய்வீர்கள்?

இயேசு உங்களுக்கு விலைமதிப்பற்றவராய் இல்லாவிட்டால், நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவரல்ல.

இயேசு மீண்டும் வருகிறார் என்பதையும் (வச.18), அவர் உங்களை நியாயந்தீர்ப்பார் என்பதையும் குறித்து சிந்திக்கவும். அவரிடம் நீங்கள் என்ன கூறுவீர்கள்? உங்களுக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய தண்டனையிலிருந்து எப்படி நீங்கள் தப்பிக்க முடியும்?

அதற்கு ஒரே வழிதான் உண்டு. இயேசுவிடம், உங்களுக்கு இரக்கம் காட்டவும் மன்னிப்பை வழங்குமாறும் இப்போதே கேளுங்கள்! உங்களை மாற்றும்படி கேளுங்கள்! - அதன்பின் அவருக்காக வாழத்தொடங்குங்கள்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 1:13-18

ⓘ நிறைவு செய்யவும்

தேவனுடைய சத்தியத்திற்கு உண்மையுள்ளவனாயிருக்கவும், இயேசுவை உங்கள் வாழ்க்கையில் விசேடமானவராகவும், முக்கியமானவராகவும் வைத்திருக்கவும் பரிசுத்த ஆவியானவரான தேவனிடம் உங்களுக்கு உதவும்படி கேட்கவும். துன்பப்படும் விசுவாசிகளுக்கு நீங்கள் உதவி செய்யும் விதத்தின் மூலம் இது வெளிப்படும். உண்மையுள்ளவராயிருக்கவும்!

இப்போது உங்கள் செய்தியை கேட்பவர்களுடன் இணைந்து பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக ஜெபிக்கவும்.

ⓣ ஜெபிக்கவும்

உங்கள் சபை தவறான சத்தியங்களைப் பின்பற்றாமல், சரியான சத்தியத்தைப் போதிக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

கிறிஸ்துவிற்காகப் பாடனுபவிக்கும் கிறிஸ்தவர்களுக்காக அவர்களை இயேசுவுக்கு கடைசிவரை விசுவாசமாக இருக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

4 நல்ல போதகர்கள்

பின்னணி

- முதலாம் அதிகாரத்தில் பவுல் தீமோத்தேயுவிடம் என்ன கூறினார்? (1:8,13ஐப் பார்க்கவும்)
- இயேசுவைக் குறித்து சாட்சி கூறும்போது தீமோத்தேயு எதை எதிர்பார்க்க வேண்டும்? (1:8,12ஐப் பார்க்கவும்)
- தீமோத்தேயு எபேசு சபையின் தலைவராயிருந்தார். ஒரு போதகர் அல்லது சபைத்தலைவரின் பணியைக் குறித்து நாம் என்ன கற்றோம்?

நல்ல போதகர்கள் நல்ல உதாரணங்களைக் கூறி மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை விளக்குவார்கள். பவுல் மூன்று உதாரணங்களை உபயோகிக்கிறார். அவர் தீமோத்தேயுவை ஒரு போர்ச்சேவகனைப் போலவும், ஒரு ஓட்டப்பந்தய வீரனைப் போலவும், ஒரு விவசாயியைப் போலவும் இருக்க வேண்டுமென்று கூறுகிறார். இந்த மூன்று உதாரணங்களும் கடினமான வேலையைக் குறிக்கின்றன. தங்கள் சபை மக்களை பராமரிக்க போதகர்களும், சபைத்தலைவர்களும் கடுமையாக உழைக்க வேண்டும். மக்கள் செய்திகளைக் கேட்டு அதன்மூலம் அவர்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதை உறுதிப்படுத்துவது அவர்களுடைய வேலையாகும். அப்போது அவர்களால் சரியான செய்தியை தெளிவாக மற்றவர்களுக்குக் கூறமுடியும்.

வாசிக்கவும்

வசனங்கள் 1~7 வரை வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

"நான் சொல்லுகிறதைச் சிந்தித்துக்கொள்" என்று பவுல் 7ம் வசனத்தில் கூறுகிறார். பவுல் கூறுவது மிகவும் முக்கியமானதால் நாம் அதைக் குறித்துக் கவனமாக சிந்திக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

புரிந்து கொள்வதற்கு உதவியாக கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகிக்கவும்.

வசனங்கள் 1~2ஐ மீண்டும் வாசிக்கவும்.

- பவுல் தீமோத்தேயுவுக்குச் செய்யும்படி கூறுவதென்ன? (வச. 2)

பவுல் 2ம் வசனத்தில் தீமோத்தேயுவுக்கு செய்யும்படி கூறுவதே முக்கிய விடயமாகும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:1-7

1ம் வசனம் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று கூறுகிறது. வசனங்கள் 3-6ல் பவுல் அதைச் செய்வது எவ்வளவு கடினம் என்று காட்டுகிறார்.

- *மீண்டும் 2ம் வசனத்தை வாசிக்கவும். தீமோத்தேயு உண்மையில் செய்ய வேண்டியது என்ன? உங்கள் வார்த்தைகளில் எழுதவும்.*

கிறிஸ்து பவுலுக்குச் செய்தியைக் கொடுத்தார். அதை பவுல் தீமோத்தேயுவுக்கு கையளித்தார். தீமோத்தேயு அதை நம்பகமான மனிதர்களுக்குக் கூற வேண்டும். "நம்பகமான" என்பது "நம்பக்கூடியவர்" என அர்த்தப்படும். அவர்கள் அதை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

- *2ம் அதிகாரத்தின் 1ம் வசனம் 1ம் அதிகாரத்துடன் சம்பந்தப்படுகின்றது. தீமோத்தேயு மற்றவர்களுக்குக் கையளிக்க வேண்டியது என்ன? (1:13~14)*

- *அதைச்செய்வதற்கு தீமோத்தேயு எங்கிருந்து சக்தியைப்பெற்றுக் கொள்வார்? (2:1)*

- *பவுல் ஏன் இங்கு கிருபை என்னும் வார்த்தையை உபயோகிப்பது ஊக்குவிப்பதாயிருக்கிறது? (2:1)*

இயேசுவின் உண்மையான செய்தியை தீமோத்தேயு மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய கிருபை அதற்கு அவருக்கு சக்தியைக் கொடுக்கும். கிருபை என்பது நாம் பெற்றுக் கொள்ள தகுதியில்லாத ஒன்றாகும். தீமோத்தேயு தனக்கு சக்தியில்லையென்று நினைக்கலாம். ஆனால் நாம் தகுதியில்லாவிட்டாலும் நமக்கு சக்தியைக் கொடுப்பவர் தேவனே.

📖 வசனங்கள் 3-6 மீண்டும் வாசிக்கவும்

பவுல் உபயோகிக்கும் மூன்று உதாரணங்களைக் குறித்து சிந்திக்கவும். (போர்ச்சேகவன், ஓட்டப்பந்தய வீரன், விவசாயி). ஓவ்வொரு உதாரணத்தைக் குறித்தும் இப்படிச் சிந்திக்கவும்.

- *தான் ஒரு கடின உழைப்பாளி என்பதை எப்படி அவன் காட்டுகிறான்?*

- *தான் நம்பகமானவன் என்பதை எப்படி அவன் காட்டுகிறான்?*

- *அவன் கடின உழைப்பாளியும், நம்பகமானவனுமாய் இருப்பதினால் கிடைக்கும் பலன் என்ன?*

"பிழைப்புக்கடுத்த அலுவல்கள்" என்பது நமது அனுதின வாழ்க்கையைக் குறிக்கும். ரோமப் போர் சேவகர்கள் அதிக கட்டுப்பாடுடையவர்கள். அவர்கள் ஒருபோதும் போரைவிட்டு விட்டு தங்கள் வீட்டுக்காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். ஒரு ரோமப் போர் சேவகனாயிருப்பது மிகவும் கடினம். அவர்கள் எப்போதும் அவர்களுடைய அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

பவுலின் காலத்தில் ஒலிம்பிக் (Olymplic விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்காக நடந்தன (1கொரிந்தியர் 9:24-27ஐயும் பார்க்கவும்). அதில் முக்கிய நிகழ்ச்சிகள் ஓட்டப்

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:1-7

பந்தயமும், மல்யுத்தமுமாய் இருந்தன. அதைப்போல இன்று எல்லா விளையாட்டுகளுக்கும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் இருக்கின்றன.

7ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்

- நீங்கள் இந்த பகுதியைப் போதிக்கும் போது இதைப்புரிந்துக் கொள்ள தேவன் உங்களுக்குச் செய்ய வேண்டிய உதவி என்ன?

அதைக்குறித்து இப்போது ஜெபிக்கவும்!

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- நாம் 2ம் வசனத்தில் முக்கிய விடயத்தை எப்படிப் பார்த்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள்.

போதகர்களும், சபைத்தலைவர்களும் மற்றவர்களை நல்ல போதகர்களாக மாற்றப் பயிற்சியளிப்பவர்களாய் இருக்க வேண்டும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:1-7

முக்கிய விடயம்
உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இதைப்போன்றிருக்கலாம்: போதகர்களும், சபைத் தலைவர்களும் மற்றவர்களை நல்ல போதகர்களாக மாற்றப் பயிற்சியளிப்பவர்களாய் இருக்க வேண்டும்.

உப விடயம்
வேதப்பகுதியின் அமைப்பை நோக்கவும். உங்கள் செய்தியை எப்படி தயாரிக்க திட்டமிடுவீர்களென்பதை சிந்திக்கவும்.

வசனங்கள் 1-2: இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருந்து அவருக்கு ஊழியம் செய்யத் தேவையான சக்தியை அவருடைய கிருபையின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு போதகரின் வேலை மற்றவர்கள் இயேசுவைக் குறித்த சரியான சத்தியத்தைப் போதிக்க அவர்களைப் பயிற்றுவிப்பதாகும். அப்போது அவர்கள் அதை மற்றவர்களுக்குச் கற்றுக்கொடுக்க முடியும்.

வசனங்கள் 3-6: இது எவ்வளவு கடினம் என்பதை விளக்க அங்கே மூன்று உதாரணங்கள் கூறப்பட்டுள்ளன. அதற்கான பரிசை இறுதியில் பெற்றுக்கொள்வோம் என்பதையும் இந்த உதாரணங்கள்

காட்டுகின்றன.

போர்ச்சேவகன் அவனுடைய தளபதியை மகிழ்விக்க அவருடைய உத்தரவுகளைப் பின்பற்றவேண்டும்.

ஓட்டப்பந்தய வீரன் பரிசைப் பெற்றுக்கொள்ள விதிமுறைகளைப் பின்பற்றி ஓடவேண்டும்.

ஒரு நல்ல அறுவடையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், விவசாயி கடினமாக உழைக்கவேண்டும்.

இந்த வேதப்பகுதியை எப்படிப் பிரிக்கலாம் என்பதைக் குறித்துச் சிந்திக்கவும்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் தெளிவானதொரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும். இந்த மூன்று உதாரணங்களை வைத்து நீங்கள் உங்கள் செய்தியைத் திட்டமிடலாம். பவுலைப்போல நீங்கள் 2வது வசனத்தை இந்த உதாரணங்களை உபயோகித்துக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக:

1. ஒரு போர்ச்சேவகன் எப்போதும் அவன் தளபதியை திருப்திப்படுத்த விரும்புவான்.
2. ஒரு ஓட்டப் பந்தய வீரன் எப்போதும் அதில் வெற்றியடைய விரும்புவான்.
3. ஒரு விவசாயி எப்பொழுதும் ஒரு நல்ல அறுவடையை விரும்புவான்.

இந்த உப விடயங்களை உபயோகித்து எப்படி நாம் நல்ல போதகர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதைக் காட்ட முடியும் என்பதைக் குறித்துச் சிந்திக்கவும்.

இந்த உப விடயங்களை சரி பார்க்கவும்:

- எல்லா வசனங்களும் உட்புகுத்தப்பட்டுள்ளனவா?
- உப விடயங்கள் சிறிதாகவும் மனதில் வைத்துக் கொள்ள எளிதாகவும் இருக்கின்றனவா?

 # உதாரணத்துடன் விளக்குதல்

நீங்கள் எப்போதும் நம்பக்கூடிய ஒன்றைக் குறித்து சிந்திக்கவும். அது நம்பகமானது. அது எப்போதும் செயற்படும். அது ஒருபோதும் ஏமாற்றமடையச் செய்யாது. அது ஒரு ஆயுதமாகவோ, அல்லது மிருகமாகவோ இருக்கலாம்.

! பிரயோகித்தல்

தீமோத்தேயு எபேசுவிலுள்ள சபையின் ஒரு தலைவராயிருந்தார். இது முக்கியமாக போதகர்கள், மூப்பர்கள், கற்றுக் கொடுப்பவர்கள் போன்றவர்களுக்குப் பொருந்தும்.

- இந்த வசனங்களின்படி ஒரு உண்மையான சபைப்போதகர் என்ன செய்ய வேண்டும்?

எப்படி ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்க வேண்டுமென்பதை உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

- இந்த வசனங்களின்படி ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்ன செய்ய வேண்டும்?

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:1 - 7

மறுபரிசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:1 - 7

ஆரம்பிக்கவும்

உங்களுடைய முக்கிய உதாரண விளக்கத்துடன் நீங்கள் உங்கள் பேச்சை ஆரம்பிக்கலாம்: நீங்கள் எப்போதும் நம்பக்கூடிய ஒன்றைக் குறித்துச் சிந்திக்கவும். அது ஒருபோதும் ஏமாற்றமடையச் செய்யாது. அது ஒரு ஆயுதமாகவோ அல்லது? மிருகமாகவோ இருக்கலாம்.

இந்த வசனங்கள் யாவும் உண்மையான போதகர்களாக இருப்பதைக் குறித்ததாகும்.

வசனங்கள் 1-2ல் பவுல் தீமோத்தேயுவை ஒரு நம்பகமான போதகராய் இருக்கும்படி கூறுகிறார். மற்ற மனிதர்களுக்கு தீமோத்தேயு இயேசுவைக் குறித்த செய்தியைக் கூற வேண்டும். அதன்பின் அதை மற்றவர்களுக்குக் கூறுவது அவர்களுடைய வேலையாகும்.

இது மிகவும் முக்கியமான வேலை. நல்ல போதகர்கள் எப்போதும் நல்ல போதகர்களாய் இருப்பதற்கு மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பார்கள்.

வேதாகமத்தைக் கற்றுக்கொடுப்பதும், அதைப் போதிப்பதற்கு மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதும் ஒரு எளிதான வேலையென்று சிலர் நினைக்கிறார்கள். இந்த உதாரணங்கள் அது மிகவும் கடினமானது என்பதைக் காட்டுகின்றன - ஆனால் அதற்கு இறுதியில் நல்ல பலன் உண்டு.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:1 -7

இந்த உதாரணங்கள், அனைத்துக் கிறிஸ்தவர்களும் எப்படியிருக்க வேண்டுமென்பதைக் காட்டுகின்றன.

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. ஒரு போர்ச்சேவகன் தளபதியை சந்தோஷப்படுத்த விரும்புவான் (வச.1-2)

அவனுடைய தளபதி கூறும் எதற்கும் ஒரு போர்ச்சேவகன் எப்போதும் கீழ்ப்படிய வேண்டும். எந்த ஆணைக்குக் கீழ்ப்படிவது என்பதை அவன் தெரிவு செய்ய முடியாது. அவன் உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். ஒரு போர்ச்சேவகன் திடீரென்று யுத்தத்தை விட்டுவிட்டு அவனுக்கு விருப்பமானதைச் செய்ய நினைத்தால் என்ன நடக்கும்?

விசுவாசிகள் இயேசுவின் போர்ச்சேவகர்கள். அது கடினமாயிருந்தாலும், நாம் இயேசுவின் அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்?

இயேசுவின் செய்தியை மக்கள் மற்றவர்களுக்குப் போதிக்க நாம் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். சீஷர்களை உருவாக்கும் விடயத்தில் நாம் கடினமாக உழைக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.

2. ஓட்டப்பந்தய வீரன் ஓட்டத்தில் வெற்றியடைய விரும்புவான் (வச. 5)

ஒரு ஓட்டப்பந்தய வீரன் ஓட்டத்தை ஓடி முடிக்கா விட்டால் அவனால் பரிசை பெற முடியாது. அதைப்போலவே நாம் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, தேவன் சொல்லும் யாவற்றையும் பின்பற்ற வேண்டும்.

தேவன் சொல்வதில் ஒரு பகுதியை மட்டும் போதிப்பது போதாது. நாம் முழு வேதாகமத்தையும் கற்று அதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மக்களுக்கு முழு வேதாகமத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும் - பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு.

பந்தயத்தில் ஒருவன் பாதியில் ஓட்டத்தை நிறுத்தி விட்டால் அவனால் வெற்றியடைய முடியாது. நாம் யாவரும் ஓட்டத்தை ஓடி முடிப்பவர்களாயிருக்க வேண்டும் (1கொரி. 9:24-27).

நாம் இயேசுவுக்கு இறுதிவரை விசுவாசமாயிருந்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். நாம் தொடர்ந்து கற்கவும், மற்றவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும்.

3. ஒரு விவசாயிக்கு நல்லதொரு அறுவடை தேவை (வச. 6)

நல்லதோர் அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்காக விவசாயிகள் கடுமையாக

உழைப்பார்கள். அப்படிச் செய்யா விட்டால் அவர்களுக்கு சாப்பிட ஒன்றுமிருக்காது. அவர்கள் உண்மையான வேலைக்காரர்களாயிருக்க வேண்டும், காலநிலை மோசமாய் இருந்தாலும் கூட.

ஜெபிப்பதிலும், கற்பதிலும், போதகர்களும், கற்றுக் கொடுப்பவர்களும் கடினமாக உழைக்க வேண்டும். அப்போது மக்கள் வாழ்க்கையில் வளர்ச்சியும், கனியும் வரத்தக்கதாக தேவன் கிரியை செய்வதைக் காணலாம். இது அதிக மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

அனைத்து உதவியும், புரிந்து கொள்ளுதலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலேயே வருகின்றன என்று 1ம் வசனமும் 7ம் வசனமும் நமக்கு நினைவூட்டுகின்றன.

! பிரயோகித்தல்

உங்கள் போதகர் உண்மையுள்ளவராய் இருக்கின்றாரா என்பதை எப்படி அறிவது? உங்கள் சபை உண்மையுள்ளதாய் இருக்கிறது என்பதை எவ்வாறு அறிவது? அது அதிக ஜனங்கள் வருவதாலோ,அல்லது சபையில் நல்ல இசை இருப்பதாலோ, அல்லது அதிக நேரம் ஆராதனை நடப்பதாலோ அல்ல, ஆனால் எவ்வளவு கவனமாக தேவனுடைய வார்த்தை போதிக்கப்பட்டு, விசுவாசிக்கப்பட்டு, கீழ்ப்படியப்படுகிறது என்பதே முக்கியமாகும். மக்கள் பயிற்சியளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஒழுக்கம் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதா? அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் படுவதை மக்கள் மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது எப்படி என்பதை கற்றுக் கொள்கிறார்களா? தேவனுக்கு விசுவாசமான உண்மையுள்ள சபையின் அடையாளங்கள் இவைகளே.

அனைத்துக் கிறிஸ்தவர்களும் தேவனுடைய வார்த்தைக்கு மட்டுமே செவி கொடுக்க வேண்டும். அவர்கள் தேவனின் வழியை மட்டுமே பின்பற்ற வேண்டும். அவர்கள் தேவனுக்குச் சேவை செய்வதற்கு தங்களை பூரணமாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.

நீங்கள் ஜெபிப்பதிலும், வேதாகமத்தைப் கற்பதிலும் கடுமையாக உழைக்கின்றீர்களா? வேதாகமம் கூறுவதற்கு நீங்கள் கீழ்படிவீர்களா? உங்கள் வாழ்க்கையில் கனி இருக்கின்றதா?

! நிறைவு செய்யவும்

எபிரேயர் 12:1-2 வாசிக்கவும். “இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.”

நீங்கள் ஓட்டத்தை ஓடுகிறீர்களா? நீங்கள் இன்னொருவருடன் தேவனுடைய வார்த்தையைப் கற்கிறீர்களா? தேவனுடைய வார்த்தையை நன்றாக அறிந்து கொள்வதற்கு நீங்கள் இன்னொருவருக்கு உதவி செய்கிறீர்களா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:1-7

ⓘ ஜெபிக்கவும்
இன்னும் அநேகமான மக்கள் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளவும், அதை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும் தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொண்டதின்படி விசுவாசிகள் தேவனுக்கு ஊழியம் செய்ய தங்களை பூரணமாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

5 துன்பம் அனுபவித்தலும் பரலோகமும்

பின்னணி

- தீமோத்தேயு 2:1-7 வசனங்கள் என்ன கற்றுக்கொடுக்கின்றன என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவும்.
- முன்பு துன்பம் அனுபவித்தலைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு இந்தப் பகுதியில் கூறியதென்ன?
- வசனங்கள் 11-13 ஐ 'நம்பகமான' அல்லது 'உண்மையுள்ள' வார்த்தையென்று பவுல் குறிப்பிடுகின்றார். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் இப்படியான வார்த்தைகளைத் தேடிப்பார்க்கவும்.

ஒரு கிறிஸ்தவனாக மாறுவது நம்மை துன்பம் அனுபவிப்பதிலிருந்து விடுவிக்காது. அது அதை அதிகரிக்கப் பண்ணும்! இயேசு தன் சிலுவையை சுமக்க விருப்பமுள்ளவராய் இருந்தார். அதுபோல அவரைப் பின்பற்றுகிறவர்களும் அதே சிலுவையை சுமக்க விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். மாற்கு 8ம் அதிகாரம் 31-38ஐ வாசிக்கவும்.

ஒரு "உண்மையுள்ள" வார்த்தையை பவுல் கூறுகிறார். (வச.11-13). மற்றவை 1 தீமோத்தேயு 1:15,3:1,4:9-10, தீத்து 3:3-8 முதலிய வசனங்களில் கூறப்படுகின்றன. ஒவ்வொரு வார்த்தையும் ஒரு முக்கியமான உண்மையைக் கூறுகின்றது. இவை எல்லா சபைகளிலும் கற்றுகொள்ளப்படுகின்றன. இது ஒரு பாடலாகவும் இருக்கலாம்.

வாசிக்கவும்

📖 வசனங்கள் 8-13ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு இது உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

- ஒருமுறைக்கு மேல் கூறப்பட்டிருக்கும் சொற்கள் எவை?

📖 வசனங்கள் 8-10 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- பவுல் தீமோத்தேயுவிடம் இயேசு கிறிஸ்துவைக் குறித்து எதை நினைவுகூரும்படி கூறுகிறார்.

"கிறிஸ்து" என்பது இயேசுவே வாக்களிக்கப்பட்ட ராஜா என்பதைக் குறிக்கிறது. தாவீதின் பரம்பரையில் வரும் ஒருவர் நிரந்தரமாக ஆட்சி செலுத்துவார் என்று தேவன் தாவீதுக்கு வாக்களித்திருந்தார். (2சாமுவேல் 7:11-13).

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:8 -13

இயேசுவுக்காக துன்பம் அனுபவிப்பது நல்லது. ஏனென்றால் மீண்டும் உயிரோடெழுந்த ராஜாக்களுக்கெல்லாம் ராஜா அவரே! இயேசு பரலோகத்திற்குப் போகும்முன் அவர் சிலுவையில் பாடுபட்டார் என்பதை நினைவில் கொள்ளவும்.

- பவுல் என்னவிதமாகப் பாடனுபவிக்கிறார் (வச. 9)
- ரோம அதிகாரிகள் பவுலை சிறையில் அடைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் செய்ய முடியாதது என்ன? (வச. 9)

பல இடங்களுக்குச் சென்று பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியாமல் ரோம அதிகாரிகள் அவரை சங்கிலிகளால் கட்டி சிறையில் அடைத்து வைக்க முடியும். ஆனால் தேவனுடைய செய்தி எல்லா இடத்திலும் பரவுவதை தடுக்க முடியாது. விசுவாசிகள் அதிகமாக துன்புறுத்தப்படும் வேளைகளில் தேவனுடைய செய்தி எப்போதுமே துரிதமாகப் பரவும் (அப்போஸ்தலர் 8:1).

- பவுல் ஏன் துன்பம் அனுபவிக்க விருப்பமுள்ளராய் இருந்தார்? (வச. 10)
- 'தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள்' யார்? (வச. 10).
- பவுல் எதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்? (வச.10)

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை மக்கள் விசுவாசிக்குப்போது அவர்கள் பாவங்களிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். தேவன் மக்களில் யாரை, எப்படி இரட்சிப்பது என்பதை அவர் திட்டமிட்டிருக்கிறார் என்பதை அறிவது மிகவும் சந்தோஷமான காரியமாகும். தேவன் இரட்சிக்கப்படுபவர்களை தெரிந்து கொண்டிருக்கிறார்.

மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டு நிரந்தரமாக தன்னுடன் பரலோகத்தில் சந்தோஷம் அனுபவிப்பதற்காக பவுல் துன்பம் அனுபவிப்பதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்!

📖 வசனங்கள் 11-13 வரை மீண்டும் வாசிக்கவும்

"மறுதலிப்பது" என்பது இயேசுவை நமக்குத் தெரியாது என்று கூறுவது.

- இயேசுவுடன் மரித்தல் என்றால் என்ன? (வச.11)
- இந்த வசனங்களில் என்ன வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது?
- எச்சரிக்கை என்ன?
- பவுல் 'நாம்' என்று இந்த வசனங்களில் குறிப்பிடுவதின் அர்த்தம் என்ன?

"இயேசுவுடன் மரிப்பது" என்பது என்ன நேரிட்டாலும் இயேசுவுக்கு "ஆம்" என்று சொல்வதாகும். நான் என்னைக் குறித்து சிந்திக்காமல், இயேசுவுக்கு எது நல்லதென்று சிந்திப்பதாகும். உண்மையான விசுவாசிகள் பரலோகத்தில், "அவருடன் வாழ்ந்து" "அவரோடே கூட ஆளுகையும்" செய்வார்கள்.

நாம் எப்போதும் இயேசுவைக் குறித்து வெட்கப்படுவோமானால், அது நாம் உண்மையான

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:8-13

கிறிஸ்தவர்கள் அல்ல என்பதைக் காட்டும் (மாற்கு 8:38).

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- இந்த வசனங்கள் துன்பம் அனுபவிப்பதைக் குறித்து என்ன போதிக்கின்றன?

நாம் இயேசுவுக்காக துன்பம் அனுபவிக்க விருப்பப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவுக்காக துன்பம் அனுபவிக்கும்போது நாம் பரலோகம் போவதை எதிர்பார்க்க முடியும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:8-13

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: நாம் கிறிஸ்துவுக்காக துன்பம் அனுபவிக்க விருப்பப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவுக்காக துன்பம் அனுபவிக்கும் போது, நாம் பரலோகம் போவதை எதிர்பார்க்கமுடியும்.

உப விடயம்

இந்த வேதப்பகுதியை எப்படி பிரிப்பது என்று சிந்திக்கவும்.

அதை நீங்கள் மூன்று பகுதிகளாய் பிரிக்கலாம்.

இயேசுவும் பாடனுபவித்தலும் (வச.8):

- இயேசு பாடனுபவித்து, மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார். அவர் இப்போது பரலோகத்தில் இருக்கிறார்.
- இயேசு பெரிய ராஜா! அவருக்காக துன்பம் அனுபவிப்பது நல்லது!

பவுலும் பாடனுபவித்தலும் (வச. 9-10):

- இயேசுவைக் குறித்த நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகப் பவுல் பாடனுபவிக்கிறார்.
- மற்றவர்கள் நற்செய்தியை

கேட்பதின் மூலம் இரட்சிக்கப் படுவார்கள் என்றபடியால், பவுல் பாடனுபவிக்க விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

- பவுல் அவர் மரித்தவுடன் பரலோகம் போவாரென்று நிச்சயமாய் நம்பினார்.

நாமும் பாடனுபவித்தலும் (வச. 11-13):

- நாம் கிறிஸ்துவுக்காகப் பாடனுபவித்தால் அவரோடு நாம் எப்போதும் வாழ்வோம்.
- நாம் கிறிஸ்துவைப் பின்பற்ற மறுத்தால், அவர் நம்மைத் தள்ளி விடுவார். அப்போது நாம் எப்போதும் பாடனுபவிப்போம்.

ஓவ்வொரு உப விடயத்திற்கும் தெளிவானதொரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும்.

இந்த வசனங்கள் யாவும் பாடனுபவித்தலையும், பரலோகத்தையும் குறித்துப் பேசுகின்றன. இந்த முக்கிய வார்த்தைகளை எப்படி உங்கள் உப விடயங்களில் உபயோகிக்க முடியும்?

உதாரணமாக:

1. இயேசு பரலோகம் போவதற்கு முன் பாடனுபவித்தார். (வச. 8)
2. மற்றவர்கள் பரலோகம் போகவேண்டும் என்பதற்காக பவுல் பாடனுபவித்தார். (வச. 9-10)
3. நாம் பாடனுபவித்தாலும், பரலோகத்தைக் குறித்த எதிர்பார்ப்பு நமக்கு இருக்கிறது.

உங்கள் உப விடயங்கள் முக்கிய விடயத்தை விளக்குகின்றதா என்பதை சரிபார்க்கவும்.

⌗ உதாரணத்துடன் விளக்குதல்

இந்த வசனங்கள் யாவும் இயேசுவுக்காக பாடனுபவித்தலைக் குறித்துப் பேசுகின்றன. நீங்கள் அறிந்த ஒருவரோ அல்லது நீங்கள் கேள்விப்பட்ட உண்மைச் சம்பவத்தின் மக்களோ அவர்கள் விசுவாசிகள் என்ற காரணத்தினால் எப்படி பாடனுபவித்தார்கள் என்பதைக் குறித்து சிந்திக்கவும்.

இது நாம் யாவரும் வீழ்ந்து போனதொரு உலகத்தில் வாழ்வதால் அனுபவிக்கும் பாடல்ல - வியாதிகள் போன்றவை. இது நாம் இயேசுவைக் குறித்து பேசுவதால் வரும்பாடு. நீங்கள் வேதாகமத்திலிருந்து ஒரு உதாரணத்தை உபயோகிக்கலாம். (ஸ்தேவான் - அப்போஸ்தலர் 7)

ⓘ பிரயோகித்தல்

- ‘இயேசுவை நினைத்துக்கொள்’ என்று ஏன் பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறாரென நீங்கள் நினைக்கின்றீர்கள்?

எங்கள் நிலைமை மோசமாய் இருக்கும்போது பொதுவாக நம்மைக் குறித்தே சிந்திப்போம். நாம் இயேசுவையும், அவர் நமக்காக செய்ததையும் குறித்து சிந்திக்க மறந்து விடுகிறோம்.

- பாடனுபவித்தலுடன் தொடர்ந்து முன்செல்ல வேண்டியதற்கான காரணங்களை பவுல் தருகிறார். அவை என்ன?

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:8 – 13

- இயேசுவுக்காகப் பேசும் உங்கள் சபையின் விசுவாசிகள் அனுபவிக்கும் பாடுகள் என்ன? இந்த வசனங்கள் மூலம் எப்படி நீங்கள் அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள்?

மறுபரிசீலனை செய்தல்
நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:8 – 13

ஆரம்பிக்கவும்
இயேசுவைக் குறித்த சாட்சியின் நிமித்தம் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு நாடுகளில் மரிக்கிறார்கள்.

உதாரணம் காட்டவும்: நீங்கள் அறிந்த அப்படியான சில மக்களைக் குறித்து சில உதாரணங்களைக் கூறவும்.

அவருக்காக ஒவ்வொருவரும் மரிக்கத் தயாராக இருக்க வேண்டுமென்று இயேசு போதிக்கிறார் (மாற்கு 8:34-35). பொதுவாக வேதனையிலிருந்து விலகி ஓடவே நாம் விரும்புவோம். நாம் ஏன் நமது சிலுவையை சுமக்க வேண்டும்? நாம் துன்பம் அனுபவிக்கும் போது நமக்கு உதவக் கூடியது என்ன? இந்தக் கேளவிகளுக்கு சில பதில்களை இந்த வசனங்களில் பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கிறார்.

விளக்கவும்
உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. இயேசு பரலோகத்திற்கு செல்வதற்கு முன் அவர் பாடனுபவித்தார் (வச. 8)

இயேசுவே கிறிஸ்துவும், இராஜாதி இராஜனுமாயிருப்பவர். அவர் எல்லாவற்றின் மேலும் ஆட்சி

செலுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் தாவீதுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மிகப்பெரிய இராஜா இயேசுவே ஆகும். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்ததால் அவர் மிகப்பெரியவர் என்பதில் சந்தேகமில்லை. அவர் மிகப்பெரியவராய் இருப்பதினால் அவருக்காக துன்பமனுபவிப்பது நல்லது.

இயேசு ஆட்சி செலுத்துபவராயிருந்தால் நீங்கள் அவருக்காக துன்பம் அனுபவிப்பதை அவர் நன்மையாக மாற்றுவார். மகிமையையும், பரலோகத்தையும் அடையும் முன் இயேசு பாடனுபவித்தார் என்பதை நினைவில் கொள்ளவும்.

இயேசுவைக் குறித்த செய்தி துன்பம் அனுபவிக்கும் செய்தியாகவும், அதேவேளையில் அது பரலோகத்தைக் குறித்த செய்தியாகவும் இருக்கிறது. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற விதத்தில் நாம் பாடனுபவித்தலை எதிர்பார்க்க வேண்டும். ஆனால் நாம் பரலோகத்தையும் எதிர்பார்க்க முடியும்.

2. மற்றவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க வேண்டுமென்பதற்காக பவுல் பாடனுபவித்தார். (வச. 9-10)

பவுல் அவர் ஏன் துன்பம் அனுபவிக்கிறார் என்பதையும், அதை தேவன் நன்மைக்கு ஏதுவாக உபயோகிக்கிறார் என்றும் கூறுகிறார். பவுல் வேதனையை விரும்பவில்லை. ஆனால் மற்றவர்களின் நன்மைக்காக அவர் துன்பம் அனுபவிக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

பவுல் சிறையிலிருக்கிறார் ஆனால் அது தேவனின் வேலையை நிறுத்தவில்லை. சிறைச்சாலையில் சிறைக்காவலனிடம் அவர் இயேசுவைப் பற்றிக் கூறினார் (பிலிப்பியர் 1:12-14). தேவனுடைய வசனம் கட்டப்பட்டிருக்கவில்லை. அது இன்னும் சுதந்திரமாக தன் வேலையை செய்கின்றது. பவுல் சிறையிலிருக்கும்போது மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கிறார்கள். பவுல் எங்கு சென்றாலும் அங்கு துன்பம் அனுபவித்தார். மக்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்படாவிட்டால் அவர்களால் பரலோகம் போக முடியாது. எனவே பவுல் அதை செய்தார். மற்றவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று பவுல் விரும்பினார்.

3. நாம் பாடனுபவிக்கிறோம் ஆனால் பரலோகத்தையும் எதிர்பார்க்க முடியும் (வச. 11-13).

கிறிஸ்தவ வாழ்க்கை “மரிப்பதை” குறித்ததாயிருக்கிறது. அதன் அர்த்தம் நாம் நமது விருப்பத்திற்கு “இல்லை” என்றும், அது எவ்வளவு நம்மை நோகப்பண்ணினாலும், இயேசுவின் விருப்பத்திற்கு “ஆம்” என்றும் கூற வேண்டும் என்பதேயாகும். இயேசுவைப் பின்பற்றுவது கடினமான வேளைகளுக்கூடாய் கடந்து செல்வதாகும். ஆனால் நாம் இயேசுவுடன் வாழ்ந்து அவருடன் ஆட்சி செய்வதை எதிர்பார்க்க முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:8-13

நாம் இயேசுவைக் குறித்து வெட்கப்படுவோமானால் அப்போது நாம் அவரை பின்பற்றுகிறவர்களல்ல என்று 12ம் வசனம் எச்சரிக்கின்றது.

சில வேளைகளில் நாம் இயேசுவை ஏமாற்றமடையச் செய்கிறோம். நாம் அவருக்காக பேச வேண்டிய நேரத்தில் பேசுவதில்லை. நாம் தைரியமாய் இருக்க வேண்டிய நேரத்தில் பயப்படுகிறோம். நாம் அவருக்கு விசவாசமுள்ளவர்களாய் இல்லாமலிருக்கும்போது கூட தேவன் விசுவாசமுள்ளவராய் இருக்கிறாரென்பதை அறிந்து கொள்வது நல்லது (வச.13).

ⓘ பிரயோகித்தல்

இயேசுவுக்காக பாடனுபவிக்க வேண்டியதற்கான காரணங்களை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு நினைவுபடுத்தவும்.

இயேசுவை நினைக்கவும் - ஒவ்வொரு நாளும் அவரையும் அவர் செய்ததையும் குறித்து சிந்திக்கவும்.

நீங்கள் அறிந்திருக்கக்கூடிய இயேசுவுக்காக துன்பம் அனுபவிப்பவர்களின் உதாரணத்தின் மூலம் ஊக்குவிக்கப்படவும் (‘ஆரம்பிக்கவும்’ பகுதியைப் பார்க்கவும்).

அது கடினமாயினும், இயேசுவைப்பற்றி தைரியமாக பேச உங்கள் பேச்சை கேட்பவர்களை ஊக்கப்படுத்தவும். நீங்கள் இந்தக் கேள்விகளைக் கேட்கலாம்:

- மற்றவர்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்படுவதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?
- இந்த வாரம் இயேசுவைப் பற்றி யாரிடம் பேசுவீர்கள்?
- அநேகர் வேறுவழிகளை பின்பற்றும்போது, நீங்கள் இயேசுவுக்காகவும், சத்தியத்திற்காகவும் எப்படி பேசுவீர்கள்?

இயேசு மிகவும் பெரியவராயிருப்பதால் அவருக்காக பாடனுபவிப்பது நல்லது என்று அவர்களுக்கு நினைவுபடுத்துங்கள்.

ஒருவர் உண்மையிலேயே ஒரு கிறிஸ்தவனா என்பதை அறிந்துகொள்ள இதோ ஒரு சோதனை:

- இயேசுவுக்காக துன்பமனுபவிக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறீர்களா?
- உங்களை விட நீங்கள் இயேசுவை நேசிக்கின்றீர்களா?

ⓘ நிறைவு செய்யவும்

உங்கள் பேச்சை கேட்பவர்கள் மனந்திரும்பி தங்களுக்காக வாழ்வதை விட்டுவிட அவர்களை ஊக்கப்படுத்தவும். நாம் இயேசுவை நம்பி அவருக்காக மாத்திரமே ஜீவிக்க வேண்டும்.

பரலோகம் எவ்வளவு மகத்துவமானதாயிருக்கும் என்பதை சிந்திக்கவும். பரலோகம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்பதை சிந்திக்கவும்! நாம் அதிக பாடனுபவித்தாலும், பரலோக வாழ்க்கையுடன் அதை ஒப்பிடும்போது அது மிகச் சிறிதாகவே இருக்கும்!

இயேசுவுக்காகப் பாடுபடுபவர்களுக்கு ஜெபிக்க சற்று நேரத்தை ஒதுக்கவும்.

➙ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:8-13

ⓘ ஜெபிக்கவும்
தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் கூறியவற்றின் மூலம் உங்கள் சபையில் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் விசுவாசிகள் ஊக்குவிக்கப்படும்படி ஜெபிக்கவும்.

தங்களுக்காக வாழும் மக்கள் மனந்திரும்பி இயேசுவுக்காக வாழ தங்களை அர்ப்பணிக்க ஜெபிக்கவும்.

6 நல்ல வார்த்தைகளும் தீய வார்த்தைகளும்

பின்னணி

- ‘இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டு’ என்று பவுல் 14ம் வசனத்தில் கூறுகிறார். அவர் எதைக்குறித்து அப்படி எழுதுகிறார்? 2:1~13ஐ மீண்டும் பார்க்கவும்.
- முதல் இரண்டு அதிகாரங்களில் எபேசு சபையைக் குறித்து நீங்கள் கற்றது என்ன?
- பவுல் நல்ல ஊழியக்காரர்களைக் குறித்து என்ன கூறுகிறார்?
- தவறான போதனைகளைக் குறித்து பவுல் என்ன கூறுகிறார்?
- 15ம் வசனத்தில் ஒரு நல்ல ஊழியக்காரனைக் குறித்ததொரு உதாரணத்தைக் கூறுகிறார். ஏன் பவுல் இந்த உதாரணத்தைக் கூறுகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

2 தீமோத்தேயு 2:15, வேதாகமத்தைப் போதிப்பவர்களுக்கு மிக முக்கியமானதொரு வசனமாகும். அநேகர் வேதவசனத்தைப் தவறாகப் போதிக்கிறவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருக்கிறார்கள். நல்ல போதகர்களாயிருப்பதற்கு கடினமான உழைப்பு தேவை. ஆனால் தேவன் அதை எதிர்பார்க்கிறார். அதுபோல் அது மக்களுக்கும் அவசியம்! தேவனுடைய சத்தியம் சரியாகப் போதிக்கப்பட வேண்டும். நல்ல வேத போதனையே சபையின் அஸ்திபாரம் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

வாசிக்கவும்

வசனங்கள் 14~19 வரை வாசிக்கவும்

மீண்டும் இந்த வசனங்களை வாசித்து பின் அவை தேவனுடைய வார்த்தையைக்குறித்து என்ன கூறுகின்றன என்பதை எழுதவும்.

புரிந்து கொள்ளவும்

இந்த வசனங்கள் நல்ல வார்த்தைகளுக்கும், கெட்ட வார்த்தைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவதைக் கவனிக்கவும்:

வச. 14: மக்களை கெடுக்கும் தீய வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கும் நல்ல வார்த்தைகளை ஞாபகப்படுத்த வேண்டும்.

வச. 15: நல்ல வார்த்தைகள் - சத்திய வார்த்தை

வச. 16-18: தீய வார்த்தைகள் - தவறான போதனை

வச. 19: நல்ல வார்த்தைகள் - தேவனுடைய வார்த்தைகள்.

வசனம் 14 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- பவுல், தீமோத்தேயுவுக்குக் கொடுக்கும் இரண்டு கட்டளைகள் என்ன?

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:14 -19

- பவுல் குறிப்பிடும் சண்டைகள் என்ன? (தீத்து 3:9 வாசிக்கவும்).
- கிறிஸ்தவர்கள் ஏன் இதைக் குறித்து சண்டை போடக்கூடாது?

தேவையற்ற காரியங்களுக்காக இந்தக் கிறிஸ்தவர்கள் வாதாடினார்கள்.

📖 வசனம் 15 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- வேதத்தைப் போதிப்பதைக் குறித்து ஒரு ஊழியக்காரனின் உதாரணம் நமக்கு என்ன கூறுகிறது?
- வேதாகமத்தைப் போதிக்கும்போது யாரை நாம் சந்தோஷப்படுத்த வேண்டும்?

ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஊழியக்காரன் ஒரு பணியை நன்றாகச் செய்யக்கூடியவன் என்பது நமக்குத் தெரியும். தேவன் யாருக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுக்கும் வரத்தைக் கொடுக்கின்றாரோ அவர்கள் மாத்திரமே வேதாகமத்தை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறவர்களாகவும், கடினமாக உழைக்க கூடியவர்களாகவும், ஜெபத்தில் தரிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்!

📖 வசனங்கள் 16-18 வரை மீண்டும் வாசிக்கவும்

"சீர்கேடான" என்றால் தீய, அல்லது முட்டாள்த்தனமான என்று அர்த்தம்.

- பவுல் குறிப்பிடும் வார்த்தைகள் எவை?
- இந்த மக்களால் போதிக்கப்படுவது சரியான போதனையா அல்லது தவறான போதனையா?
- அதன் விளைவு என்ன?

"அரிபிளவை" (Gangrene) என்பது ஒரு வியாதியாகும். அது உடலை அழுகப்பண்ணி இறக்கப்பண்ணிவிடும். அது விரைவாக ஒருவருடைய கைகளிலும், கால்களிலும் பரவிவிடக் கூடியது. அதைப்போலவே தவறான போதனைகளும், விரைவாக பரவி அதிகக்கெடுதியை விளைவிக்கும். இமெநேயும், பிலேத்தும் பரலோகத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் இப்போதே பெற்றுக் கொள்ள முடியும் என்று போதித்தார்கள். இந்தத் தவறான போதனை அநேக விசுவாசிகளைப் பாதிப்புக்குள்ளாக்கினது.

📖 19ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்.

- பவுல் யாருடைய வார்த்தைகளை குறிப்பிடுகிறார். (எண்ணாகமம் 16:5ஐ பார்க்கவும்)
- கர்த்தருடைய வார்த்தை கூறும் இரண்டு காரியங்கள் என்ன?
- பவுல் ஏன் அதை 'உறுதியான அஸ்திபாரம்' என்று கூறுகிறார்.

ஒரு வீட்டைக் கட்டும்போது, அது ஒரு உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது இடிந்து விழுந்துவிடும். இயேசு கிறிஸ்துவைக் குறித்த சத்தியமே

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:14-19

சபையின் அஸ்திபாரமாகும். இதை நாம் தேவனுடைய வசனத்தில் காண்கிறோம். **மக்கள்** என்ன கூறுகிறார்கள் என்பது முக்கியமல்ல. ஆனால் **தேவன்** என்ன கூறுகிறார் என்பதே முக்கியமாகும்.

யார் உண்மையிலேயே தேவனுக்கு சொந்தமென்பதையும், யார் அவருக்கு சொந்தமில்லாதவர்கள் என்பதையும் தேவன் அறிந்திருக்கிறார்.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயங்கள் என்ன?

வார்த்தைகள் மக்களைப் புண்படுத்தும் அல்லது அவர்களுக்கு உதவி செய்யும். தவறானவைகளைப் போதிக்கும் மக்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். ஏனென்றால் அது மக்களுக்கு நல்லதல்ல. வேதாகமம் கூறுவதை மட்டுமே போதிக்க வேண்டும். ஏனென்றால் அது மக்களுக்கு உதவியாயிருக்கும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:14-19

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இதைப்போன்றிருக்கலாம்:

வார்த்தைகள் மக்களைப் புண்படுத்தும், அல்லது அவர்களுக்கு உதவி செய்யும். தவறானவைகளைப் போதிக்கும் மக்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். ஏனென்றால் அது மக்களுக்கு நல்லதல்ல. வேதாகமம் கூறுவதை மட்டுமே போதிக்க வேண்டும். அது மக்களுக்கு உதவியாயிருக்கும்.

உப விடயங்கள்

இந்த வேதப்பகுதியை எப்படிப் பிரிப்பது என்று சிந்திக்கவும்.

பவுல் நல்ல வார்த்தைகளையும், கெட்ட வார்த்தைகளையும் குறித்து எழுதுகிறார். எனவே உங்கள் செய்தியை நீங்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முதல் உப விடயத்தில் **தீய வார்த்தைகளைக்** குறித்துக் காணலாம்.

- வச. 14 - பிரயோஜனமில்லாதவைகளைக் குறித்து வாக்குவாதம் பண்ணுதல்.
- வசனம் 16-18 - தவறான போதனை.

இரண்டாவது உப விடயத்தில்

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:14-19

நல்ல வார்த்தைகளைக் குறித்துக் காணலாம்.

- வச. 14 - ஒருவருக்கொருவர் நினைவுபடுத்த வேண்டிய வார்த்தைகள்.
- வச. 15 - கவனமாக கற்றுக்கொடுக்க வேண்டிய சத்திய வார்த்தை.
- வச. 19 - யார் உண்மையிலேயே தேவனுக்கு சொந்தமானவர்கள் என்பதை காட்டும் வார்த்தை.

ஓவ்வொரு உப விடயத்திற்கும் தெளிவானதொரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும்.

இயலுமானவரை அதைத்தெளிவாகக் காண்பிக்க முயற்சிக்கவும்.

அது மிக சாதாரணமாக இருக்கலாம். உதாரணமாக:

1. ஆபத்தான வார்த்தைகள்
2. அற்புதமான வார்த்தைகள்

உங்கள் உப விடயங்கள் முக்கிய விடயத்தை விளக்குகின்றதா என்பதை சரி பார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்குதல்

இதில் மூன்று உதாரணங்கள் காணப்படுகின்றன: ஒரு ஊழியக்காரன் (வச. 15). ஒரு தோல் சம்பந்தமான தொற்றுநோய் (வச. 17). ஒரு அஸ்திபாரம் (வச. 19)

இந்த உதாரணங்களை உங்கள் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எப்படி உபயோகிக்க முடியுமென்பதைக் குறித்து சிந்திக்கவும்:

- எந்த விதமான கடினமாக உழைக்கக்கூடிய ஊழியக்காரனை உங்கள் மக்கள் அறிவார்கள்?
- உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு அரிபிளவை நோயைப்பற்றி தெரியாவிட்டால், விரைவில் பரவி மக்களை அழிக்கும் இன்னொரு வியாதியைப்பற்றி கூறி விளக்கவும்.
- ஒரு அஸ்திபாரம் நிலைத்து நிற்பதற்கு தேவையானது என்ன? நீங்கள் ஒரு படத்தை வரைந்து காண்பிக்கலாம்.

! பிரயோகித்தல்

ஆபத்தான வார்த்தைகள்

- வேதனையை மட்டுமே கொண்டு வரக்கூடிய எந்த விடயத்தைக் குறித்து கிறிஸ்தவர்கள் விவாதிக்கிறார்கள்? உதாரணமாக கிறிஸ்தவர்கள் சில வேளைகளில் இயேசு எப்போது மீண்டும் வருவார் என்பதைக் குறித்து விவாதிப்பார்கள். ஆனால் அது எப்போதென்று நமக்குத் தெரியாது என்று வேதாகமம் கூறுகிறது (மத்தேயு 24:36)!
- வார்த்தையின் மூலம் பாவம் செய்வது ஆபத்தானது. பவுல் உதாரணமாகக்கூறும் பாவ வார்த்தைகளைக் குறித்து சிந்திக்கவும் (உதாரணம்: சண்டை, தீயவைகளைக் குறித்துப் பேசுதல், வம்பு, பொய்).
- ஆபத்தான வார்த்தைகளைப் பற்றிய வேறு உதாரணங்களைக் குறித்து சிந்திக்கவும்: சூனியம், மாந்திரீகம், சபித்தல், விவாதித்தல்.
- தீய வார்த்தைகளைக் கதைப்பவர்களைக் குறித்து நாம் என்ன கூற வேண்டும்? (வச.14,16,19)

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:14 –19

அவை மக்களை தேவனைவிட்டு எப்படி விலக்கி விடுகின்றன என்பதை நோக்கவும்.

- எந்தவித தவறான போதனைகளை விட்டு விலகியிருக்க வேண்டுமென்று உங்கள் வார்த்தையை கேட்பவர்களுக்கு நீங்கள் ஞாபகப்படுத்த வேண்டும்? இது விளைவிக்கக்கூடிய சேதத்தைக் குறித்து உரையாடவும். ஒரு பெரிய தொற்று நோயைப்போல அது எப்படி பரவுகிறது என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தவும். உதாரணமாக சில கிறிஸ்தவர்கள் தேவனிடமிருந்து அவர்களுக்கு புது செய்தி கிடைத்திருப்பதாகக் கூறுவார்கள். சிலர் நாம் பரலோகத்தின் எல்லா ஆசீர்வாதங்களையும் இங்கேயே அனுபவிக்க முடியுமென்று கூறுவார்கள். இது ஆபத்தான போதனையாகும். இதன் மூலம் மக்கள் எதிர்பார்த்து, ஏமாற்றமடைந்து விசுவாசத்தையிழந்து போவார்கள். இந்தவித போதனைகள் மக்களை தேவனை விட்டு விலக்கி விடுகின்றன.

அற்புதமான வார்த்தைகள்

- வேதத்தைப் போதிப்பவர்கள் அதில் கடினமாக உழைக்க வேண்டுமென்று பவுல் கூறுகின்றார். இதை எப்படி உங்கள் சபையிலுள்ள ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள் இளைஞர் தலைவர்கள், பெண்கள் குழுத்தலைவர்கள் முதலியோருக்குப் பிரயோகிக்க முடியும்.
- யார் உண்மையிலேயே அவருடைய ஜனங்களென்று தேவனுக்குத் தெரியும். ஆனால் யார் உண்மையிலேயே தேவஜனங்கள் என்று நம்மால் எப்படிக் கூற முடியும் (வச.19)? உண்மையிலேயே தேவனுக்குச் சொந்தமானவர்கள், தவறானவைகளைக் கூறுவதிலும், செய்வதிலுமிருந்து விலகியிருப்பார்கள்.

Ⓓ **மறுபரிசீலனை செய்தல்**
நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:14-19

ஆரம்பிக்கவும்
வார்த்தைகளிலுள்ள வல்லமையைக் குறித்து உரையாடவும். இரக்கமற்ற வார்த்தைகள் மக்களைப் புண்படுத்தும். நல்ல வார்த்தைகள் மக்களுக்கு உதவி செய்யும். ஒரு உதாரணம் கூறவும்.

இந்தப்பகுதி வார்த்தைகளைக் குறித்ததாயிருக்கிறது. வார்த்தைகள் மூலம் சண்டை போடுதல் (வச. 14), உண்மையான வார்த்தைகள் (வச. 15), ஆபத்தான வார்த்தைகள் (வச. 17), தேவனுடைய வார்த்தைகள் (வச. 19).

நாம் எப்போதும் நல்ல வார்த்தைகளை மட்டுமே உபயோகிக்க கவனமாயிருக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதிலும், போதிப்பதிலும் கவனமாயிருக்க வேண்டும்.

விளக்கவும்
உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. ஆபத்தான வார்த்தைகள்

சபையில் பலவிதமான ஆபத்தான வார்த்தைகள் இருக்கின்றன.

வேதாகமத்தில் இல்லாதவைகளைக் குறித்து கிறிஸ்தவர்கள் வாதாடுவார்கள் (வச.14).

- உங்கள் பகுதியிலிருந்து சில உதாரணங்களைக் கொடுக்கவும் ('திட்டமிடல்' பகுதியிலுள்ள பிரயோகிக்கவும் பகுதியைப் பார்க்கவும்)
- விளைவு என்ன? அது மக்களையும், சபைகளையும் கெடுக்கிறது. இந்தவகை வாக்குவாதங்கள் ஆபத்தானவை. அவை பெருமைக்கும், பிரிவினைக்கும் நேராய் வழி நடத்துகின்றன.

கிறிஸ்தவர்கள் சிலவேளைகளில் வேதாகமத்திற்கு முரணானவைகளைப் போதிக்கிறார்கள் (வச. 16-18).

தவறான போதனை அரிபிளவை நோயைப் போன்றது (அல்லது அதைப் போன்ற வேறொரு நோய் ~ திட்டமிடல் பகுதியில் 'உதாரணத்துடன் விளக்கவும்' தலைப்பின்கீழ் உள்ளவைகளைப் பார்க்கவும்). அது விரைவில் பரவி அதிக சேதத்தை விளைவிக்கிறது. உங்கள் பகுதியில் போதிக்கப்படும் தவறான போதனைகளைக் குறித்த உதாரணங்களைக் கூறி அதனால் ஏற்படக்கூடிய சேதத்தைக் குறித்து எச்சரிக்கவும்.

உங்கள் நண்பரொருவர் விஷம் குடிக்கப் போகிறார் என்பதை நீங்கள் அறிந்தால் என்ன செய்வீர்கள்? அது போலவே, நஞ்சைப் போன்ற தீய போதனைகளைக் குறித்து நாம் ஒருவரையொருவர் எச்சரிக்க வேண்டும்.

தவறானவைகளைப் போதிக்கும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களைக் குறித்துக் கவனமாய் இருக்க வேண்டும். நீங்கள் கேட்பதை, பார்ப்பதை அல்லது வாசிப்பதை எப்போதும் தேவனுடைய வார்த்தையுடன்

ஒப்பிட்டு சரிபாருங்கள். அநேக பிழையான போதனைகள் எல்லா இடங்களிலும் இப்போது பரவியிருக்கின்றன. அது கேட்பதற்கு நன்றாயிருப்பதுடன் அநேக நல்லவற்றை வாக்களிப்பவையாகவுமிருக்கும். தவறானவைகளை நம்பி தேவனைவிட்டு விலகி விட வேண்டாம்.

2. அற்புதமான வார்த்தைகள்

உங்களைக் குறித்து எவராவது தவறான காரியங்களைக் கூறினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அது உங்களைப் புண்படுத்தும் அல்லவா! நாம் தவறானவைகளை போதிக்கும் ஒவ்வொரு முறையும் வேதாகமத்தை எழுதிய தேவன் அதை செவி கொடுக்கிறார்! நாம் தவறாகப் போதித்தால் அதைக் குறித்து வெட்கப்பட வேண்டும்!

வேதாகமத்தைப் போதிப்பதற்கு கடினமாக உழைக்க வேண்டும் (வச.15), அது ஒரு தொழிலாளி தன் வேலையை நல்ல விதமாக முடித்து உறுதி செய்வதைப் போன்றதாகும் (உதாரணம் காட்டவும்). ஒரு வேத பாடத்தை அல்லது பிரசங்கத்தைத் தயார் செய்வதற்கு பல மணிநேரம் எடுக்கும். வேதத்தை வாசித்து, ஆராய்ந்து, ஜெபித்து மிகக் கஷ்டத்துடன் அதைச் செய்ய வேண்டியிருக்கும். அநேக போதகர்கள் கஷ்டப்பட்டு உழைப்பதில்லை. எனவே தேவன் அவர்கள் என்ன கூற வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் கூறுவதில்லை. நாம் போதிக்கும்போது மக்களை திருப்திப்படுத்தா விட்டாலும், நாம் தேவனை திருப்திபடுத்த முயற்சிக்க வேண்டும்.

நாம் கேட்பதை எப்போதும் சோதித்துப் பார்த்து அது வேதாகமம் கூறுவதுடன் ஒத்திருக்கின்றதா என்று பார்க்க வேண்டும் (அப்போஸ்தலர் 17:11ல் காணப்படும் உதாரணத்தைப் பார்க்கலாம்).

தேவனுடைய வார்த்தை ஒரு திடமான அஸ்திபாரம் (வச. 19). ஒரு அஸ்திபாரம் ஒரு கட்டிடத்தைத் தாங்குகிறது (உங்கள் உதாரணத்தைக் கூறவும்). தேவனுடைய வசனம் சபையை திடமாய் நிற்கப் பண்ணுகிறது!

அவருக்குச் சொந்தமானவர்கள் யாரென்று தேவனுக்குத் தெரியும். அவர்களுடைய இருதயத்தை அவர் பார்க்கிறார். விசவாசிப்பதாகக் கூறுபவர்களின் வாழ்க்கையை நாம் பார்க்கும்போது அது நமக்குத் தெரியும். வேதாகமம் கூறுகிறது: “கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன்” (வச19).

விசுவாசிகள் தவறான வார்த்தைகளுக்கும், வழிகளுக்குள்ளும் “இல்லை” என்று கூறுவார்கள்.

ⓘ பிரயோகிக்கவும்

‘*திட்டமிடவும்*’ பகுதியிலுள்ள உதாரணங்களை உபயோகிக்கவும்.

நீங்கள் பொதுவாகப் பேசும் வார்த்தைகள் என்ன - நல்ல வார்த்தைகளா அல்லது கெட்ட வார்த்தைகளா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:14-19

தவறான போதகர்களைக் குறித்து அவதானத்துடன் இருக்கவும். அவர்கள் வார்த்தைகள் ஆபத்தானவை. அவை பரவி அநேகரை அழித்து விடும்.

தேவனுடைய வார்த்தை நம்மை மாறும்படி கூறுகிறது! தவறான போதனை அதைக் கேட்பவர்களைக் கெடுத்து விடுகிறது. அப்படியானவர்களை விட்டு விலகியிருக்கும்படி தேவன் கூறுகிறார்.

நீங்கள் நல்ல வார்த்தையை - தேவனுடைய வார்த்தை பரப்புவதை உறுதி செய்து கொள்ளுங்கள். உண்மையைப் போதிக்கக் கடினமாக உழைக்க வேண்டும்.

எல்லாப் போதகர்களுக்கும், வேதாகமத்தைக் கற்றுக் கொடுப்பவர்களுக்கும் இந்த செய்தி ஒரு பெரிய சவாலாகும். அவர்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் முக்கியமான பணியைக் குறித்து அவர்கள் மிகத் தீவிரமாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு வேத வசனங்களைப் போதிப்பவர்கள் அதை சரியாகப் போதிக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

① நிறைவு செய்யவும்
இந்த செய்தி வார்த்தைகளைக் குறித்ததாயிருக்கிறது - நல்ல வார்த்தைகளும், தீய வார்த்தைகளும்.

நீங்கள் செய்தியை நிறைவு செய்யும்முன் உங்கள் செய்தியைக் கேட்பவர் அதற்குப் பதிலளிக்கவும், அதைக் குறித்து சிந்தித்து ஜெபிக்கவும் அவர்களுக்கு நேரம் கொடுக்க வேண்டும்.

↑ ஜெபிக்கவும்
தவறான போதனைகள், மற்றும் தவறான வார்த்தைகளைக் கேட்காமலிருக்க உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு தேவன் உதவி செய்யும்படி ஜெபிக்கவும்.

உங்கள் சபையில் வேதாகமத்தை கற்றுக்கொடுப்பவர்கள் வேதாகமத்தைச் சரியாக போதிக்கக் கடினமாக உழைக்க வேண்டுமென்று ஜெபிக்கவும்.

7 மிகவும் பிரயோஜனமானது

பின்னணி

- இரண்டாம் அதிகாரத்தில் பவுல் தீமோத்தேயுவிடம் எதைக் குறித்துக் கூறினார்?
- தவறான போதனையைக் குறித்து என்ன கூறப்பட்டது?
- உண்மையான போதனையைக் குறித்து என்ன கூறப்பட்டது?
- 'கர்த்தருடைய ஊழியக்காரன்' என்பது (வச.24) சபையின் மூப்பர்கள், தலைவர்கள் ஆகியோர்களைக் குறிக்கும். அவருடைய முதல் நிருபத்தில் பவுல் மூப்பர்களைக் குறித்து தீமோத்தேயுக்கு என்ன கூறியிருக்கிறார்? (1 தீமோத்தேயு 3:1-7)

தவறான போதகர்களுக்கும் உண்மையான போதகர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்தினார். இவ்வசனங்களில் தேவனுக்குப் பிரயோஜனமாயிருப்பது எப்படி என்பதை அவர் தீமோத்தேயுவுக்குக் கூறுகின்றார். நாம் போதிப்பதைப் போலவே நமது வாழ்க்கையும் இருக்க வேண்டுமென்பது முக்கியமாகும்.

வாசிக்கவும்

வசனங்கள் 20-26 வரை இரண்டு முறை வாசிக்கவும்

இந்த வசனங்கள் உங்களுக்கு எழுதப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் நீங்கள் தேவனுடைய வசனத்தைக் கற்பிக்கும் ஒருவராயிருக்கின்றீர்கள்! நீங்கள் மற்றவர்களுடன் பேசுவதற்கு முன்பதாக இந்த வசனங்கள் மூலம் தேவன் உங்களுடன் பேச வேண்டுமென்று அவரிடம் கேளுங்கள்.

ஒவ்வொரு வசனமாகக் கவனமாக வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது அந்தப் பகுதி எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். அதன் பின் கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து அதைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

மீண்டும் வசனங்கள் 20-21 ஐ வாசிக்கவும்

- ஒரு பெரிய வீட்டில் உபயோகப்படுத்தும் பொருட்களைக் குறித்து இந்த வசனங்கள் என்ன கூறுகின்றன?
- 'எஜமானுக்கு உபயோகமானதைக்' குறித்து இந்த வசனங்கள் கூறுகின்றன. ஒருவரை உபயோகமான ஓர் கிறிஸ்தவனாக மாற்றுவது எது?

சில பொருட்களை நீங்கள் உபயோகிக்க விரும்புவீர்கள். சில பொருட்களை உபயோகிக்க விரும்ப மாட்டீர்கள். உங்கள் வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்தால் அவருக்கு நீங்கள் உங்கள் சிறந்த தட்டில் சாப்பாடு கொடுப்பீர்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:20–26

நீங்கள் ஒரு அழுக்கான பாத்திரத்தை உபயோகிக்க மாட்டீர்கள்!

வசனம் 22ஐ மீண்டும் வாசிக்கவும்.

பவுல் “இளம்பாலினத்திற்குரிய தீய ஆசைகளை (அல்லது உணர்வுகளை)” விட்டு “விலகி”, “தவிர்த்து”, “தூரமாகி” இருக்குமாறு கூறினார். இது நீதி, விசுவாசம், பரிசுத்தம், அன்பு, சமாதானம் முதலியவற்றிற்கு விரோதமானது.

- தீய ஆசைகளைக் குறித்து சில உதாரணங்களை சிந்திக்கவும்.
- ‘நீதி, விசுவாசம், அன்பு, சமாதானம், பரிசுத்தம்’ முதலியவற்றைக் குறித்து சில உதாரணங்களை சிந்திக்கவும்.

தீய ஆசைகள் பெருமை பேராசை முதலியவற்றை உள்ளடக்கும். அதைப்போன்ற வசனங்களை 1 தீமேத்தேயு 6:9-11ல் காணவும்.

தீய ஆசைகள், பாலியல் பாவத்தையும் உள்ளடக்குகிறது. திருமணம் செய்து கொண்ட ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் மாத்திரமே பாலியல் உறவு ஏற்பட வேண்டும். திருமணத்திற்குப் புறம்பான அனைத்து பாலியல் நடத்தைகளும் தவறாகும்.

வசனங்கள் 23~24 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- வேதாகமத்தைக் கற்பிக்கும் ஒருவர் செய்யக்கூடாதது என்ன?
- வேதாகமத்தைக் கற்பிக்கும் ஒருவர் செய்ய வேண்டியது என்ன?

சில மக்கள் வாதாட விரும்புவார்கள். பவுல் இது தவறெனக் கூறுகின்றார்! நாம் மக்களுக்கு கற்பித்துக் கொடுக்கும் விதத்தைக் குறித்து சிந்திப்பது மிகவும் முக்கியம். மக்களைப் பார்த்து சத்தமிடவோ அல்லது அவர்களை அதட்டவோ கூடாது. அன்பாக அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்!

நமக்கு இயேசுவே உதாரணமாக இருக்கிறார். ஏசாயா 42:2-3 வாசிக்கவும். இயேசு எப்படி மக்களிடம் நடந்து கொண்டார்?

வசனங்கள் 25~26 ஐ மீண்டும் வாசிக்கவும்.

- தான் கூறுவதை ஏற்றுக்கொள்ளாத, அல்லது அதை எதிர்க்கும் மக்களிடம் ஒரு வேத போதகர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- ஒரு வேத போதகர் எதிர்பார்ப்பதென்ன?
- பிசாசின் பிடியிலிருந்து மக்களை எப்படி விடுதலையாக்குவது?
- ‘மயக்கம் தெளிந்து’ என்பதன் அர்த்தமென்ன?

நீங்கள் போதிக்கும்போது சத்தியத்துக்கு விரோதமானவர்கள் மனந்திரும்ப அவருடைய வார்த்தையை தேவன் உபயோகிக்க வேண்டுமென்று ஜெபிக்கவும். பிசாசு “பொய்க்குப் பிதாவாயிருக்கிறான்” - அவனுக்கு விரோதமான நல்ல ஆயுதம் சத்தியமே. இயேசுவால் சாத்தான் ஏற்கனவே சிலுவையில் தோற்கடிக்கப்பட்டான். இயேசுவைக் குறித்து சத்தியத்தை மக்கள் விசுவாசிக்கும்போது சாத்தானின்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 2:20 –26

வல்லமையிலிருந்து மக்கள் விடுதலையடைகிறார்கள். அப்போது அவர்கள் மயக்கம் தெளிந்து உணர்வடைகிறார்கள் - சத்தியத்தை விசுவாசிக்கும்போது அவர்கள் தெளிவாக சிந்திக்கிறார்கள்.

சகல வசனங்களையும் மீண்டும் வாசிக்கவும்.

- 23~26 வசனங்கள் ஒரு வேதாகம ஆசிரியரின் சில தன்மைகளைக் குறித்துக் கூறுகிறது. ஒருவருக்கு என்ன செய்ய முடியுமென்பது அல்ல ஆனால் அவர் எப்படிப்பட்டவர் என்பதே அதிக முக்கியம் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

⊕ முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயங்கள் என்ன?
- முக்கிய வார்த்தைகள் என்ன?
- முக்கிய விடயத்தைத் தெளிவாக ஒரு சிறு வசனத்தில் எழுதவும்.

உதாரணம்: தேவனுக்கு உபயோகமாக இருப்பதற்கு நாம் தூய்மையானவர்களும் இரக்கமுள்ளவர்களுமாய் இருக்க வேண்டும்.

➔ திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:20 –26

⊕ முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: தேவனுக்கு உபயோகமாக இருப்பதற்கு, நாம் தூய்மையானவர்களும் இரக்கமுள்ளவர்களுமாய் இருக்க வேண்டும்.

⊕ உப விடயங்கள்

இந்த வேதப்பகுதியை எப்படி பிரிப்பது என்று சிந்திக்கவும். முக்கிய விடயத்தைப் போதிப்பதற்கு உங்களுக்கு எத்தனை உப விடயங்கள் தேவைப்படும்?

வசனங்கள் 20-22 ஒரு தூய்மையான ஊழியக்காரனைப் பற்றிக் கூறகின்றன:

- அது வசனங்கள் 20-21ல் உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது.
- அது வசனம் 22ல் விளக்கப்பட்டுள்ளது. “பரிசுத்தம்” என்ற வார்த்தைக்கு “சுத்தமான” அல்லது “தூய்மையான” என்று பொருள்.
- ஒரு தூய்மையான ஊழியக்காரன் “எந்த நற்கிரியைக்கும்” ஆயத்தமாக்கப்பட்டிருப்பான்.

வசனங்கள் 23-24 ஒரு இரக்கமுள்ள ஊழியக்காரனைப் பற்றிக் கூறுகின்றன:

- வச.24: “அவன் எல்லார் மேலும் இரக்கமுள்ளவனாய் இருக்க வேண்டும்”.
- தர்க்கிக்கவும், சண்டை போடவும் கூடாது (வச.23-24). அவன்

  நல்லவனாயும், பொறுமையுள்ளவனாயும் இருக்க வேண்டும். (வச.24)

  சாந்தமாய்ப் போதிக்கவும், மற்றவர்களைத் திருத்தவும் வேண்டும். (வச.25)
- ஒரு விசுவாசி மக்களிடம் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று தான் விரும்புவதைக் கூறக்கூடாது. அவன் மக்களுக்கு சேவை செய்து தேவன் சொல்லுவதை செய்ய வேண்டும். அவன் ஒரு பணிவிடைக்காரன்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் தெளிவானதொரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும். வேதப்பகுதி என்ன கூறுகின்றது என்பதையும், அதற்கு மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவ்வுப விடயங்கள் மூலம் மக்களுக்கு கூறக்கூடியதாயிருக்க வேண்டும்.

உதாரணமாக:

1. தூய்மையாகவும், எதையும் செய்யத் தயாராகவும் இருக்க வேண்டும் (வச. 20,22).
2. இரக்கத்துடன் எவருக்கும் சேவை செய்ய தயாராயிருக்க வேண்டும். (வச. 23-26).

உங்கள் முக்கிய விடயத்தை உப விடயங்கள் விளக்குகின்றதா என்பதைப் பார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்கவும்

இந்த வசனங்கள் இயேசுவுக்கும் பிரயோஜனமான ஊழியக்காரனாய் இருப்பதைக் குறித்துக் கூறுகின்றன.

உங்களிடமிருக்கும் மிகவும் பிரயோஜனமானதொரு கருவி என்ன? அதை அப்படி ஆக்குவது என்ன?

உதாரணமாக:

- நீங்கள் ஒவ்வொரு நாளும் உபயோகிக்கும் ஒரு மண்வெட்டி. அது இலகுவில் உடைவதில்லை.
- நிலத்தை நல்ல விதத்தில் தயார்படுத்த உதவும் ஒரு கலப்பை.
- சகல வகை உணவுகளையும் சமைக்க உதவும் ஒரு பானை.
- எதையும் வெட்ட நாம் உபயோகிக்கும் ஒரு கத்தி.

! பிரயோகித்தல்

இது முதலில் சபைத் தலைவர்களுக்குப் பொருந்தும்:

- சபைத் தலைவர்கள் எந்த விதங்களிலெல்லாம் பரிசுத்தமானவர்களாகவும், தூய்மையானவர்களுமாயிருக்க வேண்டும்?
- எந்த விதங்களில் சபைத் தலைவர்கள் இரக்கமும், மென்மையுமாயிருக்க வேண்டும்?

இந்தப்பகுதி அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். ஏனென்றால் அனைத்துக் கிறிஸ்தவர்களும் இயேசுவின் ஊழியக்காரராயிருக்கிறார்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 2:20-26

- பாலியல் பரிசுத்தத்தை பற்றி வேதம் என்ன போதிக்கின்றது என்பதைக் குறித்து மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.
- நமது உடலின் அனைத்து தவறான ஆசைகளுக்கும் “விலகி ஓட வேண்டும்” என்று கூறுவதைக் கவனிக்கவும் (வச. 22). நாம் செய்ய வேண்டிய காரியமுண்டு.
- சரியான வாழ்க்கைமுறை, விசுவாசம், அன்பு, சமாதானம் முதலியவற்றிற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். தேவனுடைய உதவியுடன் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

எப்போதும் தர்க்கத்தில் ஈடுபடும் கிறிஸ்தவர்கள் இரக்கமுள்ளவர்களல்ல. கிறிஸ்தவர்கள் ஈடுபடும் “புத்தியீனமான தர்க்கங்கள் என்ன” (வச. 23)? உங்கள் சமுதாயத்தில் இருக்கக்கூடிய சில உதாரணங்களைக் குறித்து சிந்திக்கவும்.

சத்தியத்திற்கு விரோதமானவர்கள் எப்படி சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட முடியும் என்பதை 25-26 வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. சாத்தானுக்கு விரோதமாக நம்மிடம் இருக்கும் மிகப்பெரிய ஆயுதம் சத்தியமாகிய வேத வசனமாகும் (யோவான் 8:44 ஐயும் பார்க்கவும்).

மறுபரிசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:20-26

ஆரம்பிக்கவும்

உதாரண விளக்கம்: உங்களிடம் உள்ள மிகவும் பிரயோஜனமான கருவி என்ன? அதைப் பிரயோஜனமானதாக மாற்றுவது எது? (திட்டமிடல் பகுதியைப் பார்க்கவும்)

இவ்வசனங்கள் கர்த்தராகிய இயேசுவுக்கு பிரயோஜனமுள்ளவைகளாய் இருப்பதைப் பற்றியதாயிருக்கின்றன (வச. 21). அவருடைய ஊழியக்காரர்களாக நாம் எப்படி வாழ வேண்டுமென்பதை அவை கூறுகின்றன (வச. 24).

நீங்கள் இயேசுவுக்குப் பிரயோஜனமானவராய் இருக்க விரும்புகிறீர்களா? நீங்கள் அவருக்கு ஒரு விசுவாசமான ஊழியக்காரனாக இருந்து அவருக்கு நல்ல விதமாகச் சேவை செய்ய விரும்புகிறீர்களா? நாம் போதிப்பதை போலவே நாம் வாழும் விதமும் மிகவும் முக்கியமாகும்.

இந்த வசனங்கள் அதை எப்படிச் செய்வதென்பதைக் கூறும்.

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகிக்கவும் ~ வேத வசனங்களை விளக்கவும். அந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, மக்களை தமது வேதாகமத்தில் அவைகளை பின்பற்றுமாறு செய்வதற்கு மறக்க வேண்டாம்.

1. தூய்மையாகவும் எதையும் செய்யத் தயாராகவும் இருங்கள். (வச. 20-22)

நீங்கள் சமைக்கும்போது, அசுத்தமானதொரு கரண்டியினால் அதைக் கிளறிவிட மாட்டீர்கள்! அப்படிச் செய்தால் உணவு கெட்டுப் போய்விடும். அதைப்போல இயேசுவுக்கு நாம் பிரயோஜனமாயிருக்க வேண்டுமானால், நாம் தூய்மையாய் இருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார்.

இயேசு உங்கள் வாழ்க்கையில் காணும் தவறான காரியங்கள் என்ன?

நாம் நமது வாழ்க்கையை சுத்தப்படுத்த வேண்டும். நாம் அசுத்தமான எண்ணங்களையும், வழிகளையும் நம்மை விட்டு அகற்ற வேண்டும். சுயநலத்தையும், பெருமையையும் நமது வாழ்க்கையை விட்டு விலக்க வேண்டும். இயேசு நமக்குள் இருப்பதைப் பார்க்கிறார். உங்கள் எண்ணங்களையும், இரகசியங்களையும் அறிவார். அவர் எதைப் பார்க்கிறார்?

நாம் தவறான காரியங்களை விட்டு விலகி ஓட வேண்டும். ஆதியாகமம் 39ம் அதிகாரத்தில் யோசேப்பு தன் எஜமானின் மனைவி அவனை அவளுடன் கட்டிலுக்கு வரும்படி அழைத்தபோது, அந்த வீட்டைவிட்டு வெளியே ஓடினான்.

பாலியல் உறவு திருமணமான தம்பதிகளுக்கிடையில் மட்டுமே ஏற்பட வேண்டுமென்று வேதாகமம் கற்பிக்கிறது. மற்றெல்லா பாலியல் சேர்க்கையும் தவறாகும். இதில் அநேகர் தவறி விடுகிறார்கள். அது உடனே மாற வேண்டும். தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாக இருக்கிறது.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:20-26

நாம் தவறானவற்றிலிருந்து நமது வாழ்க்கையை சுத்தப்படுத்த வேண்டும். நமது வாழ்க்கையை நாம் சரியானவைகளினால் நிரப்ப வேண்டும். அது கடினமான வேலை. ஆனால் நாம் அதைச் செய்தேயாக வேண்டும். நாம் சுயநலமாய் வாழக்கூடாது. நாம் அன்புள்ளவர்களாய் மற்றவர்களின் நன்மைக்காக ஜீவிக்க வேண்டும்.

இயேசு சொல்லும் எதையும் நீங்கள் செய்வீர்களா? தேவனிடம் உங்களுக்கு இதில் உதவி செய்யும்படி கேளுங்கள்!

2. இரக்கமுள்ளவர்களாய் அனைவருக்கும் சேவை செய்யத் தயாராயிருங்கள் (வச. 23-26).

அநேக பிரசங்கிகள் சத்தமிடுவதும், தர்க்கம் பண்ணுவதுமே அவர்களுடைய வேலையென்று நினைக்கிறார்கள். அது சரியல்ல! ஒரு விசுவாசமான ஊழியக்காரன் எல்லோருடனும் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். அவன் கூறுவதை ஒத்துக்கொள்ளாதவர்களுடனும் கூட அவன் அன்பாய் நடந்து கொள்ள வேண்டும்.

இயேசுவைப்போல நாம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஏசாயா 42:2 ஐப் பார்க்கவும். அது இயேசுவை ஒரு ஊழியக்கார ராஜாவாக வெளிப்படுத்துகிறது.

வசனங்கள் 23-26ல் கற்பதற்கு அநேக காரியங்கள் இருக்கின்றன. அதை ஒவ்வொன்றாக வாசித்து உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையிலிருந்து கற்பவற்றைப் புரிந்து கொள்ள உதவி செய்யவும்:

- முட்டாள் தனமான விவாதங்களுக்கு விலகியிருக்க வேண்டும் (வச.23).
- சகலரிடமும் தயவாய் நடந்து கொள்ள வேண்டும். (வச. 24)
- நமக்கு தீமை செய்பவர்களை மன்னிக்க விரும்ப வேண்டும். (வச. 24)
- ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகள்மேல் அக்கறை செலுத்தும் அன்புத் தாய்மார்களைப் போலிருக்க வேண்டும். மற்றவர்கள் நாம் கூறுவதைப் புரிந்து கொள்ளாமலிருக்கும்போது நாம் பொறுமையாய் இருக்க வேண்டும்.
- நமக்கு விரோதமானவர்களை தயவான விதத்தில் திருத்தி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் வேண்டும் (வச. 25).

நாம் போதிக்கும் வசனங்களைப் போலவே நாம் வாழும் விதமும் மிகவும் முக்கியமாகும். மக்கள் தங்கள் காதுகளால் கேட்பவைகளை விட, தங்கள் கண்களால் காண்பவைகள் மூலம் அதிகமாகக் கற்றுக்கொள்கிறார்கள்! எனவே உங்கள் வாழ்க்கை மற்றவர்களுக்கு நல்லவைகளைக் கற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் பேச்சு நல்ல வார்த்தைகளைப் போதித்தாலும், உங்கள் வாழ்க்கை வித்தியாமானவைகளைப் போதிக்குமானால் அதினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 2:20-26

நல்ல போதனையின் நோக்கம் மக்களை மனம் திரும்பச்செய்து பாவத்தை விட்டு விலகப் பண்ணுவதேயாகும். சத்தியத்திற்கு விரோதமானவர்கள் சாத்தானின் வழிகளைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின் மூலமும், ஜெபத்தின் மூலமும் மென்மையாகத் திருத்தப்பட வேண்டும்.

ⓘ பிரயோகிக்கவும்
திட்டமிடல் பகுதியிலுள்ள 'பிரயோகித்தல்' தலைப்பின் கீழ்வரும் கேள்விகளைப் பார்த்து, தூய்மையும், இரக்கமுமாய் இருக்க வேண்டுமென்பதற்கு அர்த்தமென்ன என்பதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு நினைவுபடுத்தவும்.

நீங்கள் இயேசுவுக்கு சேவை செய்வதைக் கெடுப்பவைகள் என்ன? நீங்கள் இரக்கமுள்ளவரா அல்லது இரக்கமற்றவரா? நீங்கள் மென்மையானவரா அல்லது பொறுமையில்லாதவரா? நீங்கள் பரிசுத்தமானவரா அல்லது அசுத்தமானவரா? நீங்கள் தாழ்மையுள்ளவரா அல்லது பெருமையுள்ளவரா?

ⓘ நிறைவு செய்யவும்
இயேசுவுக்குப் பிரயோஜனமான ஊழியக்காரர்கள் தேவை! நீங்கள் சுத்தமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் அவரை நம்பி, அவருக்குக் கீழ்ப்படியும் போது இயேசு அற்புதமான காரியங்களைச் செய்ய உங்களை உபயோகிப்பார்.

இப்படியானதொரு பாடல் இருக்கிறது:

ஓ, என்னைப் பாவியும், தேவனே, என்னையும் கூடப் பாவியும், நீர் விரும்புகிறபடி, எப்போதும், எங்கும், இறுதியில் நாம் உமது முகத்தைப் பார்த்து, உமது இளைப்பாறுதலில், உமது சந்தோஷத்தில், உமது மகிமையில் பங்கடையும்வரை"

ⓘ ஜெபிக்கவும்
உங்கள் சபையிலுள்ள தலைவர்கள் பரிசுத்தமாயும், தூய்மையாயும் இருக்க வேண்டுமென்று தேவனைக் கேட்கவும். அவர்கள் விட்டுவிலக வேண்டிய தவறான காரியங்களை அவர்களுக்குக் காட்டும்படி தேவனிடம் கேட்கவும்.

இந்தச் செய்தியைக் கேட்டதின் நிமித்தம் உங்கள் மக்கள் ஒருவருக்கொருவர் அதிக இரக்கமாயிருக்க வேண்டுமென்று தேவனிடம் ஜெபிக்கவும்.

8 விழிப்புடன் இருக்கவும்

பின்னணி

- பிழையான போதனையைக் குறித்து பவுல் தீமோத்தேயுவிடம் என்ன கூறுகிறார்?
- பிழையான போதகர்களைக்குறித்து பவுல் தீமோத்தேயுவிடம் என்ன கூறுகிறார்?
- மூன்றாம் அதிகாரத்தில் 'அறிவாயாக' என்று பவுல் கூறுவது அவர் ஒரு முக்கியமான எச்சரிக்கையைக் கொடுக்கப்போவதைக் காட்டுகிறது. இரண்டாம் அதிகாரத்தில் அவர் கூறியிருப்பதைவிட வித்தியாசமான ஒன்றை அவர் கூறப்போகிறார். இரண்டாம் அதிகாரத்தின் முடிவில் அவர் என்ன கூறினார்?

வேதாகமம் பல எச்சரிக்கைகளைக் கொண்டிருக்கிறது. இந்த வசனங்கள் சபைகள் எவ்வளவு மோசமாயிருக்கக்கூடும் என்பதைக்குறித்து எச்சரிக்கிறது. எபேசுவில் அநேக பிழையான போதகர்கள் இருந்தார்கள். அப்படியான போதகர்கள் கெட்டவர்களும், ஆபத்தானவர்களுமாயிருக்கிறார்களெ ன்று இந்த வசனங்கள் விளக்குகின்றன. நாம் பிழையான வழிகளைப் பின்பற்றுவதைத் தவிர்த்துக்கொள்ள நாம் அந்த எச்சரிக்கையைக் கேட்க வேண்டும்.

வாசிக்கவும்

வசனங்கள் 1~9ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாக வாசிக்கவும். இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்.

புரிந்து கொள்ளவும்

இந்த வசனங்களில் நீண்ட பட்டியல்கள் காணப்படுகின்றன.

- பவுல் ஒரு கெட்ட சபை அல்லது சமூகத்தையா, அல்லது நல்ல சபை அல்லது சமூகத்தையா குறித்துப் பேசுகிறார்?
- இந்தக் காரியங்கள் உங்கள் சபையில் அல்லது சமூகத்தில் நடந்தால் உங்கள் உணர்வுகள் எப்படியிருக்கும்?
- சபையில் உள்ள இந்த நடத்தை குறித்து அதிர்ச்சியடைந்துள்ளீர்களா?
- பவுல் வசனங்களை 1உ4ல் அன்பைக்குறித்துப் பேசுகிறார். அவர் கூறுவதென்ன?

நாம் அவர்மேலும், மற்ற மக்கள் மேலும் அன்பு செலுத்தவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் இந்த மக்கள் தங்கள் மேலும், பணத்தின்மேலும் அன்பு செலுத்தினார்கள். அவர்கள் தேவன்மேலோ அல்லது மற்றவர்கள் மேலோ அன்பு செலுத்தவில்லை.

வசனம் 1ஐ மீண்டும் வாசிக்கவும்.

- பவுல் 'கடைசி நாட்களில்' என்று எந்த நாட்களைக் குறிப்பிடுகிறார்?
- கஷ்டமான காலங்கள் வருகின்றன என்று அறிந்தால், நாம் என்ன காரியங்களை செய்ய வேண்டும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 3:1 – 9

"கடைசி நாட்கள்" என்பது இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின்னும், அவர் மீண்டும் வருகிறதற்கு முன்புமான காலமாகும். (எபிரேயர் 1:1-2). சில கெட்ட காரியங்கள் இந்த நர்ட்களில் நடக்கும். நாம் அதற்குத் தயாராயிருப்பதற்காக அதைக்குறித்து எச்சரிக்கப்படுவது நல்லது.

வசனங்கள் 2~5ஐ மீண்டும் வாசிக்கவும்

- *அது ஒரு மோசமான நீண்ட பட்டியலாகும். ஒவ்வொரு வார்த்தையையும் எழுதி, அது எதைக் குறிக்கிறது என்று பார்க்கவும்.*
- *இந்தமக்களைக் குறித்து 5ம் வசனம் கூறுவது என்ன? அவர்கள் யார்?*

"தூஷிக்கிறவர்கள்" என்றால் மற்றவர்களைக் குறித்து இரக்கமில்லாமல் கதைப்பது.
"இறுமாப்புள்ளவர்கள்" என்றால் பெருமையுள்ளவர்கள் என்று அர்த்தம்.
"சமயப் பற்றற்ற" என்பதன் அர்த்தம், நடத்தையில் தேவனுக்காக வாழாதிருத்தல் என்பதாகும்.
"அவதூறு" என்பதன் அர்த்தம், ஒருவரைப் பற்றி மிக இரக்கமின்றி பேசுவதாகும்.
"துரோகமிழைத்தல்" என்பதன் அர்த்தம், நண்பர்களுக்கு எதிராக திரும்புவதாகும்.
"துணிகரமான" என்பதன் அர்த்தம், சிந்தனையின்றி காரியங்களைச் செய்வதாகும்.
"பகுத்தறிவற்ற" என்பதன் அர்த்தம், இரக்கமின்றியும், கடுமையாகவும் நடந்து கொள்வதாகும்.

பவுல் சபையிலுள்ள மக்களைக் குறித்துப் பேசுகிறார். இது 5ம் வசனத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் தேவனுடைய வழிகளைப் பின்பற்றுவதாகக் கூறினாலும் அவர்களுடைய வாழ்க்கை வேறுவிதமாக இருக்கின்றது.

- *நமது சபைகளில் மக்கள் இப்படியாக ஜீவிப்பதை காணும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? (வச. 5)*
- *பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான வல்லமை எங்கிருந்து வருகின்றது? (வச. 5)*

5ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் "பெலன்" (வல்லமை) உண்மையாகதேவனை அறிவதிலிருந்து வருகிறது. எல்லா உண்மை விசுவாசிகளுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் ஜீவிக்கிறார். அவர் பிழையானவைகளுக்கு "இல்லை" என்றும், நல்லவைகளுக்கு "ஆம்" என்றும் சொல்லும் சக்தியை நமக்குக் கொடுத்து நாம் நம்மைக் குறித்து சிந்திக்காமல், ஒரு அன்பான வழியில் நாம் வாழ நமக்கு உதவி செய்கிறார்.

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு கெட்ட வாழ்க்கை வாழும் மக்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். நமது சபைகளில் பிழையான போதகர்கள் போதிக்க ஒருபோதும் நாம் இடம்கொடுக்க கூடாது. கெட்ட போதகர்கள் யார் என்று அவர்கள் வாழும் வாழ்க்கையிலிருந்து நாம்

கண்டுக்கொள்ள முடியும். பிழை செய்யும் கிறிஸ்தவர்களல்லாதவர்களை நாம் தள்ளி வைக்கவேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. நாம் அவர்கள் மேல் அன்பு செலுத்தி அவர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறுவதின் மூலம் அவர்களை மாற்றலாம்.

📖 வசனங்கள் 6~9ஐ மீண்டும் வாசிக்கவும்.

- வசனங்கள் 6~7ல் பிழையான போதகர்களைக்குறித்து நாம் மேலும் படிப்பது என்ன?
- பிழையான போதகர்களைக் குறித்து இயேசு என்ன சொன்னார். (மத்தேயு 7:15~20)
- 9ம் வசனத்தில் காணப்படும் நல்ல செய்தி என்ன?

இந்த பிழையான போதகர்கள் பெண்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து, அவர்களுடன் பாலியல் பாவத்தில் ஈடுபட்டிருக்கக்கூடும். இது பிழையான போதகர்களைக் குறித்ததொரு உண்மையாகும்.

யந்நேயும், யம்பிரேயும் யாத்ராகமம் 7:8-13ல் மோசேக்கு எதிர்த்து நின்ற இரண்டு மந்திரவாதிகளாகும். அவர்கள் பெயர்கள் யாத்ராகமத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர்களைப் போல எல்லா பிழையான போதகர்களும் தேவனுடைய உண்மையான வேலைக்கு எதிரானவர்கள். அவர்கள் உண்மைக்குச் செவிகொடுப்பதில்லை. ஆனால், நல்ல செய்தி என்னவென்றால், தேவன் அவருடைய திட்டங்களைக் கெடுப்பதற்கு அவர்களை விடமாட்டார் என்பதேயாகும்.

⊕ முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- இந்த வசனங்கள் ஒரு எச்சரிக்கையாயிருக்கின்றன. அது என்ன எச்சரிக்கை?

பிழையான போதகர்களைக்குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். இப்படியான கள்ளப்போதகர்கள் தேவனுடைய செய்திக்கு விரோதமாகப் போய் சபையை அன்பற்ற வழிகளில் நடத்தும் காலங்கள் வருகின்றன.

மோசமான நடத்தைகளைக் குறித்து முன்னெச்சரிக்கையாயிருக்க வேண்டும். சபை இயேசு கிறிஸ்துவைப்போலக் காணப்படாமல், உலகத்தைப் போலக் காணப்படும் நாட்கள் வருகின்றன.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:1 – 9

முக்கிய விடயம்
உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இதைப்போன்றிருக்கலாம்: மோசமான தலைவர்களைக்குறித்து விழிப்புடன் இருக்கவும். மோசமான நடத்தையைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவும்.

உப விடயங்கள்
இந்த வேதபகுதியை எப்படி பிரிப்பது என்று சிந்திக்கவும். முக்கிய விடயத்தைப் போதிப்பதற்கு உங்களுக்கு எத்தனை உப விடயங்கள் தேவைப்படும்?

இங்கே இரண்டு பகுதிகள் உள்ளன.

வசனங்கள் 1-5: இந்த மக்களைக்குறித்து விழிப்புடன் இருக்கவும்.

- மற்றவர்கள் மேலல்லாது தங்கள்மேல் அன்பு செலுத்துபவர்கள்.
- தெய்வ பக்தியையல்லாது பணத்தை விரும்புபவர்கள்.
- நன்மையையல்லாது தீமையை விரும்புபவர்கள்.
- தேவனையல்லாது இன்பங்களை விரும்புவார்கள்.

வசனங்கள் 6-9 இந்த மக்களிடமிருந்து விலகியிருக்கவும்:

- தேவன்மேல் அன்பு செலுத்துவதாக பாசாங்கு செய்துகொண்டு தங்கள்மேல் அன்பு செலுத்துபவர்கள்.
- வெளியே நல்லவர்கள்போல் காட்சியளித்தாலும், உள்ளே கெட்டவர்களாயிருப்பவர்கள்.
- அவர்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள மற்றவர்களை உபயோகிப்பவர்கள்.
- எப்போதும் சத்தியத்தைக் குறித்து கற்றாலும், ஒரு போதும் மாறாதவர்கள்.
- சத்தியத்திற்கு ‘இல்லை’ என்று சொல்லி தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தலைவர்களுக்கு எதிர்த்து நிற்பவர்கள்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் பொருத்தமானதொரு தலைப்பைக்குறித்து சிந்திக்கவும்.இந்த வசனங்கள் பிழையான போதகர்களையும், பிழையான கிறிஸ்தவர்களையும் குறித்தவைகளாயிருக்கின்றன என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். உங்கள் தலைப்பில் எச்சரிக்கையின் செய்தியை நீங்கள் சேர்க்கலாம்.

உதாரணமாக:

1. விழிப்புடன் இருங்கள். பிழையானவைகள்மேல் அன்பு செலுத்த வேண்டாம்.
2. விழிப்புடன் இருங்கள். பிழையான வழியில் ஜீவிக்கவேண்டாம்.

உங்கள்முக்கிய விடயத்தை உப விடயங்கள் விளக்குகின்றதா என்பதைப் பார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்கவும்
இது ஒரு எச்சரிக்கை. மக்கள் எச்சரிக்கை அடையாளங்களை எங்கே பார்ப்பார்கள்? எச்சரிக்கை அடையாளங்கள் ஏன்

இருக்கின்றன? எச்சரிக்கை அடையாளங்களை நாம் கவனிக்காவிட்டால் என்ன நடக்கும்?

உதாரணமாக:

1. நஞ்சுக்குப்பியில் காணப்படும் மரணத்தைக்குறித்த எச்சரிக்கை.
2. சாலையில் காணப்படும் ஆபத்தைக்குறித்த அடையாள எச்சரிக்கை.

பிரயோகித்தல்

இந்த வேத பகுதி கெட்ட சபைகளையும், கெட்ட சபைத்தலைவர்களையும் குறித்துக்கூறுகிறது.

- என்ன எச்சரிக்கைகளைக்குறித்து உங்கள் சபை மிகவும் கவனமாயிருக்க வேண்டும்?
- இப்படியான சபைகளை, அல்லது சபைத்தலைவர்களை நீங்கள் காணும்போது உங்களால் செய்யக்கூடியது என்ன?

இந்தப்பகுதியில்நம்மை ஊக்கப்படுத்தக் கூடியவைகளும் இருக்கின்றன.

- தேவன் எதைக்குறித்தும் அது நடக்கும் முன்பாகவே அறிந்திருக்கிறார். அதனால்தான் அவரால் நம்மை எச்சரிக்க முடியும்.
- அவருடைய திட்டங்கள் தோல்வியடையாமலிருப்பதை அவர் உறுதி செய்வார்.
- பிழையான போதகர்கள் எப்படியானவர்களாயிருக்கிறார்கள் என்பதை தேவன் காண்பிப்பார் ~ முட்டாள்.

மறுபரீசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:1 – 9

ஆரம்பிக்கவும்

சாலைகளில் ஏன் எச்சரிக்கை அடையாளங்கள் இருக்கின்றன? வேறு எங்கு எச்சரிக்கைகளைக் காணமுடியும்? அவை எதற்காக இருக்கின்றன?

இந்த வசனங்கள் நமக்கு ஒரு பெரும் எச்சரிக்கையாயிருக்கிறன. அவை பிழையான கிறிஸ்தவ போதகர்களைக்குறித்தும் பிழையான கிறிஸ்தவ சபைகளைக்குறித்தும் நம்மை எச்சரிக்கின்றன. இவை நல்ல சபைகள்இ கெட்ட சபைகளாக மாறிவிடாமலிருப்பதற்காக நல்ல சபைகளுக்குக்கும் ஒரு எச்சரிக்கையாயிருக்கின்றன.

விளக்கவும்

இந்த வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதை உங்கள் உப விஷயங்ளை உபயோகித்து விளக்கவும். நீங்கள் வசனங்களை வாசிக்குப்போது அதை மக்கள் தங்கள் வேதாகமங்களில் பார்க்கும்படி செய்ய மறக்க வேண்டாம். கஷ்டமான வார்த்தைகளை விளக்கவும்.

1. விழிப்புடன் இருக்கவும்! தவறானவைகளை விரும்ப வேண்டாம் (வச. 1-5)

பவுல் கொடிதான காலங்களையும், மோசமான சபைகளையும் குறித்து 18 அடையாளங்களை பட்டியலிட்டிருக்கிறார். உங்கள் பகுதியில் பிரச்சினையாயிருக்கக் கூடியவற்றைக்குறித்துக் கதைக்கவும்.

பவுல் ஆறு முறைகள் தவறான ஆசைகளைக் குறித்துக் கதைக்கிறார். நாம் இயேசு சொன்னதுபோல தேவனையும், மற்ற மக்களையும் நேசிக்க வேண்டும். (மாற்கு 12:29-31). ஆனால் மக்கள் தங்களையும், பணத்தையும் நேசிக்கிறார்கள். நமது வாழ்க்கையில் கெட்டவைகள் யாவும் பிழையான அன்பிலிருந்து வருகின்றன. உதாரணமாக, நாம் நம்மேல் அன்பு செலுத்தும் போது, பெருமையுள்ளவர்களாகவும், பண ஆசையுள்ளவர்களாகவும் இரக்கமற்றவர்களாகவும், நன்றியில்லாதவர்களாகவும் மாறுகிறோம்.

சில தவறான வழிகளையும், அவை எப்படிக்காணப்படும் என்பதையும் விளக்கவும்.

கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாமல் தங்களமேல் மாத்திரம் அன்பு செலுத்துவது கவலையான விடயம். கிறிஸ்தவர்கள் பணத்திற்காக ஜீவிப்பது கவலையான விடயம். தேவனைப்பின்பற்றுவதாகக் கூறினாலும், உண்மையில் மக்களுடைய பணத்தைக்குறியாகக் கொண்டிருக்கும் அநேக சபைகள் இருக்கின்றன.

உங்கள் வாழ்க்கை நீங்கள் தேவனை நேசிப்பதையா அல்லது பணம், தீமை, அழகான பொருட்கள் முதலியவற்றையும், உங்களையும் நேசிப்பதையா காட்டுகிறது?

2. விழிப்புடன் இருக்கவும்! பிழையான வழியில் ஜீவிக்க வேண்டாம். (வச. 6-9)

பிழையான வழிகளில் ஜீவிக்கிறோம் என்பதை எது காட்டுகிறது? பெருமை, தற்புகழ்ச்சி,

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:1 – 9

பேராசை, கீழ்ப்படியாமை, இரக்கமின்மை, கோபம், மற்றவர்களைப்பற்றிக் கதைத்தல், நம்பிக்கைத்துரோகம் போன்றவை.

நீங்கள் சபைக் கூட்டங்களில் இல்லாதபோது உங்கள் நடத்தை எப்படியிருக்கிறது? ஞாயிற்றுக்கிழமை நீங்கள் எல்லாச் சரியான காரியங்களையும் செய்யக்கூடும் - நன்றாகப்பாடுவது, சாட்சி கூறுவது, ஜெபங்களில் கலந்துகொள்வது, சபை ஐக்கியத்தில் பங்குப்பற்றுவது. ஆனால், திங்கள் முதல் சனிவரை உங்கள் வாழ்க்கை எப்படியிருக்கிறது? உங்களுடைய செய்கைகள் உங்களுக்குள்ளே இருக்கும் எதைக்காட்டுகிறது?

நமது உட்புறத்தில் நாம் மாற்றமடைந்திராவிட்டால் உண்மையில் நாம் தேவனை அறியவில்லை. ஒரு மனிதர் கிறிஸ்தவனாக மாறும்போது அவர் ஒரு புது வழியில் வாழத் தொடங்குகிறார்.தேவன் அவருக்குள் ஜீவிப்பதற்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கிறார். பிழையானவைகளுக்கு “இல்லை” என்றும் நல்லவைகளுக்கு “ஆம்” என்றும் சொல்லும் சக்தியை பரிசுத்த ஆவியானவர் அவருக்குக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குத் தாழ்மை, இரக்கம், மற்றவர்களுக்குப் பண உதவி செய்வது, மற்றவர்களை நேசிப்பதுஇ தேவன்மேல் அன்பு செலுத்துவது முதலியவற்றில் உதவி செய்கிறார்.

இந்த தவறான போதகர்கள் உண்மையைப் போதிப்பதில்லை. அவர்கள் தாங்கள் விரும்பினதைச் செய்ய மக்களை விசேஷமாகப் பெண்களைக் கட்டாயப்படுத்தினார்கள். அவர்கள் மக்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக அவர்களைப் புண்படுத்தினார்கள். அவர்கள் பிழையான காரியங்களையே செய்தார்கள்.

இவர்கள் யாத்திராகமம் 7ல் மோசேக்கு எதிர்த்துநின்ற மந்திரவாதிகளைப் போன்றவர்கள் என்று பவுல் கூறுகிறார். அவர்கள் மோசே செய்ததை தாங்களும் செய்தார்கள். பிழையான போதகர்களுக்கும் அற்புதங்கள் செய்யமுடியும். ஆனால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவர்கள் வாழும் வாழ்க்கை வெளிப்படுத்தும். “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்” என்று இயேசு கூறினார் (மத்தேயு 7:16).

ⓘ பிரயோகிக்கவும்

‘திட்டமிடல்’ பகுதியிலுள்ள ‘பிரயோகித்தல்’ தலைப்பின்கீழ்வரும் கேள்விகளைப் பார்த்து, தூய்மையும், இரக்கமுமாய் இருக்க வேண்டுமென்பதற்கு அர்த்தமென்ன என்பதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு ஞாபகப்படுத்தவும்.

- நாம் எதில் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்?
- தவறான போதகர்கள் நமது பகுதிகளில் இருக்கிறார்களா? அவர்களைக்குறித்து நாம் என்ன செய்யவேண்டும்?
- தவறான போதகைளிலிருந்து நாம் நமது சபைகளை எப்படி பாதுகாத்துக்கொள்ள முடியும்?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:1 – 9

- தவறானவற்றின்மேல் உங்களுக்கிருக்கக்கூடிய ஆசைகளைக் குறித்து உங்கள் வாழ்க்கையை சோதித்துப் பாருங்கள்.
- நீங்கள் ஒரு பொய்யான வாழ்க்கை வாழுகிறீர்களா? நீங்கள் மக்களுக்கு வெளியே காட்சியளிக்கும் விதத்தைவிட உங்கள் உட்புறத்தில் வித்தியாசமானவராயிருக்கிறீர்களா?

நிறைவு செய்யவும்

ஆபத்தான காலங்கள் உள்ளன. ஆபத்தான சபைகளும், ஆபத்தான தலைவர்களும் இருக்கிறார்கள். விழிப்புடன் இருங்கள். அவர்களைவிட்டு விலகியிருங்கள்.

முடிவில் தவறான போதகர்கள் வெற்றியடையாமல் இருப்பதை தேவன் உறுதி செய்வார்.

அவர்களுடைய சொந்த வாழ்க்கையைக் குறித்துச் சிந்திக்க உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு சற்று நேரத்தை ஒதுக்கவும். அவர்கள் எதைக் குறித்து மனந்திரும்ப வேண்டும். அவர்களுடைய பாவத்தைக்குறித்து அவர்கள் இன்னொருவருடன் பேசி அவருடன் ஜெபிக்க அவர்களுக்கு நேரத்தை ஒதுக்கவும்.

ஜெபிக்கவும்

பொய்யான வாழ்க்கை வாழ்பவர்கள், வசனத்தை கேட்கும்போது சத்தியத்தை அறிந்து தேவனிடத்தில் திரும்ப தேவன் உதவி செய்ய வேண்டுமென்று தேவனிடம் கேட்கவும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையின் மூலம் அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்த காரியங்களின் மூலம் பிழையான போதனைகள் என்றால் என்ன என்பதை தேவனுடைய மக்கள் புரிந்துகொள்ள தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

9 துன்பம் அனுபவித்தலை எதிர்பாருங்கள்

பின்னணி

- பவுல் ஏன் இந்த நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதினார்?
- துன்பம் அனுபவித்தலைக்குறித்து பவுல் என்ன கூறியிருக்கிறார்? (1:8, 2:3, 2:8~9)
- கடைசிப் பகுதியில் பவுல் எதைக்குறித்து தீமோத்தேயுவுக்கு எச்சரிக்கிறார்? (3:1~9)
- இந்த வேத பகுதி கடைசிப் பகுதியிலிருந்து எப்படி தொடருகிறது?

வசனங்கள் 1-9ல் பவுல் மோசமான காலங்களையும் மோசமான போதகர்களையும் குறித்து எச்சரிக்கிறார். வசனங்கள் 10-13ல் பவுல் சரியான வழியில் தன்னைத் தொடர்ந்து பின்பற்றும்படி தைரியப்படுத்துகிறார். தவறான போதகர்கள் எப்போதும் ஒரு இலேசான வாழ்க்கையை வாக்களிப்பார்கள். ஆனால், நாம் தேவனுக்குப்பிரியமான விதத்தில் ஜீவிக்கும் போது கஷ்டமான நாட்களை நாம் எதிர்பார்க்கவேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது.

வாசிக்கவும்

வசனங்கள் 10~13ஐ வாசிக்கவும்

சத்தமாக வாசித்து அதைக் கிரகித்துக்கொள்ளவும். கேள்விகளையும், குறிப்புகளையும் உபயோகித்து விளங்கிக் கொள்ளவும்.

புரிந்து கொள்ளவும்

வசனங்கள் 10~11ஐ மீண்டும் வாசிக்கவும்.

“நடக்கை” என்பது வாழும் விதத்தைக் குறிக்கும்.

- பவுலின் வாழ்க்கையைக் குறித்து தீமோத்தேயுவுக்கு எப்படித் தெரியும்? (அப்போஸ்தலர் 16:1~3 வாசிக்கவும்).
- பவுலின் வாழ்க்கையைக் குறித்து தீமோத்தேயுவுக்கு என்ன தெரியும்?
- பவுலின் வாழ்க்கையின் மாதிரி என்ன?
- எந்த விதங்களில் பவுல் துன்பம் அனுபவித்தார்? (வச. 11)
- அந்தியோக்கியா, இக்கோனியா, லீஸ்தீரா என்னும் பட்டணங்களில் தனக்குத் துன்பம் நேர்ந்ததாக பவுல் கூறுகிறார். அப்போஸ்தலர் 13~14 அதிகாரங்களை வாசித்து அதைக்குறித்து அறிந்துகொள்ளவும்.
- ஏன் பவுல் அவ்வளவு அதிகமாகத் துன்பம் அனுபவித்தார்? (வச. 12)

பவுலின் போதனைகளையும், அவருடைய வாழ்க்கை முறையையும் தீமோத்தேயு அறிந்திருந்தார். அதை அவர் ஏற்கனவே பின்பற்றுகிறவராயிருந்தார். சத்தியத்தைப் போதிப்பதும், சத்தியத்தின்படி ஜீவிப்பதுமே பவுலின் வாழ்க்கை முறையாயிருந்தது. அதிகமான

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

மக்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே பவுலின் குறிக்கோளாயிருந்தது. அதற்கு நல்ல உதாரணங்கள் மிக முக்கியம். தீமோத்தேயு, பவுலின் விசுவாசம், பொறுமை, அன்பு முதலியவற்றையும், அவர் எப்படி தொடர்ந்து துன்பங்களையும் கஷ்டமான நாட்களையும் சகித்து அவைகளைக் கடந்து சென்று கொண்டிருந்தார் என்பதையும் நன்கு அறிந்திருந்தார்.

அப்போஸ்தலர் 13-14ம் அதிகாரங்கள் பவுலின் முதலாவது மிஷனரிப் பயணத்தைக் குறித்துக் கூறுகின்றன. பிசீதியாவிலுள்ள அந்தியோக்கியாவில் அநேக மக்கள் நற்செய்தியை விசுவாசித்தார்கள். ஆனால் பவுலும், சீலாவும் அங்கிருந்து வெளியேற பலவந்தம் பண்ணப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 13:49-50). அதன் பின் அவர்கள் இக்கோனியாவுக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அதிக நாட்கள் தங்கியிருந்தார்கள்.அநேகர் விசுவாசிகளாக மாறினார்கள்.அப்போது சிலர் பவுலையும், சீலாவையும் தாக்குவதற்கு திட்டமிட்டார்கள். எனவே அவர்கள் அங்கிருந்து விரைவாக வெளியேற நேரிட்டது.

அதன்பின் அவர்கள் லிஸ்திராவுக்குச் சென்றார்கள். அங்கும் அநேகர் விசுவாசிகளாக மாறினார்கள். ஆனால் பவுலை கல்லெறிந்து கொலை செய்ய முயற்சித்தார்கள். லிஸ்திராவில் தான் தீமோத்தேயு வசித்தார். பிற்பாடு அவர் பவுலின் பயணத்தில் அவருடன் சேர்ந்து கொண்டார். அதிக காலத்திற்குப் பின் பவுல் இந்த நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

அநேக முறை தேவன் பவுலை மரணத்திலிருந்து காப்பாற்றினார். ஆனால், அவரை ஆபத்துக்களுக்கு விலக்கவில்லை. ஆயினும் பவுல் இயேசுவைக்குறித்துப் பேசுவதை நிறுத்தவில்லை.

வசனங்கள் 12~13ஐ மீண்டும் வாசிக்கவும்.

- தேவனுக்காக வாழும் ஒவ்வொரு விசுவாசிக்கும் என்ன நடக்கும்?
- அது ஏன் நடக்கும்? (வச.13, யோவான் 15:18~20)
- துன்பம் அனுபவித்த மற்ற தேவ மனிதர்களைக்குறித்து சிந்திக்கவும்.
- 'எத்தர்கள்' என்பது (வச. 13) உண்மையான போதகர்களைப் போலப் பாசாங்கு செய்யும் பொய்யான போதகர்களாவர். பொய்யான போதகர்கள் என்ன செய்வார்கள்?

பவுலின் உதாரணத்தைப் பின்பற்றும் எல்லாக் கிறிஸ்தவர்களும் துன்பம் அனுபவிப்பதை எதிர்பார்க்க வேண்டும். துன்பம் அனுபவிப்பது இயல்பானது. விசுவாசிகள் துன்பம் அனுபவிப்பதை எதிர்பார்க்க வேண்டியதற்கு ஒரு காரணம், சத்தியத்தை வெறுக்கும் மக்கள் அநேகர் உலகில் இருப்பதேயாகும். பிழையான போதகர்களால் பரப்பப்படும் பொய்களை விசுவாசிப்பவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

இயேசு கிறிஸ்துவுடன் “ஐக்கியம்” இல்லாமல் ஒருவராலும் தேவனுடைய வழிகளை பின்பற்றி தேவனுக்குப் பிரியமானதொரு வாழ்க்கை வாழ முடியாது - கிறிஸ்து அவருடைய ஆவியானவரின் மூலம் நமக்குள் ஜீவித்து, நம்மை தேவனுடைய வழிகளில் நடத்துகிறார்.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- பவுல் தன்னைக் குறித்து என்ன கூறுகிறார்?

தேவனுடைய வழியில் ஜீவிப்பது துன்புறுத்தலையும், எதிர்ப்பையும் கொண்டுவரும். மக்கள் அவருக்கு விரோதமாக இருக்கும் போதும் பவுல் இயேசுவுக்காக ஜீவித்தார். பவுலின் நல்ல உதாரணத்தை நாம் பின்பற்ற வேண்டும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்:
தேவனுடைய வழியில் ஜீவிப்பது துன்புறுத்தலையும், எதிர்ப்பையும் கொண்டு வரும்.

உப விடயங்கள்

இந்த வேதபகுதியை எப்படி பிரிப்பது என்று சிந்திக்கவும்.

இந்த வேத பகுதிக்கு இரண்டு பாகங்கள் இருக்கின்றன.

வசனங்கள் 10-11: பவுல் தேவனுக்காக ஜீவித்தார்.

- பவுல் சத்தியத்தை வெளிப்படுத்தி, சத்தியத்தின்படி ஜீவித்தார்.
- அவர் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கஷ்டமான வேளைகளிலும் பொறுமையாகவும், அன்புடனும் நடந்து கொண்டார்.
- இயேசுவைக்குறித்த செய்தியை பிரசங்கிப்பதற்குப் பவுல் பல இடங்களுக்குப் பயணித்தார்.
- சில மக்கள் விசுவாசித்தார்கள். மற்றவர்கள் அவருடைய செய்தியை வெறுத்தார்கள். அவர்கள் அவரைத்தாக்கி, அவரை கொலை செய்ய முயற்சித்தார்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

- பவுல் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார்.

வசனங்கள் 12-13: எல்லா உண்மைக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை

- நாம் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழும்போது துன்புறுத்தப்படுவோம்.
- தேவனுக்குப் பிரியமில்லைாத விதத்தில் வாழும் மக்கள் நாம் எப்படி வாழ வேண்டுமென்று பொய்களைக் கூறுவார்கள்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும்ஒரு தலைப்பைக்குறித்துச் சிந்திக்கவும்.எல்லா வசனங்களும் துன்புறுத்தலையும் எதிப்பையும் குறித்ததாயிருக்கின்றன. உங்கள் தலைப்புகளில் இது தெளிவாக இருக்கவேண்டும்

உதாரணமாக:

1. பவுல் தேவனுக்குப் பிரியமான வழியில் வாழ்ந்து துன்பம் அனுபவித்தார்.
2. நீங்கள் தேவனுடைய வழிகளில் வாழ்ந்தால் துன்பம் அனுபவிப்பீர்கள்.

உங்கள் உப விடயங்கள் முக்கிய விடயத்தை விளக்குகின்றதா என்பதைப் பார்க்கவும்.

உதாரணத்துடன் விளக்கவும்

பவுல் தன்னுடைய பயணத்தைக் குறித்தும், அவர் எப்படி கஷ்டப்பட்டாரென்பதைக்குறித்தும் கூறுகிறார். அப்போஸ்தலர் 13-14ல் இருந்து சம்பவித்ததைக்கூறவும். பவுலின் துன்பத்தை மக்கள் உணரத்தக்கதாக அதை நல்லவிதத்தில் கூறவும்.

எதிர்ப்பை எதிர்பார்க்கும்படி பவுல் விசுவாசிகளுக்குக் கூறுகிறார். அது நடக்கும்போது நாம் தயாராயிருப்பதற்காக பவுல் அப்படிச் செய்கிறார். என்ன நடக்கும் என்று அறிந்துகொள்வது நாம் அதற்கு தயாராயிருப்பதற்கு நமக்கு உதவிசெய்யும். அதை விளக்குவதற்கு ஒரு உதாரணத்தைக்குறித்து சிந்திக்கவும்.

உதாரணமாக, மிகவும் குளிரான ஒரு நாட்டிற்கு அதைப்பற்றி அறியாமல் நீங்கள் சென்றால், நீங்கள் கஷ்டப்பட நேரிடும். ஆனால் அதைக்குறித்து ஒருவர் ஏற்கனவே கூறியிருந்தால், நீங்கள் அதற்குத் தேவையான எல்லா ஆடைகளையும் எடுத்துச் செல்வீர்கள்.

தேவனுக்குப் பிரியமான வழியில் வாழ்வதால் துன்பம் அனுபவிக்கும் மக்களைக் குறித்து உதாரணங்களைச் சிந்திக்கவும்.

பிரயோகித்தல்

- நாம் துன்புறுத்தப்படும்போதும் கூட தேவனுடைய வழிகளில் ஜீவிப்பதும், விசுவாசம், பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை முதலியவற்றைக் காத்துக்கொள்வதும் முக்கியம்.
- மற்றவர்கள் உங்கள் வாழ்க்கையில் எதைக் காண்கிறார்கள்? மற்றவர்கள் உங்களிடம் இரக்கமில்லாமல் நடந்து கொள்ளும்போது, நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகவும், பொறுமையள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும் நடந்து கொள்கின்றீர்களா?

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

- இயேசுவுக்காக ஏன் விசுவாசிகள் துன்பம் அனுபவிப்பார்கள் என்பதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு ஞாபகப்படுத்தவும்.
- நமக்கு விசுவாசம் இருக்குமானால் நாம் துன்பம் அனுபவிப்பதில்லை என்று சொல்லும் போதகர்கள் பொய்யர்கள் என்று உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு ஞாபகப்படுத்தவும்.
- இயேசுவைப் பின்பற்றுவது ஒரு சவாலான (ஆபத்தான) காரியம். நாம் அதற்குத் தயாராகவும், விருப்பத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் பேச்சைக்கேட்பவர்களுக்கு இதை எப்படி பிரயோகிப்பது என்பதைக்குறித்து சிந்திக்கவும்.

மறுபரீசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

ஆரம்பிக்கவும்

உலகெங்குமுள்ள சிறுவர்கள் "தலைவனை பின்பற்றுதல்" (Follow the Leader) என்னும் விளையாட்டை விளையாடுவார்கள். தலைவன் செய்வதை மட்டுமே அவர்கள் செய்ய வேண்டும். அதைப்போல கிறிஸ்தவர்களும் தலைவரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறனர். இயேசுவை எப்படி பின்தொடர்வது என்பதை நமக்குக் காட்டுபவர்களையும் நாம் பின்பற்ற வேண்டும். பவுல் தன்னை பின்பற்றும்படி தீமோத்தேயுவுக்குக் கூறுகின்றார்.

சபையில் அநேக தீய உதாரணங்கள் இருந்தன.தீமோத்தேயு பவுலின் நல்ல உதாரணத்தைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகித்து இந்த வசனங்கள் கூறுவதென்ன என்பதை விளக்கவும். நீங்கள் வசனங்களை வாசித்து அவைகளை மக்கள் தங்கள் வேதாகமங்களில் பார்க்கும்படி செய்ய மறக்க வேண்டாம்.

1. பவுல் தேவனுடைய வழியில் வாழ்ந்து துன்பம் அனுபவித்தார். (வச. 10-11)

தீமோத்தேயு, பவுலை நன்கு அறிந்திருந்தார். அவர் பவுல் சத்தியத்தைப் போதிப்பதைக் கேட்டிருக்கிறார். அவர் பவுல் வாழும் விதத்தை பார்த்திருக்கிறார். பவுலின் குறிக்கோள் கிறிஸ்துவுக்காக மக்களை ஆதாயப்படுத்துவதே என்பதை அவர் அறிந்திருக்கிறார். பவுல் மக்களுடன் பொறுமையாக நடந்துகொண்டார். மக்கள் அவருடைய செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்தபோதும் கூட அவர் அவர்கள் மேல் அன்பு செலுத்தினார். அவர் மக்கள் மேல் கோபப்பட்டு அவர்களை கடிந்துகொள்ளவில்லை. அவர் மிகவும் சாந்தமாக நடந்துகொண்டார். பவுல் தேவனுடைய வழிகளில் வாழ்ந்ததால் அவர் துன்பம் அனுபவித்தார் என்பதும் தீமோத்தேயுவுக்குத் தெரியும். அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் தீமோத்தேயு பவுலின் குழுவுடன் சேர்ந்தார். அப்போது அவர் அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்தீரா முதலிய இடங்களில் நடந்தவற்றைக் கேள்விப்பட்டார். (அப்போஸ்தலர் 13-14)

பவுலுக்கு என்ன நடந்தது என்பதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு விளக்கமாகக் கூறவும்.

தீமோத்தேயு லீஸ்திராவைச் சேர்ந்தவர். அநேகமாக பவுலை அங்கிருந்தவர்கள் தாக்கின போது அவர் அங்கே இருந்திருக்கவேண்டும்.

பல எதிர்ப்புகளின் மத்தியிலும் பவுல் விசுவாசமாக தொடர்ந்து இயேசுவுக்காக நின்றதை தீமோத்தேயு கண்டார். மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலும் பவுல் தேவனை நம்பினார். அவர் இயேசுவைக்குறித்து மக்களுக்குச் சொல்லுவதையும் அவர்களுக்கு இயேசுவின் அன்பைக் காட்டுவதையும் நிறுத்தவில்லை.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:10 –13

தேவன் பவுலை மரணத்திலிருந்து அநேக முறை காப்பாற்றினார். ஆனால் தேவன் பவுலை ஆபத்துக்கள் பாடுகள், வேதனைகள் முதலியவற்றிலிருந்து காப்பாற்றவில்லை. தேவன் எப்போதும் அவருடைய மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவார் என்று எதிர்ப்பார்க்கமுடியாது. இயேசுவை பின்பற்றுவதின் மூலம் அநேக கிறிஸ்தவர்கள் உலகெங்கும் மரிக்கிறார்கள். தேவன் அவர்களை பாதுகாப்பாக பரலோகத்தில் கொண்டுபோய் சேர்ப்பதின் மூலம் அவர்களை காப்பாற்றுகிறார்.

2. நீங்கள் தேவனுடைய வழியில் நடந்தால் துன்பம் அனுபவிப்பீர்கள் (வச. 12-13)

இயேசுவை உலகம் வெறுப்பதினால் பாடனுபவித்தல் கிறிஸ்தவர்களுக்கு சகஜமாகும். (யோவான் 15:18. உலகம் சத்தியத்தை வெறுக்கிறது. எனவே நாம் சத்தியத்தைப் பேசும்போது அது நம்மை எதிர்க்கிறது. உலகம் பொய்யை விசுவாசிக்க விரும்புகிறது. பிழையான போதகர்கள், மக்களிடம் அவர்கள் எதையும் விசுவாசிக்கலாம், அல்லது எப்படியும் வாழலாம் என்று கூறி அவர்களை ஏமாற்றுகிறார்கள். பிழையான போதகர்களும், அவர்களைப் பின்பற்றுபவர்களும், அதிகமான தவறுகளைச் செய்கிறார்கள். பாலியல் ஒழுக்கக்கேடு, பேராசை முதலியன நல்லவைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்படி நடக்கும்போது கிறிஸ்தவர்கள் அதிகமாகப் பாடனுபவிக்க நேரிடுகிறது.

ஒரு கிறிஸ்தவர் துன்பம் அனுபவித்தால் அவர் நல்லவரல்ல என்றும் தேவன் அவர்மேல் அன்பு செலுத்தவில்லையென்றும் அநேகமக்கள் நினைக்கிறார்கள். இது உண்மையல்ல. இயேசு பூரணராயிருந்தார். ஆனால் அவர் எல்லோரையும் விட அதிகமாக துன்பம் அனுபவித்தார். பவுல் ஒரு பெரிய சுவிசேஷப் பணியாளராக (மிஷனரி) இருந்தார். ஆனால் அவர் அதிக பாடனுபவித்தார். தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்துபாடனுபவித்த அநேக உதாரணங்களால் வேதாகமம் நிறைந்திருக்கிறது. யோபு, எலியா, தாவீது, எரேமியா, தானியேல் (சில உதாரணங்களை உபயோகிப்பது நல்லது).

⊕ உதாரணத்துடன் விளக்கவும்

மக்கள் நம்மை எதிர்ப்பதை நாம் எதிர்பார்க்கவேண்டுமென்றுபவுல் நமக்குக் கூறுகிறார். அப்போது அது நடக்கும்போது நாம் அதற்குத் தயாராயிருப்போம். என்ன நடக்குமென்பதை அறிந்திருப்பது எப்படி நாம் தயாராயிருப்பதற்கு நமக்கு உதவி செய்கிறது என்பதை உதாரணம் காட்டி விளக்கவும். (திட்டமிடல் பகுதியில் உள்ள உங்கள் குறிப்புகளைப் பார்க்கவும்)

! பிரயோகிக்கவும்

‘திட்டமிடல்’ பகுதியிலுள்ள ‘பிரயோகித்தல்’ தலைப்பின் கீழ்வரும் கேள்விகளை மீண்டும் பார்த்து, உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு அதிலுள்ள எச்சரிக்கைகளை ஞாபகப்படுத்தவும்.

உங்கள் பேச்சைக் கேட்கும் வித்தியாசமான பகுதி மக்களைக்குறித்து சிந்திக்க மறக்க வேண்டாம். உங்கள் பிரயோகம் உங்கள்

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:10-13

முக்கிய விஷயத்தைச் சார்ந்ததாய் இருக்கவேண்டும்.

① நிறைவு செய்யவும்
இயேசுவைப் பின்பற்றுவது ஒரு (சவாலான) ஆபத்தான காரியம். நாம் அதற்கு விருப்பமுள்ளவர்களாகவும், தயாராகவும் இருக்க வேண்டும்.

இலகுவான வாழ்க்கையை வாக்குப்பண்ணுபவர்களின் பொய்களை நம்பவேண்டாம் இயேசுவுக்காக உண்மையாய் வாழும் மக்களின் உதாரணத்தைப் பின்பற்றி அவர்களுடன் துன்பம் அனுபவிக்க வேண்டும்.

⊕ ஜெபிக்கவும்
இயேசுவுக்காக துன்பம் அனுபவிக்க உங்களையும் உங்கள் பேச்சைக் கேட்பவர்களையும் தயார்படுத்தும் படி ஜெபிக்கவும்.

10 தேவனுடைய வார்த்தை

பின்னணி

- சிறு பிள்ளையாய் தீமோத்தேயு கற்றுக்கொண்டவைகளை பவுல் அவருக்கு ஞாபகப்படுத்துகிறார். தீமோத்தேயுவின் குடும்பத்தைப்பற்றி எமக்கு என்ன தெரியும்? (1:4~5, அப்போஸ்தலர் 16:1).
- பிழையான போதனைகளைக் குறித்து பவுல் அதிகமாகக் கூறியிருக்கிறார். சரியான போதனைகளை நாம் எங்கே காணலாம்?

இந்த வசனங்கள் "பரிசுத்த வேத எழுத்துக்களை" பற்றினதாயிருக்கின்றன (வச. 15-16). அதுதான் வேதாகமம். வேதாகமம் எப்படி எழுதப்பட்டதென்று பேதுரு கூறுவதை வாசிக்கவும்: 2 பேதுரு 1:16-21

பிழையான போதகர்கள் தேவனைக்குறித்து மக்கள் பொய்யானவற்றை விசுவாசிக்கத்தக்கதாக அவர்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களுடைய சில பொய்கள், கேட்பதற்கு நன்றாயிருக்கும். சத்தியம் வேத வாக்கியங்களிலேயே இருக்கின்றது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்துகிறார்.இந்த வசனங்கள் மிக முக்கியமானவை. ஏனென்றால் வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் தேவனே எழுதியிருக்கிறார்.நாம் முழு வேதாகமத்தையும் நம்ப வேண்டும். முழு வேதாகமமும் நமக்குப் பிரயோஜனமானது.

வாசிக்கவும்

வசனங்கள் 14~17ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து அதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். இது, இந்தப்பகுதி என்ன கூறுகிறது என்பதை விளங்கிக் கொள்ள உங்களுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் அதை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். பவுல் சொல்லுவதைக் கவனமாகப் பார்க்கவும். முக்கிய வார்த்தைகளை எழுதவும். பின் கேள்விகளையும் குறிப்புகளையும் உபயோகித்து அதைப்புரிந்துகொள்ளவும்.

புரிந்து கொள்ளவும்

வசனங்கள் 14~15ஐ மீண்டும் வாசிக்கவும்

- 'நீயோ' (வச. 14) ~ தீமோத்தேயு வித்தியாசமானவர் யாரைவிட அவர் வித்தியாசமானவர்? (வசனங்கள் 8,9,10,13 ஐயும் பார்க்கவும்)
- தீமோத்தேயு இயேசுவைப் பற்றியதான உண்மையைக் குறித்து ஏன் நிச்சயமுள்ளவராயிருந்தார்?
- அவருடைய தாய் அவருக்கு பழைய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொடுத்தாள். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஒன்றோடொன்று பொருந்துகின்றன என்பதைக் குறித்து இது நமக்கு எதைக்காட்டுகிறது?
- இரட்சிப்பின் வழி என்னவென்று வேதாகமம் கூறுகிறது?

"நீயோ" என்று 10ம் வசனத்தில் வரும் வார்த்தை தீமோத்தேயு பிழையான போதகர்களைவிட வித்தியாசமானவர் என்று பவுல் கூறுவதைக் காட்டுகிறது. தீமோத்தேயு சத்தியத்தை

அறிந்திருந்தார். ஏனென்றால் அவர் அதை பவுலிடமிருந்து கேட்டிருந்தார். பவுல் இயேசுவால் போதிக்கப்பட்டதொரு நம்பிக்கைக்குரிய அப்போஸ்தலராயிருந்தார். தீமோத்தேயு அதே உண்மையை தன் தாயிடமும், பாட்டியிடமும் கற்றிருந்தார். இரட்சிப்புக்கான வழி இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசமே என்று பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் கூறுகின்றன.

📖 வசனங்கள் 16~17ஐ மீண்டும் வாசிக்கவும்

- வேதாகமம் எங்கிருந்து வந்தது?
- தேவன் ஏன் நமக்கு வேதாகமத்தைக்கொடுத்தார்?
- வேதாகமம் எந்த நான்கு காரியங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்? (வச.17) உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்.
- தேவனுக்குச் சேவை செய்யும் மனிதன் வேதாகமத்தின் மூலம் முற்றிலும் தகுதிப்படுத்தப்படுகிறான் (வச.16). இவ்வசனம் வேதாகமத்தைக்குறித்து நமக்குக் கூறுவதென்ன?

“வேத வாக்கியங்களெல்லாம்” என்றால் பழைய ஏற்பாட்டையும், பதிய ஏற்பாட்டையும் குறிக்கும். பவுல் அவருடைய போதனையையும், பழைய ஏற்பாட்டுப் போதனையையும் குறிப்பிடுகிறார்.

“தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது” என்பது தேவனுடைய வாயிலிருந்தே எல்லா வேத வாக்கியங்களும் வந்தன என்பதை குறிப்பிடுகிறது. அது மனிதர்கள் தேவனைக்குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றியதல்ல, ஆனால் தேவன் என்ன சொல்லுகிறார் என்பதைப்பற்றியதாயிருக்கிறது (2 பேதுரு 1:20-21 ஐயும் பார்க்கவும்). தேவன் ஒருபோதும் தவறு செய்ய மாட்டார். எனவே முழு வேதாகமும் உண்மையென்று நாம் நம்பலாம்.

வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் பரிசாகும். அதில் ஒரு வார்த்தைகூட தவறானதல்ல. எல்லா வார்த்தைகளும் நமக்குப் பிரயோஜனமானவை. அநேகர் பழைய ஏற்பாட்டை வாசிப்பதில்லை. ஆனால் வசனம் 17 அது நமக்குப் பிரயோஜனமாயிருப்பதாக கூறுகிறது.

வேதாகமம் இவைகளுக்கு பிரயோஜனமாயிருக்கிறது:

- சத்தியத்தை உபதேசித்தல் - எது சரியென்று அது நமக்குக் காட்டுகின்றது.
- கடிந்துகொள்ளுதல் - எது தவறென்று அது நமக்குக் காட்டுகின்றது.
- பிழைகளைத்திருத்துதல் - எப்படி தவறான வழியை விட்டு விலகுவது என்பதை அது நமக்கு காட்டுகின்றது.
- பயிற்சி அளித்தல், அறிவுறுத்தல் - சரியான வழியில் தொடர்ந்து செல்லுதல் எப்படியென்று அது காட்டுகின்றது.

தலைப்புகளும், அதிகாரங்களும் மக்களால் சேர்த்துக்கொள்ளப்பட்டவை. அவை நமக்கு உதவுகின்றன. ஆனால் அவை தேவ ஆவியினால் அருளப்பட்ட வார்த்தைகளின் பகுதியல்ல. வேதாகமம் எபிரேய,

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 3:14 –17

கிரேக்க,அராமிய மொழிகளில் முதலில் எழுதப்பட்டது.அது எல்லோருக்காகவும் கொடுக்கப்பட்டது. நமக்கிருக்கும் மொழிபெயர்ப்புகளில் வார்த்தைகள் வித்தியாசமாயிருந்தாலும், அவைகளின் அர்த்தம் ஒன்றே.

தேவனுடைய வார்த்தையை நன்றாய் புரிந்துகொள்ள தேவன் அதை நமக்குக் கொடுத்த விதத்திலேயே நாம் அதை வாசிக்க வேண்டும். நாம் ஒரு வசனத்தைத் தெரிந்தெடுத்து நாம் சொல்ல விரும்புவதுடன் அதை ஒத்துப்போகப்பண்ண முயற்சிக்கக் கூடாது. தேவன் எந்த அர்த்தத்தில் அதைக்கூறியிருக்கிறாரோ அதே அர்த்தத்தில் நாம் அதை வாசிக்க வேண்டும்.

முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விடயம் என்ன?
- வேதாகமத்தைப் பற்றி பவுல் தீமோத்தேயுவுக்கு எதை ஞாபகப்படுத்துகிறார்?

முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தையாயிருக்கின்றது. எனவே நாம் அதன் ஒவ்வொரு வார்த்தையையும் நம்ப முடியும். முழு வேதாகமமும் நமக்கு பிரயோஜனமானது. அது நாம் இரட்சிக்கப்படும் வழியை காண்பித்து, நாம் தேவனுக்கு சேவை செய்ய நமக்கு உதவுகின்றது.

➝ திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:14 –17

⊕ முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவவாறிருக்கலாம்: முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. எனவே முழு வேதாகமமும் நமக்குப் பிரயோஜனமாயிருக்கிறது.

⊕ உப விடயங்கள்

உங்கள் பிரசங்கத்திற்காக இந்த வேத பகுதியை எப்படி பிரிப்பது என்பதை சிந்திக்கவும். முக்கிய விடயத்தைப் போதிப்பதற்கு உங்களுக்கு எத்தனை உப விடயங்கள் தேவைப்படும்?

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தைக் குறித்து இந்த வசனங்களில் மூன்று முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளைச் சூழ்ந்து நீங்கள் உங்கள் பிரசங்கத்தைத் தயாரிக்கலாம்.

வசனங்கள் 14-15: வேதாகமம் ஞானத்தினால் நிறைந்திருக்கிறது

- தீமோத்தேயுவுக்கு அவரின் வாழ்க்கை முழுதும் வேதாகமம் கற்பிக்கப்பட்டிருந்தது.
- இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்படும் வழியை வேதாகமம் நமக்குக் காட்டுகிறது.

வசனங்கள் 15-16: வேதாகமம்

➡ திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:14 –17

தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது

- முழு வேதாகமமும் 'பரிசுத்தமானது' அது ஒருபோதும் தவறாயிருக்காது.
- வேதாகமம் தேவனுடைய வார்த்தையிலிருந்து வந்தது. அவர் ஒருபோதும் தவறுபவரல்ல.

வசனங்கள் 16-17 வேதாகமம் எல்லா மக்களுக்கும் பிரயோஜனமானது

- போதிப்பதற்கும், மக்களுக்கு உதவி செய்வதற்கும், அவர்களைத் திருத்துவதற்கும் அவர்கள் எப்படி வாழவேண்டுமென்று காட்டவும் வேதாகமம் பிரயோஜனமாயிருக்கிறது.
- வேதாகமம் நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரயோஜனமானது. எனவே அதன் மூலம் தேவனுக்கு சேவை செய்ய நாம் முற்றிலும் தயாராகிறோம்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும்ஒரு தலைப்பைக்குறித்து சிந்திக்கவும்.எல்லா வசனங்களும் துன்புறுத்தலையும் எதிர்ப்பையும் குறித்ததாயிருக்கின்றன. உங்கள் தலைப்பு ஒரு வார்த்தையில் இருக்குமானால் அது உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு உதவியாயிருக்கும்.

தேவனுடைய வார்த்தை:

1. ஞானமுள்ளது
2. நம்பகமானது
3. பிரயோஜனமுள்ளது

உங்கள் உப விடயங்கள் முக்கிய விடயத்தை விளக்குகின்றதா என்பதைப் பார்க்கவும்.

⊕ உதாரணத்துடன் விளக்கவும்

வேதாகமம் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு நம்மை முற்றிலும் தகுதிப்படுத்துகின்றது என்று 16ம் வசனம் கூறுகின்றது. உங்கள் பேச்சை கேட்பவர்கள் செய்யும் எதையாவது குறித்தும் அதற்கு அவர்களுக்குத் தேவையானதென்ன என்பதைக்குறித்தும் சிந்தியுங்கள்.

உதாரணமாக:

- மீன் பிடிப்பதற்கு ஒரு தடி, மெல்லிய கம்பி, தங்கூசி முதலியன தேவை.
- சமைப்பதற்கு நெருப்பு, சமையற்பொருட்கள், பானை முதலியன தேவை.
- நீங்கள் ஒரு புது கைத்தொலைபேசி வாங்குவதானால் அத்துடன் ஒரு சிறு உபயோக குறிப்புப் புத்தகமும் கிடைக்கும்.அது தொலைபேசி எப்படி உபயோகிப்பது என்பதைக்காட்டும். நீங்கள் அதை சரியாக பின்பற்றினால் கைத்தொலைபேசியை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.அதை சரியாக வாசிக்காவிட்டால் அதை அரைகுறையாகவே பாவிக்க முடியும். அதில் குறிப்பிட்டிருக்கும் எச்சரிக்கைகளை வாசிக்கா விட்டால் கைத்தொல்பேசி விரைவில் பழுதடைந்து விடக்கூடும்.

நாம் தேவனுக்கு சேவை செய்ய தேவையான யாவும் வேதாகமத்தில் இருக்கிறது.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 3:14-17

பிரயோகித்தல்

- முழு வேதாகமும் தேவனுடைய வார்த்தையாகும். அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும்?
- உங்கள் பேச்சைக்கேட்பவர்களுக்கு வேதாகமத்தைக்குறித்து என்ன கேள்விகள் இருக்கக்கூடும் என்று சிந்திக்கவும்.அவர்களுக்கு எப்படி உங்களால் உதவ முடியும்?
- தேவன் எதற்காக நமக்கு அவருடைய வார்ததையைக் கொடுத்திருக்கிறார்?
- உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் என்ற வார்த்தைகள் வேதாகமத்தைக்குறித்து நமக்கு என்ன கூறுகின்றன? நாம் வேதாகமத்தைப் படிப்பிக்கும்போது எதை எதிர் பார்க்க வேண்டும்?
- வேதத்தை வாசிப்பதில், அல்லது அதை வாசிக்கக் கேட்பதில் அதிக நேரத்தை செலவிட எப்படி உங்கள் பேச்சைக் கேட்பவர்களை ஊக்குவிக்க முடியும் என்று சிந்திக்கவும். அவர்கள் அதைச் செய்வதை தடை செய்வது என்ன? வானத்தையும், பூமியையும் படைத்தவர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்.
- பாவத்திலிருந்து எப்படி இரட்சிக்கப்படுவது என்பதே வேதாகமத்தின் முக்கிய செய்தியாகும். ஒரு வேதாகமத்தை வைத்திருப்பதும், அதை வாசிப்பதும் மட்டும் போதாது. நாம் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம். உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு இதை எப்படி பிரயோகிப்பது என்று சிந்திக்கவும்.

மறுபரீசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:14 –17

ஆரம்பிக்கவும்

முழு உலகிலும் மிகக் கூடுதலாக விற்பனையாகும் புத்தகம் வேதாகமமேயாகும். மற்றெல்லாப் புத்தகங்களையும் விட வேதாகமமே மிக அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது அதிகமாகப் படிக்கப்படுகின்ற, அதிகமாகப் பேசப்படுகின்ற மற்றும் நேசிக்கப்படுகின்ற புத்தகமாய் எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

இந்த வசனங்களிலிருந்து நீங்கள் பதிலளிக்கும் சில கேள்விகளைக் கேட்கவும்.

உதாரணமாக:

- வேதாகமத்தை மிகவும் விசேடமானதாக்குவது எது? அது எந்தளவிற்கு நம்பக்கூடியது?
- வேதாகமத்தின் செய்தி என்ன?
- வேதாகமத்தை எழுதியது யார்?
- நமது சபைகளில் ஏன் வேதபாடம் அவசியம்?

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகித்து இந்த வசனங்கள் கூறுவதென்ன என்பதை விளக்கவும். நீங்கள் வசனங்களை வாசித்து அவைகளை மக்கள் தங்கள் வேதாகமங்களில் பார்க்கும்படி செய்ய மறக்க வேண்டாம்.

1. ஞானமுள்ள வார்த்தை (வச.14-15)

நீங்கள் விசுவாசிப்பது சரியாகவும், உண்மையாகவும் இருக்குமா என்று நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா? உலகத்திற்கும், பிழையான போதகர்களுக்கும் செவி கொடுப்பதனால் நாம் நமது விசுவாசத்தை சந்தேகிக்கப் பண்ணிவிடக்கூடும். பிழையான போதகர்கள் தீமோத்தேயுவின் விசுவாசத்தைக் குழப்பியிருக்கிறார்கள். அவர் நம்புவதைக்குறித்து தீமோத்தேயு ஏன் நிச்சயமுள்ளவராய் இருக்கமுடியுமென்பதை பவுல் அவருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

தீமோத்தேயு சத்தியத்தை பவுலிடமிருந்து கற்றுக்கொண்டார்.பவுல் அதை இயேசுவிடமிருந்து நேராகப்பெற்றுக்கொண்டார். அதற்கு முன் தீமோத்தேயு சத்தியத்தைக்குறித்து அவருடைய தாயிடம் கற்றுக்கொண்டிருந்தார். அவர் அதை பழைய ஏற்பாட்டிலிருந்து பெற்றுக்கொண்டார். தனக்கு படிப்பித்தவர்களைக்குறித்து தீமோத்தேயுவுக்குத் தெரியும். அவர்களை நம்ப முடியுமென்பது அவருக்குத் தெரியும். இரட்சிப்பு இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமே வருகிறதென்று அவர் படித்திருந்தார். உலகிலேயே மிகவும் ஞானமுள்ள வார்த்தைகள் வேதாகமத்திலேயே இருக்கின்றன.

நீங்கள் ஞானமுள்ளவரா? இரட்சிப்புக்கான வழியை நீங்கள் பின்பற்றியிருக்கிறீர்களா?

2. நீங்கள் நம்பக்கூடிய வார்த்தைகள் (வச. 16)

ஆனால் வேதாகமம் சரியென்று நாம் எப்படி உறுதியாய் சொல்ல முடியும்? வேதாகமத்தின் எல்லா பகுதிகளும் தேவனுடைய

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:14-17

வார்ததைகள் என்று 16ம் வசனம் கூறுகின்றது. வேதாகமம் தேவனைக்குறித்த மனிதர்களின் எண்ணங்கள் அல்ல. அது தேவன் - வானத்தையும், பூமியையும் படைத்தவர் தன் வார்த்தைகளை மனிதர்களுக்கு அனுப்பியிருக்கிறார். வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்ட அவருடைய வார்த்தை.

வேதாகமத்தின் ஆக்கியோன் தேவனேயாகும். அவர் தன்னுடைய வார்த்தையை எழுதுவதற்கு 40 வித்தியாசமான மனிதர்களை உபயோகித்தார். அவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பல விதமான பாணிகளில் எழுதினார்கள். ஆனால் அவர்கள் யாவரும் தேவன் கூறியதையே எழுதினார்கள். எனவே ஒவ்வொரு வார்த்தையையும் நாம் நம்ப முடியும். (2பேதுரு 1:20-21 வாசிக்கவும்) தேவன் கொடுத்த எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியிருக்கின்றன.

உங்களை வழிநடத்த தேவனுடைய வார்த்தையை நம்புகிறீர்களா, அல்லது உலக மனிதர்களுடைய வார்த்தையை நம்புகிறீர்களா?

3. பிரயோஜனமான வார்த்தைகள் (வச. 16-17)

தேவன் நமக்கு தன்னுடைய வார்த்தையைக் கொடுத்ததிற்குக் காரணம் நமக்கு அது தேவையாயிருப்பதாலேயேயாகும். அதன் ஒவ்வொரு பகுதியும் நமக்குப் பிரயோஜனமாயிருக்கிறது. தீமோத்தேயுவுக்கு வேத வாக்கியங்கள் எல்லாம் இருந்தன. எனவே அவருக்கு எபேசுவில் ஊழியம் செய்வதற்கு தேவையானவைகள் யாவும் இருந்தன. இன்று நமக்கு வேதாகமம் போதுமானதாயிருக்கிறது. நாம் ஒருபோதும் அதனுடன் ஒன்றையும் கூட்டவும் கூடாது. அதுபோல அதிலிருந்து ஒன்றையும் எடுத்துப்போடவோ அல்லது எதாவதொரு பகுதியை புறக்கணிக்கவோ கூடாது.

வேதாகமம் எவைகளுக்குப் பிரயோஜனமாயிருக்கிறது. வேதாகமம் எது சரி என்பதைப் போதிக்கின்றது. நாம் பிழையானதை சிந்திக்கும் போது அல்லது பிழையானதை செய்யும்போது அது நம்மை திருத்துகின்றது.அது நாம் போக வேண்டிய சரியான வழியைக் காட்டுகிறது.

நாம் வாசிக்கக்கூடிய மிகவும் பிரயோஜனமான புத்தகம் வேதாகமமே. தேவன் அநேக காரியங்களைக் குறித்துப் பேசுகிறார். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் உங்கள் குடும்பத்தையும், சபையையும், வேலையையும், வீட்டையும், உடலையும், உறவுகளையும், பணத்தையும், வார்ததைகளையும், எண்ணங்களையும், திட்டங்களையும் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை நீங்கள் கேட்கவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதற்கு நீங்கள் தேவனுடைய வார்த்தையை பார்க்கப் பழக வேண்டும். எல்லாவற்றிற்கும்

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 3:14-17

அங்கே நமக்கு வழிகாட்டியிருக்கிறது. நமது ஒவ்வொரு நாள் வாழ்க்கைக்கும் தேவனுடைய வார்த்தையை உபயோகித்து அது நமது வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும் வழிநடத்த அதற்கு இடங்கொடுக்க நாம் பழக வேண்டும்.இதற்கு நாம் படிக்க வேண்டியிருக்கும்.

 # உதாரணத்துடன் விளக்கவும்

தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு வேதாகமம் நம்மை முற்றிலும் தகுதிப்படுத்துகிறது என்று 17ம் வசனம் கூறுகிறது. நீங்கள் நினைத்த உதாரணத்தை உபயோகிக்கவும் (திட்டமிடல் பகுதியைப் பார்க்கவும்).

! பிரயோகிக்கவும்

உங்கள் பேச்சின் தொடக்கத்தில் நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் வேதத்தை வாசிக்கவும், அன்பு செலுத்தவும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும், அவர்களுக்கு எப்படி உதவிசெய்வதென்பதைக்குறித்து உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும்.

உலகிலேயே ஞானமுள்ள வார்த்தைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிகின்றீர்களா? நீங்கள் உங்கள் விசுவாசத்தை இயேசுவின் மேல் வைத்து, இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?

முடிக்கவும்

உலகிலே சிறந்த புத்தகம் வேதாகமமே. ஆனால் நாம் அதை வாசிக்க வேண்டும், விசுவாசிக்க வேண்டும், அதற்கு கீழ்ப்படியவேண்டும், மற்றவர்களுக்கு அதை கூற வேண்டும். நீங்கள் வேதாகமத்தை வாசிக்க, அல்லது கேட்க எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள்?

தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர்கள் கேட்டவைகளைக்குறித்து ஜெபிப்பதற்கு உங்கள் செய்தியை கேட்பவர்களுக்கு சற்று நேரத்தை ஒதுக்கவும்.

↑ ஜெபிக்கவும்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் எவ்வளவு உயர்ந்தது என்பதை உங்கள் செய்தியை கேட்பவர்களுக்கு காட்ட வேண்டுமென்று தேவனிடம் கேட்கவும்.

உங்கள் பேச்சைக் கேட்கும் கிறிஸ்தவர்களல்லாத மக்கள் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்படவேண்டுமென்று ஜெபிக்கவும்.

11 தேவனுடைய வார்த்தையை பிரசங்கியுங்கள்

பின்னணி

- இந்தப் பகுதியில் 'தேவனுடைய வார்த்தையை' பிரசங்கிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். தேவனுடைய வார்த்தையைக்குறித்து 3ம் அதிகாரத்தில் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறியிருப்பதென்ன?
- இந்த நிருபத்திலிருந்து, தீமோத்தேயு இருக்கும் சபையைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்வதென்ன?
- அந்த சபையில் இருந்த பிரச்சினைகள் என்ன?
- 4ம் அதிகாரம் முழுவதையும் வாசிக்கவும். பவுலைக்குறித்து நீங்கள் அறிந்து கொள்வதென்ன?

பவுல் அவருடைய வாழ்க்கையும் மற்றும் ஊழியமும் முடிவுக்கு வந்து கொண்டிருப்பதை அறிந்திருக்கிறார். தீமோத்தேயு அவர் செய்துவரும் நல்ல பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். சபையில் இருக்கும் பெரும் பிரச்சினைகளை எப்படி கையாளுவது என்பதைக் குறித்த கட்டளைகளை பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கிறார். தீமோத்தேயு சபை மக்களுக்குப் போதித்து அவர்களைத் திருத்தி, கடிந்து கொண்டு, ஊக்குவிக்கவேண்டும். அதை அவர் கவனமாகவும், பொறுமையுடனும் செய்ய வேண்டும். தேவன் பார்த்துக்கொண்டிருக்கின்றபடியால் அதை அவர் செய்ய வேண்டும். மக்கள் குழப்பமடைந்திருப்பதினாலும், அவர்கள் தேவனுடைய சத்தியத்தை அறியவேண்டியிருப்பதினாலும் அவர் அதைச் செய்ய வேண்டும்.

வாசிக்கவும்

வசனங்கள் 1~5ஐ வாசிக்கவும்

வசனங்களை சத்தமாக வாசிக்கவும். நீங்கள் தயார் செய்வதைக்குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றன. தேவன் உங்கள் பிரசங்கத்தைக்குறித்து உங்களுடன் பேசும் போது அதை கவனத்துடன் கேட்க உங்களுக்கு உதவும்படி அவரிடம் ஜெபியுங்கள். பொறுமையுடனும், கவனத்துடனும், போதிக்க தேவன் உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

ஒவ்வொரு வசனத்தையும் கவனமாக வாசிக்கவும். அவைகளை வாசித்து பின் உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். மீண்டும் இரண்டு அல்லது மூன்றுமுறை வசனங்களை வாசிக்கவும்.

புரிந்துகொள்ளவும்

1ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்

- நீங்கள் வேலை செய்யும்போது இன்னொருவர் அதைக் கவனித்துக்கொண்டிருந்தால், நீங்கள் வேலை செய்யும் விதத்தில் அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தும்?

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:1–5

- தேவன் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும், இயேசு உங்களை நியாயந்தீர்ப்பார் என்பதையும் அறிவது நமது நடத்தையில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தவேண்டும்?
- இயேசு யாரை நியாயந்தீர்ப்பார் என்பதைக்குறித்து இந்த வசனம் என்ன கூறுகிறது?

பவுல் "அவருடைய ராஜ்யத்தை சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" என்று தீமோத்தேயுவுக்கு எழுதியிருப்பது அதை ஒரு கடுமையான கட்டளையாகக் காட்டுகிறது. தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பது மிக முக்கியமாகும். ஒரு நாள் எல்லா மக்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். நாம் இயேசுவால் நியாயந்தீர்க்கப்படுவோம். மற்ற கிறிஸ்தவர்களைவிட அதிக கடுமையாக, போதகர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். யாக்கோபு 3:1ஐ வாசிக்கவும். நாம் இயேசுவின் மேல் அன்பு செலுத்துகிறவர்களாய் இருந்தால் நாம் அவரை சந்தோஷப்படுத்த விரும்புவோம். அவர் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் நம்மைப் பார்த்து "நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே" என்று கூற வேண்டுமென்று நாம் விரும்புவோம். (மத்தேயு 25:23)

📖 2ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்

"கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" என்று கூறப்பட்டிருப்பது ஒருவர் தவறு செய்யும் போது அவரைத் திருத்துவதைக்குறிக்கும்.

- யாருக்கு சொல்லப்படுகிறது? கட்டளை என்ன?
- போதிப்பதைக் குறித்தும் கற்றுக்கொடுக்கப்படுவதைக் குறித்தும் இந்த வசனம் கூறுவதென்ன?

"திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" என்பது வேதாகமத்தைக் குறித்த உரையாடல்கள், குழுக்களாக வேதாகமத்தை ஆராய்தல், வேதாகமக் கலந்துரையாடல்கள், வேத பாடங்கள் நடத்துதல், தனி நபர்களுக்கு கற்றுக்கொடுத்தல், போதித்தல் முதலிய யாவற்றையும் உள்ளடக்கும். 2ம் வசனத்தில் உள்ள "பிரசங்கி" என்ற சொல்லின் அர்த்தம் "அறிவிப்பது" என்பதாகும்.

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்" என்பதற்கு மக்கள் விரும்பினாலும், அல்லது விரும்பாவிட்டாலும் நாம் வேதத்தைப் போதிக்க வேண்டும் என்று அர்த்தமாகும். போதகர்கள் செய்யும் மிக முக்கிய காரியம் அதுவேயாகும்.

📖 வசனங்கள் 3~5ஐ மீண்டும் வாசிக்கவும்

"ஆரோக்கியமான உபதேசம்" என்றால் சரியான போதனை என்று அர்த்தம்.

- சபையில் இருக்கும் சில மக்கள் எதை விரும்புகிறார்கள்?
- இந்த மக்கள் என்ன செய்வார்கள்?

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:1-5

- தீமோத்தேயு என்ன செய்ய வேண்டும்?
- வேதாகமத்திற்குப் பதிலாக மக்கள் எதற்கு செவி கொடுக்கிறார்கள்? (வச.4)
- ஒரு போதகர் அல்லது பிரசங்கியாரின் வேலையைக் குறித்து 5ம் வசனம் என்ன கூறுகிறது?

"செவித்தினவுள்ள" மக்கள், அவர்கள் விரும்புவதை மட்டுமே போதகர்கள் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் நாம் வேதாகமம் கூறும் யாவற்றையும் கேட்க வேண்டும். அதுபோல், வேதாகமம் கூறும் யாவற்றையும் நாம் கூற வேண்டும்.

தேவன் எதைச் செய்ய சொல்லுகிறாரோ அதைச் செய்ய ஒரு போதகர் அல்லது பிரசங்கியார் உறுதியாய் இருக்க வேண்டும். அவர் மக்களைத் திருப்திப்படுத்த, அவர்கள் விரும்புவதை அவர் செய்யக்கூடாது. அவர் தெளிவாக சித்தித்து எப்போதும் சத்தியத்தைப் போதிப்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும். புராணக்கதைகளையும் நமது கலாச்சாரத்தின் பழைய கதைகளையும் நாம் பின்பற்றக்கூடாது.

⊕ முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்கள் கூறும் முக்கிய விஷயம் என்ன?
- 1ம் வசனத்தைக்குறித்து சிந்திக்கவும். இந்த கட்டளை எவ்வளவு முக்கியம் என்பதைக்குறித்து அது நமக்குக் கூறுவதென்ன?

தேவனுடைய வசனத்தைப் போதிப்பதும், கற்றுக்கொடுப்பதுமே சபையிலும், உலகத்திலும் இருக்கும் மிகப் பெரிய தேவையாகும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:1-5

முக்கிய விடயம்
உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இதைப்போன்றிருக்கலாம்:
தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதும், கற்றுக்கொடுப்பதுமே சபையிலும், உலகத்திலும் இருக்கும் மிகப்பெரிய தேவையாகும்.

உப விடயங்கள்
உங்கள் பேச்சு அல்லது பிரசங்கத்திற்கு எப்படி இந்தப் பகுதியைப் பிரிப்பது என்று சிந்திக்கவும்.

- பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கும் இரண்டு பெரிய கட்டளைகள் என்ன? (வசனங்கள் 2,5)
- பவுல் கொடுக்கும் இரண்டு பெரிய காரணங்கள் என்ன? (வசனங்கள் 1,3)

உங்கள் செய்தியை இவைகளைச் சுற்றி நீங்கள் திட்டமிடலாம்.

வசனங்கள் 1-2

- இயேசு உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் உங்களை நியாயந்தீர்ப்பார்.
- இயேசுவைக் குறித்து தேவனுடைய வார்த்தையை விசுவாசத்துடன் பிரசங்கிக்கவும்.
- எல்லோரும் புரிந்துகொள்ளும் விதத்தில் தேவனுடைய வார்த்தையை கவனமாகப் பிரசங்கிக்கவும்.

வசனங்கள் 3-5

- சிலர் உண்மையைக் கேட்க விரும்பமாட்டார்கள்.
- அவர்கள் பாவிகளாயிருக்கிறார்கள் என்று அவர்களுக்குச் சொல்லப்படுவதை மக்கள் விரும்புவதில்லை ~ அவர்கள் நல்லவர்கள் என்று சொல்லப்படுவதையே மக்கள் விரும்புகிறார்கள்.
- கவனமாக சிந்தித்து, மக்களுக்கு அவர்களை மகிழ்விப்பவைகளையல்லாமல், அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்கவும்.
- மக்களுக்கு தொடர்ந்து இயேசுவைக் குறித்த நற் செய்தியைக் கூறிக்கொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் நிறுத்த வேண்டாம்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் ஒரு தலைப்பைக் குறித்துச் சிந்திக்கவும். பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கும் கட்டளைகளின் மேல் கவனம் செலுத்தவும் நீங்கள் இரண்டு பெரிய காரணங்களையும் அத்துடன் சேர்க்கலாம்.

உதாரணமாக:

1. தேவனுடைய வார்த்தையை பிரசங்கியுங்கள். ~ இயேசு வருகிறார்.
2. தேவனுடைய வார்த்தையை பிரசங்கியுங்கள். ~ மக்கள் குழம்பிப்போயிருக்கிறார்கள்.

உங்கள் உப விடயங்கள் உங்கள் முக்கிய விடயத்தை விளக்குகிறதா என்று பார்க்கவும்.

உதாரணத்துடன் விளக்குதல்
மக்கள் விரும்பும் செய்தியையல்ல, அவர்களுக்குத் தேவையான

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:1 –5

செய்தியையே கொடுக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். நமக்குத் தேவையானது எப்போதுமே நாம் விரும்புகிறதாய் இருப்பதில்லை. ஒரு உதாரணத்தைக்குறித்துச் சிந்திக்கவும்.

உதாரணமாக:

- வைத்தியர் நமக்கு ஒரு நோயுமில்லையென்று சொல்லுவதை நாம் விரும்புவோம். ஆனால் நாம் சுகவீனமாயிருந்தால், அந்த உண்மையை நாம் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் அதைக் குணப்படுத்த மருந்து எடுப்போம்.
- நமது வாகனத்தில் எவ்விதப் பிரச்சினையும் இல்லையென்று இயந்திர வல்லுநர் (மெகேனிக்) கூற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் அதன் தடுப்பான்கள் (பிரேக்) உடைந்திருக்குமானால், அதைக்குறித்து நாம் அறிய வேண்டும். இல்லாவிட்டால் நாம் பெரும் ஆபத்தில் சிக்கிக் கொள்வோம்.

பிரயோகித்தல்

- வேதாகமத்திலிருந்து போதனைகளை ஏன் சிலர் கேட்க விரும்புவதில்லை.
- வேதாகமத்தைப் படிப்பிப்பவர்களுக்கு இந்த வசனங்கள் எப்படி பொருந்தும்?
- இயேசு நியாயந்தீர்ப்பதற்கு வருவது விசுவாசிகளில் என்ன மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்?
- கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து எந்த விஷயத்தில் உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் மிகவும் குழப்பமடைகிறார்கள்?

தேவன் ஆரோக்கியம், செல்வம், உயர்ச்சி முதலியவற்றை இந்த உலகிலேயே கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார் என்று நினைத்து அதிக மக்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள். இதைத்தான் மக்கள் கேட்க விரும்புகிறார்கள். எனவே அவர்கள் அப்படியாக பிரசங்கிக்கும் போதகர்களுக்கே செவிகொடுக்கிறார்கள்.

- உங்கள் சபையிலுள்ள மக்கள் புராணக் கதைகள் மற்றும் கதைகளுக்கு செவிக்கொடுக்க விரும்புகிறார்களா? அப்படியானால் நீங்கள் அவர்களிடம் வேதாகமம் மட்டுமே சத்தியத்தைக் கூறுகிறது என்பதைக் கூறவேண்டும்.

மறுபரிசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➞ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:1-5

ஆரம்பிக்கவும்
உங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது என்ன? உங்கள் சபையில் மிகவும் முக்கியமானது என்ன? உங்கள் பட்டணத்திலோ அல்லது கிராமத்திலோ மிகவும் முக்கியமானது என்ன?

இந்த வசனங்களுக்கான பதில், மிகவும் முக்கியமானது வேத வசனம் என்பதாகும்.

இந்த வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள் போதகர்களுக்கும், வேத பாட ஆசிரியர்களுக்குமேயாகும் - சிறுவர்கள் கூட்டம், இளைஞர் கூட்டம், பெண்கள் குழுக்கள், ஐக்கிய குழுக்கள், முதலியவற்றில் போதிப்பவர்கள். வேதாகமத்தைப் போதிக்கும் யாவரும் இந்த வசனங்களுக்குக் கவனமாய் செவிகொடுக்க வேண்டும்.

இந்த கட்டளைகள் பின்பற்றப்படுவதை முழு சபையும் உறுதி செய்துகொள்ள வேண்டும். அவர்களுக்குப் போதிப்பவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்க வேண்டுமென்பதை சபை மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

விளக்கவும்
உங்கள் உப விடயங்களை உபயோகித்து இந்த வசனங்கள் கூறுவதென்ன என்பதை விளக்கவும். நீங்கள் வசனங்களை வாசித்து அவைகளை மக்கள் தங்கள் வேதாகமங்களில் பார்க்கும்படி செய்ய மறக்க வேண்டாம்.

1. தேவனின் வார்த்தையைப் போதிக்கவும் - இயேசு வருகிறார் (வச. 1-2)

உங்கள் நாட்டில் ஒரு முக்கிய செய்தி இருக்குமானால், அதை எப்படி மக்கள் அறிந்துகொள்வார்கள்? தேவனுடைய செய்தி அதைவிட மிகவும் முக்கியமானது. அவர் அதை மற்றவர்களுக்குக் கூறும்படி பணிக்கிறார். ஒரு போதகராய் அல்லது வேதாகம ஆசிரியராய் இருப்பது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும்.

ஒருமுறை ஒரு இளம்போதகர் தன் சபையில் மக்கள் 100 பேர்கள் மட்டுமே இருப்பதாகக் கவலையுடன் கூறினார். அப்பொழுது அங்கிருந்த ஒரு முதிர்ந்த போதகர் இப்படிக் கூறினார் : "நியாயத்தீர்ப்பின் நாளில் கணக்கு கொடுப்பதற்கு அது போதும்."

இயேசுகிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்க்கும் நாளில், அவருடைய வார்த்தையை மக்களுக்குக் கூறுவதில் நீங்கள் உண்மையாய் இருப்பதை அவர் காண்பாரா?

எல்லா வேளைகளிலும் தேவனுடைய வார்த்தையைக் கூறுவதே நமது வேலையாகும். மக்கள் நாம் வேறொன்றை செய்ய வேண்டுமென்று விரும்பும்போது, நாம் இதைச்செய்ய வேண்டும். போதனை மக்களுக்கு நல்லவழியைக் காண்பித்து, தீய வழியை எடுத்துக்காட்டி, அவர்கள் நல்ல வழியில் நடக்க அவர்களை ஊக்குவிப்பதாய் இருக்க வேண்டும். அதற்கு பொறுமையும், கவனிப்பும் அவசியம். ஏனென்றால் நாம் யாவரும் மெதுவாகவே கற்றக்கொள்கிறோம்.

2. தேவனுடைய வார்த்தையை போதிக்கவும் - மக்கள் குழம்பியிருக்கிறார்கள் (வச. 3-5)

போதனை ஏன் முக்கியம்? ஏனென்றால் அதுவே எல்லோருடைய தேவையாயிருக்கிறது.

ஒருவர் சுகவீனமாயிருக்கும்போது நாம் அவருக்கு மருந்து கொடுக்கிறோம். அவர் பூரண சுகமடையும் வரைக்கும் நாம் மருந்தை நிறுத்துவதில்லை. சில சபைகள் வேதாகமத்தைப் படிப்பிப்பதை நிறுத்திவிட்டு மக்களுக்கு அதிக விருப்பமான வேறு காரியங்களில் ஈடுபட்டு விடக்கூடும். ஆனால் அவைகளால் அவர்களுக்கு பிரயோஜனமுண்டா? நாம் தெளிவாக சிந்தித்து சத்தியத்தைப் போதிக்க வேண்டும். அதுவே மக்களின் தேவையாயிருக்கிறது - அவர்கள் வித்தியாசமானவைகளை விரும்பினாலும் கூட.

நாம் அவர்களை கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, தவறு எது என்று காண்பித்து, அவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும். நாம் நமது போதனையில் அதைச் செய்கின்றோமா?

திட்டமிடல் பகுதியில் நீங்கள் நினைத்த உதாரணத்தை பயன்படுத்தவும்.

சபையிலுள்ள அநேக மக்கள் வேதாகமத்தின் செய்தியைக் குறித்து குழப்படைந்திருக்கிறார்கள். தேவன் இவ்வுலகத்திலேயே ஆரோக்கியம், செல்வம், உயர்ச்சி முதலியவற்றை வாக்களித்திருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அது ஒரு அழகான செய்தியாகக் காணப்படலாம். ஆனால் அது உண்மையல்ல தேவன் நம்முடைய எல்லா வியாதிகளையும் குணமாக்கி நமக்கு அதிக பணத்தை தருவதாக வாக்களிக்கவில்லை. நாம் ஏழைகளாயிருந்தாலும் நமக்கு சமாதானத்தைத் தருவதாக அவர் வாக்களிக்கிறார். நாம் மரிக்கும்போது பரலோகத்தை நமக்கு வாக்களிக்கிறார்.

வசனம் 5 நமக்குச் சொல்வதென்ன? நாம் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும். விசுவாசமாயிருக்க வேண்டும். எல்லோருக்கும் நற்செய்தியை கூற வேண்டும். ஒரு வேலைக்காரனாக தேவனுக்கு நமது எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும்.

நடைமுறையில் இது எப்படி காணப்படும் என்பதைக்குறித்துக் பேசவும். அந்தக் காரியங்களை நாம் எப்படி செய்வோம்?

நாம் தேவனுடைய வார்த்தையை எல்லோருக்கும் கூற வேண்டும். செய்தியை கேட்பதற்கு முன் அவிசுவாசிகள் இரட்சிக்கப்பட முடியாது (ரோமர் 10:10-15). அவர்கள் தீமையான செய்தியாகிய பாவம், நியாயத்தீர்ப்பு, நரகம் முதலியவற்றைக் குறித்து கேட்கவேண்டும். அவர்கள் நல்ல செய்தியாகிய இயேசுவையும், அவருடைய சிலுவையையும் குறித்தும் கேட்க வேண்டும்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:1 -5

ⓘ பிரயோகிக்கவும்
திட்டமிடல் பகுதியிலுள்ள பிரயோகித்தலின் கீழ் வரும் சில கேள்விகளுக்குப் பதில் அளிப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.

வேதாகமத்தின் செய்தியைக் குறித்து நீங்கள் குழப்படைந்திருக்கிறீர்களா?நீங்கள் வேதாகமத்தின் போதனைகளைப் பின்பற்றாமல் வேறு போதனைகளைப் பின்பற்றுகிறீர்களா? உங்களுக்கு பணத்தையும், வெற்றியையும் வாக்களிக்கும் ஊழியக்காரனை நீங்கள் தேடுகிறீர்களா?

தேவனுடைய வார்த்தை இன்று உங்களை திருத்துகின்றது. தேவன் உண்மையாகக் கூறுவதென்ன என்பதற்கு செவி கொடுக்கிறீர்களா?

ⓘ நிறைவு செய்யவும்
உங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது என்ன? அது தேவனுடைய வார்த்தையாயிருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையைக் கேட்பது எவ்வளவு முக்கியமானது? அது வேலைக்கு முன்பதாக வரவேண்டும். உங்கள் குடும்பத்தில் தேவனுடைய வார்த்தையைக் கேட்பது எவ்வளவு முக்கியம்?

தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் தேவனுடைய வார்தையை கேட்பதையும் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதையும் அவர் காண்கின்றாரா?

ⓘ ஜெபிக்கவும்
நீங்கள் கற்றுக்கொடுத்ததின் மூலம் உங்கள் செய்தியைக் கேட்பவர்கள் தேவனுடைய வார்த்தையை கேட்பதிலும், வாசிப்பதிலும் அதிக நேரத்தை செலவளிக்க தீர்மானிக்கும் படி தேவனிடம் கேளுங்கள்.

நீங்களும், மற்றவர்களும் தேவனுடைய வார்த்தையை விசுவாசத்துடன் பிரசங்கிக்கவும், கற்பிக்கவும் உதவி செய்யும்படி ஜெபிக்கவும்.

12 கடைசிவரை செல்லுங்கள்

பின்னணி

- வசனங்கள் 1~8 வாசிக்கவும். தீமோத்தேயுவுக்குச் செய்யும்படி பவுல் கூறியதிலிருந்து எப்படி பவுலின் வாழ்க்கையைக் குறித்த பரிசீலனை தொடர்கிறது?

- பவுல் தன்னுடைய வாழ்க்கையை ஒரு பானபலியாகப் பார்க்கிறார். இது பழைய ஏற்பாட்டின் காலத்தில் செலுத்தப்பட்ட பலிகளில் ஒன்றாகும்.அவருடைய வாழ்க்கை ஒரு பலியாயிருப்பதைக்குறித்து பவுல் இந்த நிருபத்தில் என்ன கூறுகிறார்?

இந்த அதிகாரமே அப்போஸ்தலர் பவுலினால் கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட வார்த்தைகளாகும்.அவர் தன் வாழ்க்கையின் முடிவுக்கு வந்துகொண்டிருப்பதை அவர் அறிவார். கிறிஸ்து இயேசு வருகிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளும் படியும், கடைசிவரை தொடர்ந்து செல்லும்படியும் அவர் திமோத்தேயுவுக்குக் கூறுகிறார். அவர் தன்னுடைய சொந்த வாழ்க்கையைக் குறித்துக்கூறி தீமோத்தேயுவை ஊக்குவிக்கிறார். பவுல் தன்னுடைய வாழ்க்கையை தேவனுக்கான ஒரு பலியாகப் பார்க்கிறார். அவர் ஓட்டத்தின் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறார். அவர் கர்த்தரின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

வாசிக்கவும்

வசனங்கள் 6~8ஐ வாசிக்கவும்

பவுல் அவருடைய வாழ்க்கையையும், மரணத்தையும் விளக்குவதற்கு உதாரணங்களை உபயோகிக்கிறார். அவை என்ன?அவை இயேசுவைக்குறித்தும், பவுலைக் குறித்தும் என்ன கூறுகின்றன?

ஒவ்வொரு வசனத்தையும் கவனமாக வாசிக்கவும். அவைகளில் கூறப்பட்டிருப்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும். அந்த பகுதி எதைக்குறித்துக் கூறுகிறது என்பதை புரிந்து கொள்ள இது உதவியாயிருக்கும். அதை மீண்டும் இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். கேள்விகள் மற்றும் குறிப்புகளை உபயோகித்து விளங்கிக்கொள்ளவும்.

புரிந்துகொள்ளவும்

6ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்

- ஒரு பானபலி அல்லது பலி என்றால் என்ன?

- பவுல் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது என்று கூறுகிறார். அவர் எங்கே போகிறார்?

பானபலியைக்குறித்த உதாரணம் எண்ணாகமம் 15:5-10; 28:7 முதலிய வசனங்களிலிருந்து வருகிறது. அது போஜன பலியின்மேல் வார்க்கப்படவேண்டும். தேவன்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

நமக்குச் செய்திருக்கும் எல்லா நன்மைகளுக்காக நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளும் அவருக்குப் பலியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

பவுல் தன் மரணத்தைக் குறித்து "பிரியும் காலம்" என்று கூறுகிறார். அவர் பிரிந்து எங்கே போகிறார்? கிறிஸ்தவர்கள் மரிக்கும் போது அவர்கள் இதைவிட நல்லதோர் இடத்திற்குப் போவார்கள்.

7ம் வசனத்தை மீண்டும் வாசிக்கவும்

- பவுல் செய்த மூன்று காரியங்கள் என்ன?
- கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி நல்ல போராட்டத்தைப் போலவும், ஒரு ஓட்டப் பந்தயத்தைப் போலவும் இருக்கிறது?
- பவுலின் ஓட்டத்தைக் குறித்து அறிந்துகொள்ள அப்போஸ்தலர் 20:22-24ஐ வாசிக்கவும்.

பண்டைய ஒலிம்பிக் விளையாட்டுகளில் மல்யுத்தமும், நீண்டதூர ஓட்டப் பந்தயங்களுமே முக்கியமாக விளங்கின.

பவுலின் யுத்தமும், ஓட்டமும் "விசுவாசத்தைக் காத்துக் கொள்வதற்காகவே" இருந்தது. அதாவது விசுவாசத்தில் உறுதியாய் இருந்து இயேசுவின் உண்மையான செய்தியை அறிவிப்பதும், அதற்காக வாழ்வதுமேயாகும்.

வசனம் 8ஐ மீண்டும் வாசிக்கவும்

- பவுல் என்ன கிரீடத்தை அல்லது வெற்றிக்கான பரிசை எதிர்பார்த்தார்?
- வேறு யாருக்கு அந்த கிரீடத்தை எதிர்பார்க்க முடியும்?
- இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக எப்படி உண்மையான விசுவாசிகள் காத்திருப்பார்கள்?

இன்று விளையாட்டு வீரர்கள் தங்கப் பதக்கத்திற்காக ஓடுகிறார்கள். பவுலின் காலத்தில் அவர்கள் இலைகளினால் செய்யப்பட்டதொரு கிரீடத்திற்காக ஓடினார்கள். (யாக்கோபு 1:12; 1 பேதுரு 5:1,4 ஐப் பார்க்கவும்).

நாம் விசுவாசிக்கும்போது, நாம் நீதிமான்களென்று அறிவிக்கப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவினாலே நாம் தேவனுடைய பார்வையில் நீதிமானாக இருக்கிறோம். நியாயந்தீர்ப்பின் நாளிலே நாம் எல்லோர் பார்வையிலும் நீதிமான்களாயிருப்போம்.

பவுலைப் போலவே உண்மையான விசுவாசிகள் இயேசுவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவரைக் காணவும், அவருடன் இருக்கவும் விரும்புகிறார்கள். இது உண்மையான விசுவாசிகளுக்கு ஒரு நல்ல அடையாளமாகும்.

⊕ முக்கிய விடயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்களில் அநேக உதாரண விளக்கங்கள் உள்ளன. பவுல் சொல்லும் பெரிய விடயம் என்ன?

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

மூன்று வசனங்களுக்கும் நீங்கள் ஒவ்வொரு சிறு விளக்க வார்த்தையை எழுத முடியும்.

உதாரணமாக:

இயேசுவுக்காக வாழ்வதற்காக எல்லாவற்றையும் கொடுத்துவிடுங்கள். இயேசுவை விசுவாசிப்பதை நிறுத்த வேண்டாம்.இயேசுவை நாம் காணும் எல்லைக்கோட்டை அடைவதை எதிர்பாருங்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

முக்கிய விடயம்
உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இதைப்போன்றிருக்கலாம்:
இயேசுவுக்காக ஜீவிப்பதற்காக எல்லாவற்றையும் கொடுங்கள். இயேசுவை நம்புவதை விட்டுவிட வேண்டாம். முடிவுக்கோட்டை நோக்கி முன்னேறுங்கள். அங்கே நீங்கள் இயேசுவைக் காண்பீர்கள்.

உப விடயங்கள்
உங்கள் பேச்சுக்கு அல்லது பிரசங்கத்திற்கு இந்தப்பகுதியை எப்படி நீங்கள் பிரிக்கப்போகிறீர்கள் என்பதைக்குறித்து சிந்திக்கவும்.

நீங்கள் இந்த மூன்று வசனங்களின் அமைப்பை உபயோகிக்கலாம்.

வசனம் 6: ஒரு பலி

- ஒரு வார்க்கப்பட்ட பானபலி
- பவுல் மரணத்தை எதிர்பார்க்கிறார். அவர் இயேசுவுக்காக கொல்லப்படலாம்.

வசனம் 7: ஒரு ஓட்டப் பந்தயம்

- பவுல் நல்ல போராட்டத்தைப் போராடினார்.
- பவுல் ஒரு நீண்ட தூர ஓட்டத்தை ஓடி முடித்தார்.
- தேவனையும், இயேசுவையும் குறித்த உண்மையான செய்தியைக்

கூறுவதையும், அவருடைய நம்பிக்கையையும் பவுல் விட்டு விடவில்லை.

வசனம் 8: ஒரு கிரீடம் அல்லது பரிசு

- வெற்றியின் கிரீடம் பரலோகத்தில் அவருக்காகத் தயாராயிருக்கிறது.
- இந்த கிரீடம் எல்லா விசுவாசிகளுக்கும் நியாயாதிபதியான இயேசுவினால் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் ஒரு தலைப்பைக்குறித்து சிந்திக்கவும். உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் என்ன செய்யவேண்டுமென்பதைக்குறித்து சிந்திக்கவும். ஒரு பிரசங்கம் இயேசுவைப் பின்பற்றுவது என்றால் என்ன என்று விளக்குவது மட்டுமன்றி விசுவாசிகள் அதைச் செயல்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கிறது.

உதாரணமாக:

1. எல்லாவற்றையும் கொடுங்கள்
2. விசுவாசமாய் ஓடுங்கள்
3. எதிர்பார்ப்புடன் காத்திருங்கள்

உங்கள் முக்கிய விடயத்தை, உப விடயங்கள் விளக்குகிறதா என்று பார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்குதல்

அநேக உதாரண விளக்கங்களை இந்த வசனங்களில் நாம் காணலாம். பானபலி, போராட்டம், ஓட்டம், வெற்றியின் கிரீடம். இந்த உதாரணங்களைப் பவுல் எப்படி உபயோகிக்கிரார் என்பதைக் குறித்துக் கவனமாக சிந்திக்கவும்.

- கிறிஸ்தவ வாழ்க்கை எந்தவிதத்தில் ஒரு போராட்டத்தை அல்லது ஓட்டத்தைப்போன்றது?

உங்கள் பேச்சு தெளிவாய் இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும். ஏனென்றால் மக்களுடன் சண்டை போட வேண்டுமென்று, அல்லது குடிவகைகளை ஊற்றிக் கொடுக்கவேண்டுமென்று மக்கள் தவறாக நினைத்து விடக்கூடும்.

- பவுல் கடைசி வரை சென்றார். நீங்கள் ஒரு ஓட்டப்பந்தயத்தின் நடுவில் ஓட்டத்தை நிறுத்திவிட்டால் என்ன நடக்கும்?

! பிரயோகித்தல்

- எந்த விதங்களில் நீங்களும் உங்கள் பேச்சைக் கேட்பவர்களும் வாழ்க்கையை இயேசுவுக்காக ஒரு பானபலியாக வார்க்கமுடியும்?
- பவுல் செய்வதைப்போல போராட்டத்தையும், ஓட்டத்தையும் நீங்கள் பிரயோகிப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்: விசுவாசத்தைக் காத்துக்கொள்ளல். விசுவாசத்தைக் காத்துக்கொள்வது என்பது என்ன?
- இயேசு ஒருநாள் வருவார் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோம் என்பதில் அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும்?
- இயேசுவின் வருகைக்கு நீங்கள் ஆயத்தமா? அல்லது உங்கள் சொந்தவழிகளில் நீங்கள் இன்னும்

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

மறுபரிசீலனை செய்தல்

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள் காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

ஆரம்பிக்கவும்

ஒரு ஓட்டப்பந்தயத்தில் சிலர் மிக வேகமாக ஓட்டத்தைத் ஆரம்பிப்பார்கள், ஆனால் முடிவுக் கோட்டிற்குப் போய் சேராமல் பாதியிலேயே நின்றுவிடுவார்கள். பவுல் தன் வாழ்க்கையின் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார். சிலர் ஓட்டத்தை கடைசிவரை ஓட மாட்டார்களென்று அவர் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார் (வச. 3,4). தீமோத்தேயுவை கடைசிவரை போகும்படி அவர் கூறுகிறார் (வச. 5). அவர் தான் முடிவுவரை வந்துவிட்டதாகக் கூறுகிறார்: “நான் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது” (வச. 6).

நீங்கள் கடைசிவரை கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்துகொண்டிருக்க விரும்புகிறீர்களா? கடைசிவரை கிறிஸ்துவுக்குப் பிரயோஜனமாயிருக்க நீங்கள் விரும்புகிறீர்களா?

விளக்கவும்

உங்கள் உப விடயங்களை உபயோகித்து இந்த வசனங்கள் கூறுவதென்ன என்பதை விளக்கவும். நீங்கள் வசனங்களை வாசித்து அவைகளை மக்கள் தங்கள் வேதாகமங்களில் பார்க்கும்படி செய்ய மறக்க வேண்டாம்.

1. எல்லாவற்றையும் கொடுக்கவும் (வச. 6)

பவுல் அவருடைய வாழ்க்கையை

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

ஒரு பானபலியாக நினைக்கிறார். அவருடைய முழு வாழ்க்கையும் தேவ ஆராதனையில் வார்க்கப்பட்டுப்போயிற்று. அவர் எல்லாவற்றையும் கொடுக்க விருப்பப்பட்டார். ஏனென்றால் தேவன் அவ்வளவு பெரியவராயிருக்கிறார்.

தென் அமெரிக்காவிலுள்ள அங்கா இந்தியன்ஸ் ஜாதியருக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்றபோது ஜிம் எலியேகட் கொல்லப்பட்டார். "தன்னால் தொடர்ந்து வைத்துக்கொள்ள முடியாததைக் (சரீர வாழ்க்கை) கொடுத்து, தன்னால் ஒருபோதும் இழக்க முடியாததைப் (நித்தியவாழ்க்கை) பெற்றுக்கொள்ளுகிறவன் மடையனல்ல" என்று அவர் எழுதினார்.

நமது ஆராதனை ஞாயிற்றுக்கிழமை சபையில் பாடுவதுமட்டுமல்ல. நாம் வாழும் விதத்தின் மூலம் நாம் ஒவ்வொருநாளும் அவரை ஆராதிக்கிறோம். நீங்கள் இயேசுவை ஆராதிக்க ஒவ்வொரு நாளும் எல்லாவற்றையும் கொடுக்கிறீர்களா?

பவுல் தன் உயிரைக் கொடுக்க எதிர்பார்க்கிறார். பவுல் தன் மரணத்தை ஒரு தீயகாரியமாகப் பார்க்கவில்லை. அவர் அதை இந்த இடத்தைவிட்டுப் போகும் ஒரு நிகழ்வாகப் பார்க்கிறார். அவர் வீட்டுக்குப்போகிறார்.

பவுல் பிலிப்பியருக்கு இப்படி எழுதினார்: "கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப்பியர் 1:21). நீங்களும் உங்கள் வாழ்க்கையை அப்படிப் பார்க்கிறீர்களா? அதை மற்றவர்கள் உங்கள் வாழ்க்கையில் காண்கிறார்களா?

2. விசுவாசமாய் ஓடவும் (வச. 7)

பவுல் தன்னுடைய வாழ்க்கையை ஒரு நீண்ட, கடினமான ஓட்டமாய்ப் பார்க்கிறார். அவருடைய ஓட்டம் "கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்காக" (அப்போஸ்தலர் 20:24) இருந்தது. பவுல் போன இடங்களிளெல்லாம் இதைச் செய்தார். தேவன் எங்களுக்குக் கொடுத்திருக்கும் வேலைக்கு நாம் உண்மையாய் இருக்க வேண்டும். நாம் விட்டுவிடாமல் தொடர்ந்து முன்னேறவேண்டும்.

நீண்ட தூரம் ஓடுவது கடினமானது. அதை நிறுத்திவிட வேண்டுமென்று நமக்குத் தோன்றும். ஆனால் கிறிஸ்தவ ஓட்டத்தை நாம் ஒருபோதும் நிறுத்தி விடக்கூடாது, அது எவ்வளவு கடினமாயிருந்தாலும் கூட.

மற்றவர்கள் இயேசுவை அறிந்துகொள்ளும் பொருட்டு நாம் துன்பம் அனுபவிக்கவும், ஆபத்துக்களுக்கு முகம்கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

3. எதிர்பார்ப்புடன் காத்திருக்கவும் (வச. 8)

பவுல் துன்பம் அனுபவிக்கவும், ஒரு பலியாக மாறவும் விரும்பினார். ஏனென்றால் இயேசு மீண்டும் வரும்போது வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைக்குறித்து

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

அவர் ஆர்வமிக்கவராயிருந்தார்.

ஒலிம்பிக் போட்டிகளில் ஒருவருக்குத்தான் தங்கப்பதக்கத்தை வெல்ல முடியும். ஆனால் தேவனுடைய குடும்பத்தில் இயேசுவை விசுவாசித்து அவர்மேல் அன்பு செலுத்தும் ஒவ்வொருவரும் வெற்றிப் பரிசாக நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

நீங்கள் இயேசுவைப் பார்க்கப்போவதைக் குறித்து கிளர்ச்சியடைகிறீர்களா? அப்படியில்லாவிட்டால், நீங்கள் உண்மையிலே இயேசுவின் மேல் அன்பு செலுத்தி, நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

பரலோகத்தைக்குறித்து அதிகமாக சிந்திப்பது இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கும் துன்பத்தையும், வேதனையையும் நாம் தாங்கிக்கொள்ள நமக்கு உதவியாயிருக்கும்.

 # உதாரணத்துடன் விளக்கவும்

ஒரு விளையாட்டு வீரனைக் குறித்துக் கதைக்கவும். உதாரணமாக ஒரு தூர ஓட்டப் பந்தய வீரன்.

அவன் ஓட்டத்தில் வெற்றியடைய விரும்புகிறான் அவன் தன் சக்தியை சேமித்துவைப்பதில்லை. அவனால் முடிந்த அளவு கஷ்டப்பட்டு அவன் ஓடுகிறான். அவனுக்குக் கஷ்டமாயிருந்தாலும் அவன் தொடர்ந்து ஓடுகிறான். அவன் ஓட்டத்தில் வெற்றியடைய வேண்டுமென்று மட்டுமே நினைக்கிறான்.

! பிரயோகிக்கவும்

- தேவனை ஆராதிப்பதில் நீங்கள் எப்படி எல்லாவற்றையும் கொடுப்பீர்கள்.
- தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் ஓட்டத்தை எப்படி சிறப்பாக ஓடுவீர்கள்?
- இயேசு மீண்டும் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறீர்களா?
- பவுலின் வாழ்க்கையை போல உங்கள் வாழ்க்கையும் இருப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன?

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் மாறும்படி அவர்களுக்கு சவால் விடுவதற்கான யோசனைகளைக் குறித்துப் பார்ப்பதற்கு உங்கள் 'திட்டமிடல்' பகுதியைப் பார்க்கவும் - விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும்.

! நிறைவு செய்யவும்

உங்களுக்கு இருப்பது ஒரு வாழ்க்கை மட்டுமே. உங்கள் வாழ்க்கை எவ்வளவு காலம் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் முழுமையாக இயேசுவுக்காக வாழ்வதற்காக ஒப்புகொடுங்கள்.

இதைக்குறித்து உங்களுக்கு ஒரு பாடல் தெரிந்திருக்கலாம். உதாரணமாக 'நல்ல போராட்டத்தைப் போராடு'.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:6-8

ⓘ ஜெபிக்கவும்
இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து அதிக ஆர்வமுடன் இருக்க உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

நீங்கள் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்ததின் மூலம் உங்கள் பேச்சை கேட்பவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிட முன்வரவேண்டுமென்று ஜெபிக்கவும்.

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

13 நீங்கள் ஒரு நல்ல நண்பரா?

பின்னணி

- பவுல் ஒரு பெயர்ப்பட்டியலுடன் தன் நிருபத்தை முடிப்பது வழக்கம். அது ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- முழுநிருபத்தையும் வாசிக்கவும். இந்த நிருபத்தில் நீங்கள் காணும் முக்கிய விடயங்கள் என்ன?
- 4:9~22ஐ வாசிக்கவும் இந்த வசனங்கள் எப்படி இந்த நிருபத்தின் முக்கிய விஷயங்களுடன் பொருந்துகின்றன?

பவுல் குறிப்பிட்ட சில மக்களுக்கு வாழ்த்துதல் அனுப்புவதுடன் அவர்களிடம் சில விண்ணப்பங்களையும் முன் வைக்கிறார். இந்த நிருபம் உண்மையான ஒரு சபையின் உண்மையான மக்களுக்கு எழுதப்பட்டதென்பதை இந்த பெயர்கள் நமக்குக் காட்டுகின்றன. இந்த வசனங்கள் ஒரு பெயர்பட்டியலைவிட அதிக முக்கியமான ஒன்றை வெளிப்படுத்துகின்றன. அவை நமக்கு இந்த நிருபத்தின் முக்கிய விடயத்தை மீண்டும் நினைவூட்டுகின்றன: விசுவாசத்துடன் சத்தியத்தைப் பேசிக்கொண்டும், அதில் வாழ்ந்துகொண்டும் தொடர்ந்து முன்னேறிச்செல்லுங்கள். நீங்கள் தேமாவைப் போல பிரிந்து போய் விடுவீர்களா? அலெக்சாந்தரைப்போல சபைக்கு தீங்கு செய்வீர்களா? அல்லது மாற்குவைப் போல உதவி செய்வீர்களா?

வாசிக்கவும்

வசனங்கள் 9~22ஐ வாசிக்கவும்

ஒவ்வொரு வசனமாய் கவனமாய் வாசிக்கவும். ஒவ்வொரு வசனமும் என்ன கூறுகிறது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும்.

புரிந்துகொள்ளவும்

- ஒரு பெயர்ப்பட்டியலைத்தயார் செய்யவும். ஒவ்வொரு பெயருக்கும் எதிராக அவரைக்குறித்துப் பவுல் கூறுவதை எழுதவும்.
- அங்கே குறிப்பிட்டிருக்கும் மக்களைக்குறித்து மேலதிகமாக உங்களுக்கு என்ன தெரியும்?

வசனங்கள் 9~13ஐ மீண்டும் வாசிக்கவும்

- இந்த வசனங்களிலிருந்து பவுலைக் குறித்து நீங்கள் என்ன அறிந்து கொள்கிறீர்கள்?
- ஏன் தேமா பவுலை விட்டுப் பிரிந்து போனார்?
- மாற்கு மீண்டும் வரவேண்டுமென்று பவுல் விரும்பவது ஏன் ஆச்சரியமாயிருக்கிறது? (அப்போஸ்தலர் 15:36~41)

பவுல் ஏறக்குறைய தனிமையில் விடப்பட்டிருக்கிறார். சில நண்பர்கன் பிழையான காரணங்களுக்காக அவரைவிட்டுப் போய்விட்டார்கள். தேமா பவுலுடன் கொலோசெயில்

ஊழியம் செய்தார். (கொலோசெயர் 4:14). ஆனால் அவர் பிரிந்து போய்விட்டார். அவர் தன்னுடைய சொந்த தேவைகளை ஊழியத்தை விட மேலாக நினைத்தார். மற்ற நண்பர்கள் பவுலை விட்டு நல்ல காரணங்களுக்காகப் பிரிந்து போனார்கள். வேதாகமத்தின் அடுத்த நிருபத்தைப் பெறுபவர் தீத்துவாகும். அவரையும், தீமோத்தேயுவையும் பவுல் சபைகளுக்கு உதவும் படி அனுப்பினார்.

பவுலுடன் கடைசிவரை இருந்த நண்பர் லூக்காவாகும். அவர் “லூக்கா” சுவிசேஷத்தையும் “அப்போஸ்தலர் நடபடிகளையும்” எழுதினார்.

மாற்குவை தன்னுடன் இருப்பதற்கு அனுப்பும்படி பவுல் தீமோத்தேயுவிடம் கேட்கிறார். அநேக வருடங்களுக்கு முன் சுவிசேஷ (மிஷனரி) ஊழியத்தை செய்வது மாற்குவுக்குக் கடினமாய்த் தோன்றினது. பர்னபா அவருக்கு இன்னொரு வாயப்பைக் கொடுத்தார். (அப்போஸ்தலர் 15:36-41). பர்னபா செய்தது சரியே. மாற்கு அதன்பின் மிகவும் பிரயோஜனமானவராய் மாறினார். அவர் மாற்கு சுவிசேஷத்தையும் எழுதினார்.

வசனங்கள் 14~15 ஐ மீண்டும் வாசிக்கவும்

- அலெக்சாந்தரைக்குறித்து நாம் என்ன அறிகிறோம்?
- பவுல் அலெக்சாந்தருக்கு எப்படி பதிலளிக்கிறார்?

துரோவா பட்டணத்தைவிட்டுப் பவுல் அவசரமாக வெளியேறியதாக 13ம் வசனம் கூறுகிறது. அவருடைய எல்லாப் புத்தகங்களையும் அவர் அங்கேவிட்டு வந்திருந்தார். அவர் அவசரமாக வெளியேறுவதற்கு அலெக்சாந்தர் காரணமாயிருந்திருக்கலாம். அப்போஸ்தலர் 19:23-41ல் எபேசுவில் சபைக்குப் பிரச்சினையை உண்டாக்கினதாக சொல்லப்பட்டிருக்கும் மனிதர்களில் ஒருவர் அலெக்சாந்தராயிருக்கலாம். பவுல் அவனைக்குறித்து தீமோத்தேயுவை எச்சரித்து அவனுக்குப் பதில் செய்வதை தேவனிடம் விட்டுவிடுகிறார்.

வசனங்கள் 16~18ஐ மீண்டும் வாசிக்கவும்

- பவுலுக்கு நடந்தது என்ன?
- அவரைதைரியப்படுத்தினது யார்?

பவுல் குறிப்பிடும் வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடந்தது என்று தெரியவில்லை. அது ஒருவேளை அப்போஸ்தலர் நடபடிகைகள் புத்தகத்தின் கடைசிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒன்றாய் இருக்கலாம். அவருடைய எல்லா நண்பர்களும் அவரைப் பிரிந்து சென்று விட்டார்கள். ஆனால் இயேசு அவருடனிருந்தார்.

வசனங்கள் 19~22ஐ மீண்டும் வாசிக்கவும்

- துரோப்பீமுவை பவுல் சுகமாக்கவில்லை என்பதைப் பார்ப்பது ஏன் முக்கியமனது?
- 22ம் வசனத்திலுள்ள ஜெபம் என்ன?

கற்றுக்கொள்ளுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

பவுல் ஒரு அப்போஸ்தலராயிருந்தாலும், அவரால் எல்லோரையும் சுகமாக்க முடியாது. ஏனென்றால் தேவன் எப்போதும் ஒரு அற்புதம் செய்து மக்களை சுகமாக்குவதில்லை. நாம் தேவனின் கிருபையின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம். (வச.22). இந்தக் கடைசி வார்த்தைகளே நாம் ஒருவருக்கொருவர் ஜெபிக்க வேண்டிய தினசரி ஜெபமாயிருக்க வேண்டும்.

⊕ முக்கிய விஷயத்தைக் கண்டுபிடிக்கவும்

- இந்த வசனங்களில் அநேக உதாரண விளக்கங்கள் உள்ளன. பவுல் சொல்லும் பெரிய விடயம் என்ன?
- இதுவே இந்த நிருபத்தின் கடைசிப் பகுதியாகும். நீங்கள் 2 தீமோத்தேயுவை கடைசிவரை போதித்து முடித்தவிட்ட இந்த வேளையில் நீங்கள் உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்கள் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

உதாரணமாக, உங்கள் முக்கிய விடயம் இப்படி இருக்கலாம்: நீங்கள் தொடர்ந்து இருந்து தேவனுடைய மக்களுக்கு உதவிசெய்வீர்களா? அல்லது நீங்கள் அவர்களைவிட்டுப் பிரிந்து போய் உங்களுக்காக வாழ்வீர்களா? இயேசு ஒருபோதும் அவருடைய மக்களை விட்டுப் போகிறவரல்லவே.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

⊕ முக்கிய விடயம்

உங்கள் தாளின் மேற்பகுதியில் முக்கிய விடயத்தை எழுதவும். இது உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் திட்டமிடுவதற்கு உதவியாயிருக்கும்.

அது இவ்வாறிருக்கலாம்: நீங்கள் தொடர்ந்து இருந்து தேவனுடைய மக்களுக்கு உதவி செய்வீர்களா? அல்லது நீங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து போய் உங்களுக்காக வாழ்வீர்களா? இயேசு ஒருபோதும் அவருடைய மக்களைவிட்டுப் போவதில்லை.

உப விடயங்கள்

உங்கள் பேச்சில் அல்லது பிரசங்கத்தில் இந்த வேதப்குதியை எப்படி பிரிக்கப்போகிறீர்களென்று சிந்திக்கவும்.

- எத்தனை உப விடயங்கள் உங்களுக்கிருக்கும்?

இந்த வேத வசனங்களில் அநேக மக்களைக்குறித்து எழுதப்பட்டிருக்கின்றது. அவர்கள் எல்லோரையும் குறித்துப் பேசினால் உங்கள் பேச்சைக்கேட்பவர்கள் குழப்பமடைந்துவிடக்கூடும்.

எனவே நீங்கள் மூன்று பேரை தெரிவு செய்து, அவர்களைக் குறித்துப் பேசலாம்.

குறிப்பிடப்பட்ட மக்கள் குழவினரைக் குறித்து நீங்கள் சிந்திக்க முடியும்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

உதாரணமாக:

பவுலை விட்டுப் பிரிந்துபோன நண்பர்கள்

- தேமா ~ தன்னுடைய விருப்பங்களை தேவனைவிட முக்கியமாக எண்ணினார்.
- கிரெஸ்கே, தீத்து, தீருக்கு ~ மற்ற சபைகளுக்கு உதவியாயிருப்பதற்குச் சென்றுவிட்டார்கள்.

பவுலுக்கு உதவி செய்த நண்பர்கள்

- லூக்கா ~ அநேக வருடங்கள் பவுலுடன் இருந்தார்.
- மாற்கு ~ அநேகமுறை பவுலுக்கு உதவிசெய்தார்.

இயேசு பவுலுடன் இருந்தார்

- அலெக்சாந்தர் சபையைத் துன்புறுத்தி, அநேக கெடுதிகளை சபைக்குச் செய்தான்.
- பவுலுக்கு உதவி தேவையாயிருந்த வேளையில், அவரை விட்டு அநேகர் போய் விட்டார்கள்.
- இயேசு பவுலுடன் இருந்தார். அவர் இன்று அவருடைய மக்களுடன் இருக்கிறார்.

ஒவ்வொரு உப விடயத்திற்கும் ஒரு தலைப்பைக்குறித்துச் சிந்திக்கவும். நீங்கள் பவுலின் நண்பர்களைக்குறித்து மட்டும் கதைக்காமல், அதை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கும் உபயோகிக்கலாம்.

உதாரணமாக:

1. பிரிந்துபோகும் நண்பர்களால் ஏற்படும் மனவேதனை.
2. ஒன்றாக இணைந்து வேலைசெய்யும் நண்பர்களால் வரும் ஆசீர்வாதம்
3. இயேசுவால் மட்டுமே நமக்குச் செய்யக்கூடிய உதவி

உங்கள் உப விடயங்கள் உங்கள் முக்கிய விடயத்தை விளக்குகின்றனவா என்பதைப் பார்க்கவும்.

 # உதாரணத்துடன் விளக்குதல்
பவுல் இந்த மக்களை நன்கு அறிந்திருந்தார். உங்கள் மக்கள் புரிந்துகொள்வதற்கு, அவர்கள் நன்கு அறிந்த மக்களை குறித்து கதைப்பது நல்லது.

- சபைக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்து, இப்போது சபையைவிட்டு போய்விட்ட ஒருவரைக்குறித்து சிந்திக்கவும். ஒருவேளை அவர் வேறு இடத்திற்குப் போயிருக்கலாம். அல்லது மரித்துப்போயிருக்கலாம்.
- தேமாவைப்போல சபையில் முன்பு இருந்து, தற்போது சபையைவிட்டு விலகிப் போய் தேவனைவிட்டுத் தூரமாயிருக்கும் ஒருவரைக்குறித்துச் சிந்திக்கவும்.
- சபையில் கடுமையாக உழைக்கக்கூடியவரும் எல்லோருக்கும் உதவி செய்யக்கூடியவருமான ஒருவரைக்குறித்து சிந்திக்கவும். நீங்கள் அவர் பெயரைக் குறிப்பிட்டுக் கூறுவதானால், அவர் ஒரு முதிர்ந்த விசுவாசியாயிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

திட்டமிடுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

① **பிரயோகித்தல்**

- உங்கள் பேச்சைக் கேட்பவர்களில், அவர்கள் சபையைவிட்டுப் பிரிந்து போவதற்கு அவர்களை மயக்குவது என்ன? அவர்களை எப்படி ஊக்குவித்து சவால்விட முடியும் என்பதைக் குறித்து சிந்திக்கவும்.
- உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் இயேசுவைப் பின்பற்றி நடப்பதற்கு அவர்களில் ஒருவருக்கொருவர் ஒவ்வொரு நாளும் செய்யக்கூடிய உதவி என்ன?
- மக்கள் நம்மை கைவிடும் போது நாம் என்ன செய்யலாம்? (வச.16-18).
- இயேசு அவருடைய மக்களை ஒருபோதும் கைவிடுவதோ, அவர்களைவிட்டு விலகிப்போவதோ இல்லை (வச.17-22. எபிரேயர் 13:5-8 ஐயும் பார்க்கவும்) என்று கூறி உங்கள் பேச்சைக் கேட்பவர்களை தைரியப்படுத்தவும்.
- அவர்கள் அறிந்த பிழையான போதகர்களைக் குறித்து சபைகள் மற்ற சபைகளை எச்சரிக்க வேண்டும்.

⑪ **மறுபரிசீலனை செய்தல்**

நீங்கள் போதிப்பதற்கு முன்பதாக நீங்கள் தயார் செய்ததை சரிபார்க்கவும்:

- முக்கிய விடயம் தெளிவாக இருக்கின்றதா?
- குறிப்பிட்ட பகுதியில் வேதாகமம் கற்பிப்பதை நீங்கள், அவர்களுக்கு காட்டுகின்றீர்களா?
- நீங்கள் கூறுவதை மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில், உங்கள் பேச்சில் தெளிவானதொரு ஓட்டம் காணப்படுகின்றதா?

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

ஆரம்பிக்கவும்

இந்த வசனங்களில் பதினேழு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முழு நிருபமும் உண்மைத்துவமாயிருப்பதைக் குறித்து கூறுவதாயிருக்கின்றது. இந்த வசனங்கள் நமக்கு அநேக மக்களை அறிமுகப்படுத்துகின்றன. சிலர் விசுவாசமானவர்களாயிருக்கிறார்கள் . சிலர் அப்படியில்லாமலிருக்கிறார்கள். நீங்கள் இந்த மக்களில் எவர்களைப் போலிருக்கிறீர்கள்?

விளக்கவும்

வசனங்கள் கூறுவதென்ன என்பதை உங்கள் உப விடயங்களை உபயோகித்து விளக்கவும்.

1. பிரிந்துபோகும் நண்பர்களால் ஏற்படும் மனவேதனை (வச. 9,16)

பவுல் சிறையில் தனிமையாக இருப்பதை உணர்ந்தார். அவருடைய நண்பர்கள் அவருடன் இல்லாமலிருப்பது அவருக்குக் கஷ்டமாயிருந்தது. மற்ற இடங்களில் நல்ல ஊழியம் செய்வதற்காக சிலர் பிரிந்து போனார்கள் (கிரெஸ்கே, தீத்து, தீகுக்கு). ஒருவர் சுகவீனமாயிருந்தார் (துரோப்பீமு). ஓநேசிப்போரு மரித்துவிட்டதாகத் தோன்றுகின்றது.

யாருடைய பிரிவு உங்களுக்குக் கவலையை ஏற்படுத்துகிறது? (திட்டமிடல் பகுதியில் ~ 'உதாரணத்துடன் விளக்குதல்' தலைப்பின் கீழ் உள்ளவற்றைப் பார்க்கவும்.) நாம் துக்கமாயிருக்கும்போது நேர்மையாயிருப்பது நல்லது. மரித்துப்போன விசுவாசிகள் இயேசுவோடு இருக்கிறார்களென்பதை அறிவது நல்லது.

பவுலின் மற்ற நண்பர்கள் அவரை விட்டு ஓடிப்போய்விட்டார்கள் (வச.9-16). தேமா தேவனைவிட தன் சொந்த விருப்பங்களுக்கு முதலிடம் கொடுத்தான். அவன் அவனுடைய உலகத்தின்மேல் அன்புசெலுத்தி அதற்காக வாழ்ந்தான். இனிவரும் உலகத்தைக் குறித்து சிந்திக்க அவன் மறந்துவிட்டான். இயேசுவைப் பின்பற்றுவதை மக்கள் நிறுத்துவது மிகவும் துக்கத்தை ஏற்படுத்தும்.

நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதை நிறுத்தியிருக்கிறீர்களா? நீங்கள் தேவனையும் அவர் மக்களையும் விட உலகத்தை நேசிக்கிறீர்களா? நீங்கள் தேவனிடம் திரும்ப வர வேண்டுமா?

தேவனிடம் மீண்டும வர வேண்டுமென்று நீங்கள் யாருக்காக ஜெபிக்க வேண்டியிருக்கிறது? உங்களுடன் முன்பு வேலை செய்தவர்களில் யார் இப்போது உங்களைவிட்டுப் பிரிந்து போயிருக்கிறார்கள்?

2. ஒன்றாக இணைந்து வேலை செய்யும் நண்பர்களால் வரும் ஆசீர்வாதம் (வச. 9,11)

பவுல் தனிமையாக ஊழியம் செய்யவில்லை. அவருக்கு ஒரு குழு இருந்தது. நாம் குழுக்களாக ஊழியம் செய்வது மிகவும் முக்கியம். அது நமக்கும், மற்றவர்களுக்கும் நன்மையாயிருக்கும். லூக்கா ஒரு விசுவாசமான நண்பன் (வச. 11). பவுலுடன் எங்கெல்லாம் பிரயாணம்

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:9-22

செய்தாரென்பதையும் அது எவ்வளவு ஆபத்தானதென்பதையும் அப்போஸ்தலர் நடபடிகைகளில் லூக்கா கூறுகிறார். பவுலின் வாழ்க்கை முடிவுக்கு வந்து கொண்டிருக்கும் நேரத்திலும் லூக்கா அவருடன் இருக்கிறார். அந்தக் குழுவில் இருந்தவர்களில் தீமோத்தேயு இன்னொருவராவார் (வச. 9).

தேவனுக்கு சேவைசெய்வது மாற்குவுக்கு முதலில் கடினமாகத் தோன்றினது. ஆனால் பின்பு அவர் மிகவும் பிரயோஜனமானவராய் மாறினார். (வச. 11, அப் 15:36-41). நமது தோல்விக்குப்பின் மீண்டும் நாம் தேவனிடம் திரும்பினால் அவரால் நம்மை பிரயோஜமானவர்களாக மாற்ற முடியும்.

தேவனுடைய ஊழியம் ஒரு குழுவின் ஒரு பகுதியாக செய்யப்பட வேண்டும். நீங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து ஊழியம் செய்கிறீர்களா, அல்லது தனியாக அதைச் செய்கிறீர்களா? உங்கள் ஊழியத்தில் உங்களுக்கு உதவி செய்ய யாரை நீங்கள் அழைக்கமுடியும்? உங்களுடன் இணைந்து ஊழியம் செய்ய உங்களுக்கு ஒருவர் இல்லாவிட்டால், ஜெபித்து ஒருவரைத் தெரிந்தெடுக்கவும்.

3. இயேசுவால் மட்டுமே நமக்குச் செய்யக் கூடிய உதவி (வச. 17,18)

அலெக்சாந்தர், பவுலுக்கு அவருடைய செய்தியை எதிர்ப்பதின் மூலம் அதிக கஷ்டத்தையும், தீங்கையும் விளைவித்தான்.

சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததின் நிமித்தமாக அவருக்குப் பிரச்சினை ஏற்பட்ட நேரத்தை பவுல் நினைவுகூருகிறார். எல்லோரும் அவரைவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் இயேசு அவருடனிருந்தார். தேவன் எப்போதுமே பிரச்சினையை நீக்கிவிடுவார் என்று சொல்லமுடியாது. தேவன் எப்போதுமே நாம் விரும்பும் விதமாக விசுவாசிகளை விடுவிப்பதில்லை. ஆனால் பிரச்சினைகள் மத்தியில் விசுவாசமாயும், திடமாகவும் நிற்க அவருடைய மக்களுக்கு அவர் சக்தியைக் கொடுப்பார்.

அவர் “சிங்கத்தின் வாயிலிருந்து” காப்பாற்றப்பட்டதாக. அல்லது “மரண தண்டனையிலிருந்து” காப்பாற்றப்பட்டதாக பவுல் கூறுகிறார். அவர் ஆபத்தைக் குறித்துக் கதைக்கிறாரேயன்றி, உண்மையான சிங்கத்தைக் குறித்தல்ல. தானியேல் உண்மையிலேயே சிங்கங்களிடமிருந்து காப்பாற்றப்பட்டார். (தானியேல் 6) தேவன் அவரோடிருந்தார்.

பவுல் தன் நிருபத்தை முடிக்கும் முன் தீமோத்தேயுவுக்காக ஜெபிக்கிறார். “கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உன் ஆவியுடனே கூட இருப்பாராக” என்று அவர் கூறுகிறார். இது ஓர் அற்புதமான ஊக்குவித்தலாகும். நாம் விசுவாசிகளாயிருந்தால் நாம் ஒருபோதும் தனியாக இருப்பதில்லை. ஏனைய மக்கள் நம்மைக் கைவிடலாம். ஆனால் இயேசு ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். மற்ற மக்கள் நமக்கு விசுவாசமில்லாதவர்களாயிருக்கலாம்.

➡ கற்பியுங்கள்: 2 தீமோத்தேயு 4:9–22

ஆனால் இயேசு அப்படியல்ல. "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிட்டுவதுமில்லை" என்று இயேசு வாக்களித்திருக்கிறார். (எபிரேயர் 13:5).

ⓘ பிரயோகிக்கவும்

உங்கள் பேச்சைக் கேட்பவர்களிடம் கேளுங்கள்: இந்த மனிதர்களில் நீங்கள் யாரைப் போலிருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு விசுவாசமான நண்பரா?

நீங்கள் இயேசுவை பின்பற்றுவதை நிறுத்திவிட்டீர்களா? இன்றே அவரிடம் திரும்புங்கள். அவர் உங்களை மன்னிப்பார்.

நீங்கள் தனியாக ஒரு கஷ்டமான நிலையில் இருக்கிறீர்களா? இயேசு உங்களுடன் இருக்கிறார். அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய மற்றவர்களுடன் சேர்ந்து கடினமாக உழைக்கிறீர்களா?

நீங்கள் உண்மையிலேயே இயேசுவை ஒருபோதும் பின் பற்றவில்லையா? அப்படியானால் இன்றே அவரிடம் வாருங்கள். நீங்கள் செய்த பிழையான காரியங்களுக்காக உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து மன்னிப்புக் கேளுங்கள். உங்கள் வாழ்க்கையின் பிழையான திசையிலிருந்து திரும்புங்கள். இயேசு சிலுவையில் மரித்ததால், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படமுடியும். என்பதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். தேவனுக்கு எல்லாவற்றிலும் முதலிடம் கொடுத்து அவருக்காக மட்டுமே உங்கள் வாழ்க்கையை வாழ உங்களுக்கு உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

ⓘ நிறைவு செய்யவும்

உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் உங்கள் செய்தியை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு சிறிது நேரம் கொடுக்கவும். நீங்கள் சற்றுநேரம் ஜெபிக்கலாம். அவர்கள் கேட்டவற்றிற்காக அவர்கள் ஜெபிக்கலாம். நீங்கள் 'பிரயோகிக்கவும்' பகுதியிலுள்ள சில கேள்விகளை மீண்டும் அவர்களுக்கு வாசிக்கலாம். இது அவர்கள் அவைகளுக்காக ஜெபிக்க உதவியாயிருக்கும்.

நீங்கள் உண்மையாகவும், விசுவாசமாகவும் இயேசுவைப் பின்பற்றினால், கர்த்தர் எப்போதும் உங்களுடனிருப்பார். அவர் ஒருபோதும் உங்களை விட்டுப் போகமாட்டார்.

ⓘ ஜெபிக்கவும்

உண்மையான கிறிஸ்தவர்களல்லாதவர்களாக, உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு அவர்கள் இன்றுமுதல் இயேசுவைப் பின்பற்றத் தொடங்க தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

2 தீமோத்தேயுவிலிருந்து கேட்டவைகளின் நிமித்தம் உங்களுக்கும், உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கும் இன்னும் அதிக உண்மையுடனும் விசுவாசமாகவும் இயேசுவைப்பின்பற்ற தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிக்கவும்.

2 தீமோத்தேயுவை வாழ்வில் கொணர்தல்

நீங்கள் 2 தீமோத்தேயுவைப் போதித்து முடித்து விட்டீர்கள். அங்கே 13 செய்திகள் இருக்கின்றன. நீங்கள் ஒரு வாரத்தில் ஒரு செய்தியைப் பிரசங்கித்திருந்தால் நீங்கள் மூன்று மாதங்கள், அல்லது அதற்கு மேலான காலத்தை செலவழித்திருப்பீர்கள்.

முழு நிருபத்தையும் மீண்டும் பார்ப்பது நல்லது. முக்கியமான பாடங்களை உங்கள் மக்களுக்கு நினைவூட்டுவதற்காக நீங்கள் இன்னுமொரு பிரசங்கத்தைச் செய்யலாம். அவர்கள் என்ன கற்றுகொண்டார்கள் என்று நீங்கள் அவர்களிடம் கேட்கலாம்.

தேவன் அவர்களுடன் 2 தீமோத்தேயு மூலம் பேசியிருக்கின்ற படியால், அவர்கள் வாழ்க்கையிலும், சபையிலும் எது மாறவேண்டுமென்பதைக் குறித்து நீங்கள் அவர்களிடம் கதைக்கலாம்.

முழு நிருபத்தையும் வாசிக்கவும்:

- இந்த நிருபத்தில் நீங்கள் கண்ட முக்கிய விடயங்கள் என்ன?
- எபேசு சபையில் தீமோத்தேயு என்ன செய்யவேண்டுமென்று பவுல் விரும்புகிறார்?
- நீங்கள் உங்கள் சபையில் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?

2 தீமோத்தேயுவானது நிலைமைகள் கஷ்டமாயிருக்கும் போதும் தொடர்ந்து முன்னேற வேண்டுமென்று நம்மை ஊக்குவிக்கும் ஒரு நிருபமாகும். அது நமக்கு சரியான வழியையும், எப்படி நாம் விசுவாசமான விதத்தில் தெடர்ந்து செல்லுவது என்பதையும் நமக்குக் காட்டுகிறது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் எப்படி உதவி செய்வதென்பதை அது நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது.

“2 தீமோத்தேயு புத்தகத்தைப் பற்றி” என்னும் பகுதியில் 2 தீமோத்தேயுவின் இந்தக் குறிப்புகளுடன் நாம் தொடங்கினோம்.

1:1~7: அறிமுகம்: தேவன் அவருடைய வார்த்தையை போதிப்பதற்கு உங்களை அழைத்திருக்கிறார்.

1:8~18: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையைக் காத்துக்கொள்ளுதல்.

2:1~26: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொடுத்தல்.

3:1~17: துன்பம் அனுபவிக்கவேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையின் படி வாழுதல்.

➡ சுருக்கம்: 2 தீமோத்தேயு

4:1~22: துன்பம் அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தல்.

2 தீமோத்தேயுவைக் குறித்ததொரு பேச்சிலோ அல்லது இறுதி பிரசங்கத்திலோ நீங்கள் இந்தத் தலைப்புக்களை உப விடயங்களாகவும் பாவிக்கலாம்.

ஒவ்வொரு பகுதியிலும் முக்கிய விடயத்தை உங்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு நினைவுப்படுத்தும் ஒரு வசனத்தைக் கண்டுப்பிடிக்கவும். உதாரணமாக:

தேவனுடைய வார்த்தையைக் காத்துக்கொள்ளவும், அதை வைத்துக்கொள்ளவும் வேண்டும் ~ 1:13

தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொடுத்து அதை மற்றவர்களுக்கு கையளிக்க வேண்டும் ~ 2:2

தேவனுடைய வார்த்தையின் படி வாழ்ந்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும் ~ 3:14

தேவனுடைய வார்த்தையைப் போதித்து மற்றவர்களுக்குக் கூற வேண்டும் ~ 4:2

பவுல் துன்பம் அனுபவிப்பதைக் குறித்து அதிகமாகக் கூறுகிறார். ஒவ்வொரு பகுதியிலுமிருந்து பவுல் துன்பம் அனுபவித்தலைக்குறித்துக் கூறும் ஒரு வசனத்தை தெரிந்தெடுக்கவும். உதாரணமாக: 1:8, 2:9, 3:12, 4:5

பவுல் துன்பம் அனுபவித்தலைக் குறித்து அவ்வளவு அதிகமாக பேசுவதின் காரணமென்ன? ஏன் பவுலும், தீமோத்தேயுவும், எபேசிய சபையும் துன்பம் அனுபவிக்கின்றார்கள்?

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு உங்களுக்கு நல்ல உதவியாயிருக்கும். அதை நீங்கள் உங்கள் பிரசங்க சுருக்கமாகவும் உபயோகிக்கலாம்.

அறிமுகம் (1:1-7)

பவுல் அவருடைய விசுவாசத்தின் நிமித்தம் ரோமாபுரியில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார். அவர் எந்த வேளையிலும் கொல்லப் படலாம். தீமோத்தேயுவுக்கு எபேசு சபையில் சரிப்படுத்த வேண்டி சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதை விட்டு விடாமல் தொடர்ந்து செல்ல அவரை ஊக்குவிப்பதற்காக பவுல் இதை எழுதுகிறார். அவர்கள் இருவரும் தேவனுக்குச் சேவை செய்ய அவரால் அழைக்கப்பட்டிருப்பதை பவுல் முதலில் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்துகிறார் (1:1, 1:6)

தேவனுக்குசேவை செய்வது கடினம். ஆனால் தேவன் தீமோத்தேயுவை அழைத்திருப்பதினால் அவர் உதவி செய்வார் (1:7)

தீமோத்தேயுவுக்கு தேவன் போதிக்கும் வரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய சத்தியத்தைப் போதிப்பதற்காக அவர் அழைக்கப்பட்டிருக்கிறார். முழு நிருபமும் தேவனுடைய சத்தியத்திற்கு உண்மையாய் இருப்பதைக் குறித்ததாயிருக்கிறது.

➡ சுருக்கம்: 2 தீமோத்தேயு

2 தீமோத்தேயுவில் ஒரு உண்மையும், விசுவாசமுமான சபை அல்லது போதகர் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்கிறோம்.

வேதாகமத்தின் உண்மைகளில் நிலைத்திருப்பது.

வேதாகமத்தைக் கற்க மக்களுக்கு உதவி செய்வது.

வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் ஜீவிப்பது.

வேதாகமத்தின் முழுச் செய்தியையும் போதிப்பது.

இவைகள் யாவும் உங்கள் வாழ்க்கையிலும், உங்கள் சபையிலும் காணப்படுகின்றதா?

துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தாலும் தேவனுடைய வார்த்தையைக் காத்துக்கொள்ளுதல் (1:8-18)

"என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" என்று 2 தீமோத்தேயு 1:13 கூறுகிறது. "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்று 14ம் வசனம் கூறுகிறது.

தேவனுடைய மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் செய்தியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பிருக்கிறது. வேதாகமம் கூறுவதை சரியாக கற்றுக்கொடுப்பதின் மூலமாகவே நாம் அதைப் பாதுகாக்க முடியும். அதை நாம் பிழையாகப் போதிக்கும் போது அதை நாம் இழந்து போகிறோம். அல்லது அதை கெடுத்துவிடுகிறோம்.

ஒருவர் உங்களிடம் பாதுகாப்பாக வைத்திருக்க சில விதைகளைக் கொடுத்து, நீங்கள் அதை வெட்டிவிடுவீர்களானால் அவை வளராது. அதேபோல் நீங்கள் தேவனுடைய செய்தியை மாற்றினால் அது அதன் வேலையைச் செய்யாது.

இது மிகவும் முக்கியம். நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி அவசியம் (வச.14).

எப்போதுமே தேவனுடைய செய்திக்கு விரோதமான மக்கள் எங்குமிருப்பார்கள். அவர்களுக்கு இயேசுவைக் குறித்து கேட்பதற்கு விருப்பமில்லை. அவர்கள் மதம் பிழையென்று அவர்களுக்குச் சொல்லப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை.

இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கதைப்பதினால் அநேக கிறிஸ்தவர்கள் தாக்கப்படுகிறார்கள். போதகர்களை சிறையில் போடுகிறார்கள். சபைக்கட்டிடங்களை எரிக்கிறார்கள். ஆகையால் நாம் தாக்கப்படாமல் இருப்பதற்காக இயேசுவைக்குறித்துக் கதைப்பதை நிறுத்தவோ அல்லது செய்தியை மாற்றிப் பிரசங்கிக்கவோ நாம் முயற்சிக்கக் கூடும். தீமோத்தேயு 1:8ல் பவுல், இயேசுவைக் குறித்து மக்களுக்கு கூற வெட்கப்பட வேண்டாமென்று கூறுகிறார்.

➡ சுருக்கம்: 2 தீமோத்தேயு

இயேசுவைக்குறித்த உண்மையான செய்தியே உலகில் மிகப் பெரிய செய்தியாகும். வாழ்க்கையை மாற்றும் செய்தி அதுவேயாகும். அது இயேசு எப்படி மரணத்தை ஜெயித்தார் என்று கூறும் செய்தியாகும். அது இலவசமாக நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காக இயேசு எப்படி மரித்து பின் உயிர்த்தெழுந்தார் என்பதைக் கூறும் செய்தியாகும். (வச. 10)

நாம் நம்பக்கூடிய மிகவும் பெரிய மனிதராகிய இயேசுவைப் பற்றிக் கூறுவதால் அது மிகவும் பெரிய செய்தியாகும். (வச.12)

நாம் விசுவாசமானவர்களாய் இருப்பதற்கு தேவனுடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய செய்தியை மாற்றக்கூடாது.

துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தாலும் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொடுத்தல். (2:1-26)

தீமோத்தேயு 2:2ல் பவுல் இப்படிக்கூறுகிறார். “நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி”.

தீமோத்தேயுஇ சபையில் மற்றவர்களுக்கு போதிக்கக்கூடிய நல்ல மக்களை தெரிவுசெய்ய வேண்டும். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் வெறும் அரைமணி நேரமல்ல. இந்த மக்கள் செய்தியை நன்றாகப் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் வேறு மக்களை கண்டு பிடிக்க வேண்டும். அப்படியாக தேவனுடைய செய்தி ஒருவரிலிருந்தொருவருக்குக் கடந்து செல்ல வேண்டும்.

வேதாகமத்தைப் படிப்பதும், கற்பிப்பதும் மிகவும் கஷ்டமானதொரு வேலை. பவுல் மூன்று உதாரணங்களை உபயோகிக்கிறார் (2:4-6). ஒவ்வொரு உதராணத்திலும் ஏதோவொரு கஷ்டமான காரியம் இருக்கிறது. ஒரு போர் சேவகன் கஷ்டமாய் இருந்தாலும் அவனுக்குச் சொல்லப்பட்டதை செய்ய வேண்டும். மல்யுத்தம் பண்ணும் ஒருவன் தன் உடல் நோவைப் பொருட்படுத்தாமல் சட்டத்துக்கமைய மல்யுத்தம் பண்ண வேண்டும். கால நிலையைப் பார்க்காமல் ஒரு விவசாயி இரவு பகலாய் உழைக்க வேண்டும். வேதாகமத்தைப் போதிப்பதற்கு மற்றவர்களுக்குப் பயிற்சியளிக்க தீமோத்தேயு கடுமையாக உழைக்க வேண்டும் (2:2-7).

ஒரு சபைக்கு அநேக வேதாகம ஆசிரியர்கள் தேவை. சிலர் முழுச் சபைக்கும் கற்பிப்பார்கள். வேறு சிலர் சிறு பிள்ளைகள் அல்லது சிறு குழுக்களுக்கு கற்றுக்கொடுப்பார்கள். சிலர் மற்ற நகரங்களுக்கு அல்லது நாடுகளுக்கு சுவிசேஷப் பணியாளர்களாக அனுப்பப்படுவார்கள். வேதாகமத்தைப் படிப்பிப்பதற்கு கடினமான உழைப்பும் பயிற்சியும் தேவை. அது இலகுவான வேலையல்ல. அதை எல்லோராலும் செய்ய முடியாது.

➡ சுருக்கம்: 2 தீமோத்தேயு

ஒரு வேதாகம ஆசிரியர் வேதாகமத்தைப் படிப்பதற்கு அதிகமாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் பிழையான போதனைகளுக்கு செவிக்கொடுக்காமல் வேதாகம சத்தியங்களை சரியாகப் புரிந்துகொள்ள கவனமாக அதைப் படிக்க வேண்டும் (2:13-16).

தேவனுக்கு பிரயோஜனமான போதகர் அல்லது வேதாகம ஆசிரியர் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழவேண்டும். அவர் இயேசு சொல்வதை செய்வதுடன், இயேசு சொல்வதையே படிப்பிக்க வேண்டும். அவர் கவனமாகவும், கனிவுடனும் கற்றுக்கொடுக்க வேண்டும் (2:22-26).

துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தாலும் தேவனுடைய வார்த்தையின் படி வாழுதல் (3:1-17)

"நீ கற்று நிச்சயத்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" என்று 3:14 சொல்லுகிறது. தீய மனிதர்கள் தீய வாழ்க்கை வாழ்வார்கள். ஆனால் தீமோத்தேயு அவர் கற்றுக்கொண்ட சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். விசுவாசிகள் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும் (3:12-14).

அநேகர் சுயநலமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்கள் பணத்திற்காகவும், பொருட்களுக்காகவும், தங்களுக்காகவும் வாழ்கிறார்கள். அவர்கள் இரக்கமற்றவர்களும்,பரிசுத்த மற்றவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவன் மேல் அன்பில்லை. அவர்களுக்கு தங்கள் குடும்பங்களின் மேல் அன்பில்லை. அவர்களுக்குத் தங்கள் அயலாரிடம் அன்பில்லை. அவர்கள் இன்பங்களுக்காக வாழ்பவர்கள். அவர்கள் தேவன் மேல் அன்பு செலுத்துவதாகக் கூறினாலும், அவர்கள் வாழ்க்கை அது பொய் என்று காட்டுகின்றது. (3:1-5).

நமக்கு போதிய அளவு விசுவாசம் இருக்குமானால் நாம் கஷ்டப்பட மாட்டோம் என்றும், நாம் பணக்காரர்களாய் இருப்போமென்றும் சில தவறான போதகர்கள் கூறுகிறார்கள். அவர்கள் சொல்வது தவறாகும். நாம் தேவனுடைய வழிகளில் நடந்தால் பாடனுபவிப்போம் என்றே வேதாகமம் கூறுகிறது (3:12).

தேவனுக்காக வாழ்வது என்பது மற்றவர்களுக்காக வாழ்வதாகும். அது நமக்காகவோ, அல்லது பணத்திற்காகவோ வாழ்வது அல்ல. தேவனுடைய வசனம் நாம் எப்படி வாழவேண்டுமென்று நமக்குப் போதிக்கின்றது. அது நமக்கு எது சரி, எது தவறு, சரியான வழியில் போவது எப்படி, தவறான வழியிலிருந்து சரியான வழிக்குத் திரும்புவது எப்படி என்பவற்றைக்காட்டுகிறது. (3:16)

தேவனுடைய மக்கள் முழு வேதாகமத்தையும் போதிக்கவேண்டும். தேவனுடைய மக்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் யாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும்.

நீங்கள் உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் நீங்கள் உங்கள் பிள்ளைகளை நேசிக்கிறீர்கள் என்று கூறி, அவர்களிடம் கடினமாய் நடந்து கொண்டால் அவர்கள் உங்களை நம்ப மாட்டார்கள். நீங்கள் தேவன்மேல் அன்பு செலுத்துகிறீர்கள் என்று கூறினாலும், சுயநலமாகவும், இரக்கமில்லாமலும் நடந்து கொண்டால் நீங்கள் ஒரு “பொய்யன்” என்று வேதாகமம் கூறுகிறது (1 யோவான் 4:20).

சில வேளைகளில் சரியானதை செய்வது கடினமானது. ஆனால் உண்மையில் தேவன்மேல் அன்பு செலுத்துகிறவர்களாயிருந்தால், நாம் எப்போதும் சரியானதையே செய்ய விரும்புவோம்.

துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தாலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தல். (4:1-22)

“திருவசனத்தை பிரசங்கம் பண்ணு” என்று 4:2 கூறுகிறது.

தேவனுடைய வார்த்தையே மிக முக்கியமான செய்தியாகும். மக்கள் செய்தியைக் கேட்காமலும், அதை விசுவாசிக்காமலும் இருந்தால் அவர்கள் கிறிஸ்தவர்களாக மாற முடியாது. செய்தியைக் கேட்காமலும், அதை விசுவாசிக்காமலும், இருந்தால் கிறிஸ்தவர்களால் இயேசுவைப் போல மாற முடியாது.

நாம் சபை ஆராதனைகளில் இருக்கும்போது இயேசுவும் அங்கேயிருக்கிறார். அவருடைய வார்த்தை போதிக்கப்படும்போது அவர் அதைக் கேட்கிறார். அவருடைய வார்த்தைகள் அரைகுறையாகப் போதிக்கப்படும்போது அவர் மிகவும் துக்கப்படுவார். நியாயத்தீர்ப்பின் நாளிலே அப்படியான போதகர்களை அவர் கடிந்து கொள்வார் (4:1).

சில மக்கள் பிரசங்கங்களைக் கேட்க விரும்புவதில்லை. பாவத்தைக் குறித்த செய்தி, சிலுவையைக் குறித்த செய்தி, நரகத்தைக்குறித்த செய்தி முதலியவற்றை அவர்கள் கேட்க விரும்புவதில்லை. அவர்களால் தங்களை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதைக் கேட்க அவர்களுக்கு விருப்பமில்லை. அவர்களுக்கு மனந்திரும்ப விருப்பமில்லை. அவர்களுக்கு இயேசுவுக்காக பாடனுபவிக்க விருப்பமில்லை. அவர்கள் செய்வது தவறென்று எச்சரிக்கும் செய்திகளை கேட்க அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் உண்மையான போதகர் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து கூறிக்கொண்டேயிருக்க வேண்டும் (4:2-5).

போதகர்களுக்கு இது மிகவும் கடினமானதொரு காரியமாயிருக்கும். அது ஒரு வெகு தூர ஓட்டப்பந்தயத்தில் ஓடுவதைப்போலிருக்கும். அதிக

மைல்கள் ஒடும்போது உங்கள் உடம்பு வலிக்கும். அப்போது ஓட்டத்தை நிறுத்த வேண்டும் போலிருக்கும், ஆனால், நீங்கள் இன்னும் ஓட்டத்தின் முடிவுக்கு வரவில்லை. எனவே வெற்றி பெற வேண்டுமானால் நீங்கள் தொடர்ந்து ஓடவேண்டும். அதைப்போலவே போதகர்களும், பிரசங்கிப்பவர்களும் மக்கள் கேட்க விரும்பாவிட்டாலும் கூட தேவனுடைய வார்த்தையை சரியாக தொடர்ந்து பிரசங்கிக்க வேண்டும். மக்கள் அவர்களிடம் கூறுவதை விட இயேசு கூறுவது மிகவும் முக்கியம் என்பதை எப்போதும் அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதைத்தான் பவுல் செய்தார் (4:6-8).

உ. 2 தீமோத்தேயுவிலிருந்து பாடங்கள்

தேவனுடைய வார்த்தையிலிருந்து பாடங்களை நமது வாழ்க்கைக்குள் எடுப்பது மிகவும் முக்கியம். இதைக் குழுக்களாக கலந்தாலோசிக்கவும். அவைகளைக்குறித்து ஜெபிக்கவும். உங்கள் மக்களுக்கு இது உதவியாயிருக்கும். 2 தீமோத்தேயு நிருபத்தின் உங்கள் எல்லா பிரசங்கங்களையும் முடித்தபின் நீங்கள் கேள்விகளை உபயோகிக்கலாம். அல்லது நீங்கள் விரும்பினால் அவைகளை ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் உபயோகிக்கலாம். அவைகளை நீங்கள் ஒரு வார நடுவில் குழுக்கூட்டத்திலோ அல்லது ஒரு ஆண் குழு அல்லது பெண் குழு கூட்டத்திலோ உபயோகிக்கலாம்.

அதிகாரம் 1

வேதாகமத்தின் செய்தி இயேசுவைக் குறித்த செய்தியாகும் (1:8–12)

- இயேசு யார்?
- இயேசு என்ன செய்திருக்கிறார்?
- அவருக்கு நாம் எப்படி மாறுத்தரம் அளிப்பது?

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார் (1–14)

- வேதாகமத்தின் செய்தியில் எந்தப் பகுதியைக் குறித்து நீங்கள் வெளியே கூறாமல் அமைதியாயிருக்க விரும்புகிறீர்கள்?
- இயேசுவைக் குறித்த உண்மையைச் சொல்லுவதற்கு பரிசுத்த ஆவியானவரை நீங்கள் சார்ந்திருக்கிறீர்களா?

இயேசுவுக்காக துன்பமனுபவித்தல் (1:8)

- பவுல் இயேசுவைக் குறித்து பேசின படியால் சிறையிலிருந்தார். கிறிஸ்தவர்களாய் இருப்பதினால் அநேக கிறிஸ்தவர்கள் உலகெங்கும் இன்று துன்புறுத்தப்படுகிறார்கள். நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா? அவர்களுக்கு உங்களால் எப்படி உதவி செய்யமுடியும்? நீங்களும் துன்பம் அனுபவிக்க தயாரா?
- நீங்கள் இயேசுவை நேசிப்பதால் துன்பம் அனுபவிப்பீர்களானால், இயேசு உங்களோடிருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். மரணமே நேரிட்டாலும் கூட அவர் உங்களைப் பாதுகாத்துக்கொள்வார். அவர் உங்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். அவர் உண்மையுள்ளவர். (1:12).

அதிகாரம் 2

உலகெங்கும் மக்களுக்கு அதிகமான வேதாகம ஆசிரியர்கள் தேவை (2:2)

- மற்றவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்காக பயிற்சியளிக்கப்பட்ட மக்கள் உங்கள் சபையில் இருக்கின்றார்களா? இது அதிகரிக்க ஜெபிக்கவும். உங்கள் சபையிலிருந்து இயேசுவைக் குறித்து கேள்விப்படாத மக்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல மக்களை தேவன் அனுப்ப வேண்டுமென்று ஜெபிக்கவும்.

வேதாகமத்தைப் போதிப்பது கடினமானவேலை (2:15)

- வேதாகமத்தைப் போதிப்பவர்கள் கடினமாக உழைக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். இதை உங்கள்

சபையிலுள்ள மக்களுக்கு எப்படி உபயோகிக்க முடியும்: ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்கள், வாலிபர் சங்கத் தலைவர்கள், பெண்கள் சங்கத் தலைவர்கள்.

கெட்ட வார்த்தைகளை உபயோகிப்பது தவறானதாகும் (2:14–16)

- பவுல் கூறும் பாவமான வார்த்தைகளின் உதாரணங்களைக் குறித்து சிந்திக்கவும் (சண்டை பிடித்தல், பிழையானதும், பாவமானதுமானவைகளைக் குறித்து கதைத்தல், வம்பு பேசுதல், பொய் சொல்லுதல்). நீங்கள் கெட்ட வார்த்தைகளை உபயோகிப்பதை நிறுத்த வேண்டியிருக்கிறதா?
- ஆபத்தான வார்த்தைகளின் வேறு உதாரணங்களைக்குறித்து சிந்திக்கவும். மாந்திரீகம், சூனியம், ஆணையிடுதல், வாதாடுதல் போன்றவை.
- தேவனுக்கு விருப்பமில்லாத எந்த வார்த்தைகளை உபயோகிப்பதை நீங்கள் நிறுத்தவேண்டியிருக்கிறது?

இயேசுவுக்கு பிரயோஜனமாய் இருப்பதற்கு நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழவேண்டும் (2:20–22)

- பரிசுத்தமற்றதும், பிழையானதுமான என்ன செயல்களை அல்லது சிந்தனைகளை விட்டு நீங்கள் மனந்திரும்பவேண்டும்?

நற்செய்தியை உண்மையாக புரிந்துகொள்வதற்கு தேவனால் மட்டுமே உதவி செய்ய முடியும் (2:25)

- தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கிறவர்களுக்காக நீங்கள் தினமும் ஜெபிக்கிறீர்களா?
- தேவனுடைய வார்த்தையை கேட்பவர்களுக்காக நீங்கள் தினமும் ஜெபிக்கிறீர்களா?

அதிகாரம் 3

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும். அது ஞானமுள்ளதும், நம்பக்கூடியதும், பிழையற்றதுமானது (3:16–17)

- வேதாகமத்தை வாசிப்பதில் அல்லது கேட்பதில் எப்படி நீங்கள் அதிக நேரம் செலவழிக்க முடியும்? அப்படிச் செய்வதிலிருந்து உங்களைத் தடைசெய்வது எது?

விசுவாசிகள் இயேசுவுக்காகப் பாடனுபவிப்பார்கள் (3:12)

- நீங்கள் பாடனுபவிக்க விரும்புகிறீர்களா? உங்கள் கிராமத்தில், அல்லது நகரத்தில் உள்ள மற்ற மக்களை விட நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதால் வித்தியாசமானவராய் இருக்கத் தயாரா?

விசுவாசிகள் தேவனுடைய வழியில் ஜீவிக்க வேண்டும் (3:10–12)

- வேதாகமம் தவறென்று கூறும் என்ன தவறான, பாவப் பழக்கங்கள் உங்கள் கிராமத்தில் அல்லது நகரத்தில் இருக்கின்றன. (3:1–5 வாசிக்கவும்)?
- உங்கள் தவறான வழிகளை விட்டுத் திரும்பி தேவனுடைய வழிக்கு வருவீர்களா?

அதிகாரம் 4

வார்த்தையை பிரசங்கி (4:2)

- நமது சபையிலும், கூட்டங்களிலும் முக்கியமானது தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதேயாகும்.

- தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவர்கள் எப்படி உங்களால் ஊக்குவிக்க முடியும்?
- தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவர்களை தேவன் அவர்கள் பேசவேண்டுமென்று விரும்புவதை மட்டுமே பேசவேண்டுமென்று ஜெபிக்கவும்.
- நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு கவனமாக செவி கொடுக்கிறீர்கள்?

ஒருநாள் இயேசு வருவார் (4:1, 4:5)

- இயேசு வல்லமையோடும், மகிமையோடும் வருவார். இயேசு உலகத்தை நியாயம் தீர்க்க வருவார். இதை அறிவது நீங்கள் வாழும் விதத்தில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?

கிறிஸ்தவர்கள் ஒருபோதும் தனியாக இருப்பதில்லை (4:17)

- நீங்கள் துன்பம் அனுபவிக்கும் ஒரு விசுவாசியாயிருந்தால், நீங்கள் தனிமையாய் இருப்பதைப்போல உணர்ந்தாலும், இயேசு உங்களோடு இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.
- இயேசு உங்களை பாதுகாப்பாக அவருடைய பரலோக ராஜ்யத்துக்குள் கொண்டுபோய்ச் சேர்ப்பார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (4:18)
- இந்த உண்மைகளின் மூலம் யாரை நீங்கள் தைரியப்படுத்த முடியும்?

அடுத்தது என்ன?

தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கவும், கற்றுக்கொடுக்கவும், இந்தப் புத்தகம் உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கிறதா? அப்படியானால் வேதாகமத்தின் எந்தப் பகுதியை போதிப்பதற்கும் நீங்கள் இதே மாதிரியை உபயோகிக்கலாம்.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், அது:

படியுங்கள்	ஜெபிக்கவும் → பின்னணி → வாசிக்கவும் → புரிந்துகொள்ளவும் → முக்கிய விடயத்தை கண்டுபிடிக்கவும்.
திட்டமிடுங்கள்	முக்கிய விடயம் → உபவிடயங்கள் → உதாரணத்துடன் விளக்குதல் → பிரயோகித்தல் → மறுபரிசீலனை செய்தல்.
கற்பியுங்கள்	தொடங்கவும் → விளக்கவும் → உதாரணத்துடன் விளக்கவும் → பிரயோகிக்கவும் → முடிக்கவும் → ஜெபிக்கவும்.

இப்புத்தகத்தின் ‘அ’ பகுதியை நீங்கள் உங்கள் அடுத்த செய்தியை தயாரிக்கும்போது திறந்து வைத்துக்கொள்ளுங்கள். இந்தப் படிகள் தேவனுடைய வசனத்தைப் போதிப்பதற்கு உங்களுக்கு உதவியாயிருப்பதை நீங்கள் காணலாம்.

2 தீமோத்தேயு 2:15 சொல்வதை நினைவில் வைத்துக்கொள்ளவும்:

‘நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாயப் பகுத்து போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு’

2 தீமோத்தேயு நிருபத்தைக் கற்பித்தல்

2 தீமோத்தேயு நூலிற்கான பேசும் வரைகோடுகள்

...உலகமெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது

ஜெபம் செய் - தயார் செய் - போதனை செய் என்பது உலகெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்கள் தேவனின் வார்த்தையைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளக்குவதற்கு அவர்களுக்கு உதவியாயிருப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதொரு வழிகாட்டித் தொடராகும். 2 தீமோத்தேயு 2:15 இப்படிக் கூறுகிறது 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.' '2 தீமோத்தேயு நிருபத்தைக் கற்பித்தல்' என்னும் இந்தப் புத்தகம் இதைச் செய்ய உங்களுக்கு உதவியாயிருக்கும்.

அது உங்களுக்கு இவைகளில் உதவிசெய்யும்

- தேவன் எப்படி துன்பத்தை அவருடைய மக்களின் நன்மைக்காக உபயோகிக்கின்றார் என்பதைப் **புரிந்துகொள்ளுதல்**.
- சாத்தானல்ல தேவனே எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்பதை **அறிந்து கொள்ளுதல்**.
- துன்பப்படும்போது மக்கள் தேவனை விசுவாசிக்க அவர்களுக்கு **உதவி செய்தல்**.
- உங்கள் மக்களுக்கு எப்படி ஒவ்வொரு சூழ்நிலையும் முக்கியம் என்பதைக் குறித்து **சிந்தித்தல்**.
- இந்த நிருபத்தின் முக்கிய விடயத்தைத் தெளிவாகக் **கற்பித்தல்**.



அண்மைக் காலமாக, வியாக்கியான பிரசங்கத்தின் அவசியம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றது, எனினும் ஆசியாவிலே இப்பிரசங்கமானது மிகக் குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த பாடநூல் தொடரானது ஊழியர்களினதும் மற்றும் அநேக பிரசங்கிகளின் வாழ்விலும் அவர்கள் விரைந்து இப்படிமுறையை ஆரம்பிக்க உதவி செய்யும். இன்றைய நாள் ஊழியர்களுக்கு வியாக்கியான பிரசங்கமானது செய்ய முடியாத மற்றும் நடைமுறைக்கொவ்வாத ஒன்றல்ல என்பதை இது காட்டுகிறது. வேதாகமப் பகுதிகளைத் திறந்து நடைமுறைக் காரியங்களில் பிரசங்கம் செய்வதற்கு, இத்தொடரானது புதிய சந்ததியின் ஊழியர்களை வேதவார்த்தையில் வளர்ப்பதற்கு உதவி செய்யும்.

அஜித் பெர்னான்டோ, கற்பித்தல் இயக்குனர், கிறிஸ்துவுக்காக வாலிபர், இலங்கை.

வேதாகமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அதன் வல்லமையையும், அதன் பொருத்தப்பாட்டையும் வெளிப்படுத்தும் பிரசங்கங்கள் உலகம் முழுவதிலும் இன்றைய மகத்தான தேவைகளிலொன்றாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையைப் போதிக்கத் தேவையான வளங்கள் இல்லாத போதகர்களுக்கும், ஏனைய ஊழியக்காரர்களுக்கும் இந்த PPP தொடர் பெரியதொரு உதவியாக அமையும்.

யோனத்தான் லாம், இயக்குநர், இலங்கம் பிரசங்கித்தல், சர்வதேச இலங்கம் பங்குதாரர்.

Rs. 200/-

Langham PARTNERSHIP

CTS Publishing
Colombo Theological Seminary

ISBN 978-955-3640-03-1

9 789553 640031